
லட்சுமி சுதாவின்
நேற்று
இல்லாத
மாற்றம்

# நேற்று இல்லாத மாற்றம்

லட்சுமி சுதா

அன்பு இல்லம்
கே.கே.பி. காம்ப்ளக்ஸ்,
எண். 107/2, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

## நூல் குறிப்பு

| | |
|---|---|
| • நூல் தலைப்பு | நேற்று இல்லாத மாற்றம் |
| • ஆசிரியர் | லட்சுமி சுதா |
| • மொழி | தமிழ் |
| • முதற் பதிப்பு | ஆகஸ்ட், 2011 |
| • உரிமை | ஆசிரியருக்கு |
| • தாளின் தன்மை | 11.6 K.g. வெள்ளைத் தாள் |
| • நூலின் அளவு | 1 × 8 கிரவுன் |
| • அச்சு எழுத்து | 11 புள்ளிகள் |
| • மொத்தப் பக்கங்கள் | 204 |
| • பைண்டிங் | சாதா அட்டை |

**விலை: ரூ. 80.00**

வெளியிடுவோர் **அன்பு இல்லம்**
கே.கே.பி. காம்ப்ளக்ஸ்,
எண். 107/2, கௌடியா மடம் சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.

னினி அச்சு மாதா பிரிண்டர்ஸ்,
சென்னை - 116. போன்: 9043558732

டோர்: கே.வி.எஸ். ஆப்செட், சென்னை - 14.



## என்னுரை

வணக்கம்!

என்னுடைய இந்த நாவலான 'நேற்று இல்லாத மாற்றம்' மூலம் உங்களை மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சி.

அவந்திகா - இந்தக் கதையின் நாயகி. ஒரு விளம்பர நிறுவனத்தில் விளம்பரங்களை வடிவமைக்கும் பொறுப்பில் உள்ள அவளின் வாழ்க்கையைச் சுற்றி நிறைய மர்மங்கள் உள்ளன என்று சந்தேகப்படுகிறான் நாயகன் சரண்.

அவந்திகாவின் தந்தை ஒரு ஆபத்தில் இருக்கிறார். அவரைக் காப்பாற்ற என்னென்ன முயற்சிகள் எடுக்கிறாள் அவந்திகா, அதற்கு சரண் ஏதேனும் உதவி செய்கிறானா என்பதே கதை.

சுவையான திருப்பங்கள் நிறைந்த இந்தக் கதை உங்களுக்குப் பிடிக்கும் என்று நம்புகிறேன். உங்கள் விமர்சனங்களை ஆவலுடன் எதிர்பார்க்கும்

உங்கள்

**லட்சுமி சுதா**
lakshmisudha2010@yahoo.com

# நேற்று இல்லாத மாற்றம்


# நேற்று இல்லாத மாற்றம்


## 1

நீ ரொம்ப
வித்தியாசமானவள்!
ஒரு பார்வையில்
என்னைக்
கரைத்து விட்டாய்!
ஒரு
மெல்லிய
இசை
வெள்ளமாக

என்
மனதில்!
உன்
பார்வையாலே
தான்
பெண்ணே!
என்னுள்
புதிய இசை!

அந்த அடுக்குமாடிக் குடியிருப்பைக் கடந்து சென்றாள் அவந்திகா. காலை வெயில் முகத்தில் இதமாகப் பரவியது.

வேகமாக நடந்து வந்ததால் அவளுக்கு மூச்சு வாங்கியது. வீட்டின் முன்பு இருந்த குட்டி சைக்கிளைப் பார்த்து வியந்தாள் அவள்.

இவ்வளவு சின்ன சைக்கிளை யார் ஓட்டிக் கொண்டு வந்திருப்பார்கள்... அதுவும் இவ்வளவு காலையில்...! என யோசித்தபடியே கேட்டைத் திறந்தாள்.

அங்கே தோட்டத்தில் ஒரு சிறுவன், செடி ஒன்றை நட்டு வைத்துக் கொண்டிருந்தான்.

"ஹலோ... யார் நீ? என்ன செய்யற?"

அவன் ஏதும் சொல்லாமல், கருமமே கண்ணாக செடியை நட்டுக் கொண்டிருந்தான்.

"ஹலோ தம்பி! உன் பெயர் என்ன?" என்று ...தினாள் அவந்திகா.



"நான் ஒரு டெலிவரி பாய்."

"ம்... டெலிவரி பாய்க்கு பெயர் இல்லையா?"

அவன் மீண்டும் மௌனமானான்.

"தம்பி... நீ தப்பான முகவரிக்குச் செடியை டெலிவரி செய்து விட்டாய்...

ஐ ஹாவ் நாட் ஆஸ்க்ட் ஃபார் தி ப்ளாண்ட்ஸ்!"

"புதிதாக ஒரு மூலிகைத் தோட்டம் தொடங்குகிறோம். அதனால் ஐந்து கிலோமீட்டர் அருகே இருப்பவர்கள் எல்லோருக்கும் மூலிகைச் செடி இலவசமாகக் கொடுக்கிறோம்."

"தட்ஸ் நைஸ். தோட்டம் எங்கே தொடங்கப் போகிறார்கள்? உனக்குத் தெரியுமா?"

"நாளைக்குத்தான்... மல்லிகை நகரில்! இந்தாங்க... இதில் விவரம் இருக்கு. வந்திடுங்க திறப்பு விழாவிற்கு..." என்று ஒரு காகிதத்தை அவளிடம் நீட்டினான் அவன்.

பின்பு அங்கிருந்து கேட்டை நோக்கி வெளியேறினான்.

"ஏய் தம்பி! இந்தா... கஷ்டப்பட்டு செடி நட்டு வச்சிருக்க. இதை வாங்கிக்கோ..." என்று அவன் கையைப் பற்றினாள் அவந்திகா.

"வேண்டாம்... வேண்டாம்..." என்று சொல்லிக் கொண்டே ஓட்டமும் நடையுமாக சைக்கிளை நோக்கிச் சென்றான் அவன்.

கண்மூடித் திறப்பதற்குள் அவன் காணாமல் போய் விட்டான்.

'சுறுசுறுப்பான சிறுவன்தான்!' என்று அவனை மனதில் பாராட்டியபடியே வீட்டினுள் நுழைந்தாள் அவள்.

"ஏய்! நீ இங்க டி.வியில் ஒன்றிப் போய் இருக்கே... வாசல்ல என்ன நடக்குதுன்னே உனக்குத் தெரியலை மஞ்சு?"

"அப்படி என்னடி முக்கியமானது நடந்து போச்சு அங்கே? டோனி என்னைப் பார்க்க வந்தாரா... இல்லை சூர்யா என் ஆட்டோகிராப்புக்காக வெயிட் பண்றாரா...? கமான் டெல் மீ!"

"காட்! உன்னோட நான் பேசத் தயாரா இல்லை தாயே! நீ நல்லா டி.வி. பார்."

காலையில் பார்த்த அந்தச் சிறுவனின் முகமே அவள் கண் முன்னே நிழலாடியது. துறுதுறுவென இருந்த அவன் திராட்சைப் பழக் கண்களில் ஏதோ ஒரு சோகம் தெரிந்தது போல் அவளுக்குத் தோன்றியது.

ம்... இது பிரமையாகத்தான் இருக்கும். நான் சட்டெனக் கேட்டதால் அந்தப் பையன் மிரண்டு இருப்பான் என நினைத்துக் கொண்டாள் அவள்.

நாளைக்குக் காலை அந்தத் திறப்பு விழாவிற்குப் போகலாம். ஒருவேளை அந்தப் பையனை அங்கே பார்த்தாலும் பார்க்கலாம்... எனத் தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள்.

குளித்துவிட்டு வந்தவள் ஒரு மஞ்சள் வண்ண சுடிதாரினுள் தன்னை நுழைத்துக் கொண்டாள்.



"மஞ்சு! நீ ஆஃபீசுக்குக் கிளம்பலை?"

"ம்... இன்னிக்கு டி.வியில வாரணம் ஆயிரம் படம் போடறாங்க. அதனால எனக்கு உடம்பு சரியில்லைன்னு நேத்தே லீவு சொல்லிட்டேன்."

"அடிப் பாவி! இது ரொம்ப டூ மச். சரி எனிவே என்ஜாய் யுவர் லீவ். நான் கிளம்பறேன்பா..."

"பை அவந்தி!"

"பை மஞ்சு!"

**அ**வந்திகா ஒரு அட்வர்டைஸிங் கம்பெனியில் விளம்பரங்களைத் தயாரிக்கும் பிரிவில் இருந்தாள்.

விளம்பரங்களைக் கவர்ச்சியாக, மனதை ஈர்ப்பதாக வடிவமைப்பது அவள் வேலை. அதற்குத் தகுந்த வாசகம் தேர்ந்தெடுப்பதும் அவள் வேலையின் முக்கியப் பொறுப்பு.

அவள் விஷுவல் கம்யூனிகேஷன்ஸ் படிப்பை விரும்பிப் படித்தாள். கூடவே ஆங்கில இலக்கியமும் உளவியலும் அவள் கோர்ஸில் பாடங்களாக இருந்தன.

பெங்களூரில் மட்டுமே தென் இந்தியாவில் இந்த மாதிரி டிகிரியை அளிப்பதால் அவள் அங்கேயே ஹாஸ்டலில் தங்கிப் படித்தாள்.

கோல்ட் - மெடலிஸ்ட் என்பதால் கேம்பஸ் வழியாக அவளுக்கு ஒரு பன்னாட்டு நிறுவனத்தில் வேலை கிடைத்தது.

வேலையில் சேர்ந்து ஒரு வருடத்திற்கு மேல் ஆகிவிட்டது. வாழ்க்கை தெளிந்த நீரோடை போல் இருக்க வேண்டும்.

ஆனால் அவள் வாழ்க்கை அப்படி இல்லை. அவ்வப் பொழுது அப்பாவின் நினைவு வரும். மனதில் ஒரு வலி பரவும்.

உடல் சோர்வடையும். தன்னைச் சமாளித்துக் கொண்டு வேலையைத் தொடர்வாள் அவள். ஆனால் மனதின் மூலையில் பதுங்கி உள்ள நினைவுகள் அவளை அடிக்கடி ஆட்டிப்படைக்கும்.

ஏன்... என் வாழ்க்கை மட்டும், ஒரு சராசரிப் பெண் போல் இல்லாமல் இவ்வளவு சிக்கல்கள் நிறைந்திருக்கிறது என்று தன்னையே கேட்டுக் கொள்வாள் அவள்.

ஒருவேளை தன்னால் இதை எல்லாம் தாங்கிக் கொள்ள முடியும் என்று நினைத்து கடவுள் தன்னை சோதிக்கிறார் போல் என்று தன்னையே தேற்றிக் கொள்வாள் அவள்.

சாலையில் பச்சை விளக்கு விழுந்ததைக் கவனிக்காமல் யோசனையில் மூழ்கி இருந்தவளைக் கலைத்தது பின்னால் வந்த கார் ஹார்ன் ஒலி.

ஸ்கூட்டியை அதற்குப் பின்பு கிளப்பினாள் அவள். ஆஃபீஸை அடையும் பொழுது கைக்கடிகாரம் மணி எட்டு முப்பது என்று உறுதி செய்தது.

வரவேற்பறையில் இருந்த மாலினி அவளைப் பார்த்து புன்முறுவல் சிந்தினாள்.

"ஹாய் அவந்திகா! குட் மார்னிங்."

"குட் மார்னிங் மாலினி!"



தன்னுடைய இருக்கைக்கு வந்தவள், அன்று செய்ய வேண்டிய வேலைகளை டைரியில் குறித்துக் கொண்டாள்.

குழந்தைகளைப் படிக்க அனுப்பாமல், வேலைக்கு அனுப்புவது தவறு என்று ஒரு இரண்டு நிமிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒரு விளம்பரத்தைத் தயார் செய்ய வேண்டும்.

அந்தத் தீமிற்கு ஏற்ற நல்ல விளம்பரத்தை எப்படி வடிவமைக்கலாம் என யோசித்தாள் அவள். காலையில் பார்த்த அந்தச் சிறுவனின் முகம் அவள் கண் முன் நிழலாடியது.

அந்தச் சிறுவனின் கண்களில் தெரிந்த ஏதோ ஒரு உணர்வு, அவள் மனதைப் பாதித்தது. சாலையோரம் கையேந்திப் பிச்சை எடுக்கும் சிறுவர், சிறுமியர் அவள் மனக்கண்ணில் தோன்றியது.

ஒரு பக்கம் எல்லாத் துறையிலும் முன்னேறிக் கொண்டிருக்கும் இந்தியா... இன்னொரு பக்கம் லஞ்சம், வறுமை, பெண் சிசுக் கொலை என்று சுதந்திரம் கிடைத்த பின்பும் பரவியுள்ள கோரங்கள்.

கங்கை நதியில் மணல் திருடுவதைத் தடுக்க வேண்டும் என்று சாமியார் ஒருவர் உண்ணாவிரதம் இருந்தது நினைவுக்கு வந்தது.

அரசு அதைக் கண்டு கொள்ளாமல் மெத்தனமாக இருந்தது. விளைவு நூறு நாட்களுக்கு மேல் உண்ணாவிரதம் இருந்ததால் அந்தச் சாமியார் கோமாவிற்குச் சென்றார்.

மருத்துவமனையில் அவர் உயிர் பிரிந்தது. அந்த நிகழ்ச்சி அவள் மனதைப் பாதித்தது. சட்டென ஒரு பொறி தோன்றியது. விளம்பரம் வடிவமைக்க.

இந்தியாவில் சுதந்திரம் பெற்ற பின்பு நடந்த முக்கிய நிகழ்வுகளைத் தொகுத்து ஒருபுறம் வரிசைப் படுத்தலாம்.

உலகக் கோப்பையைக் கிரிக்கெட்டில் இரண்டு முறை வென்ற இந்தியா, உலக அழகிப் போட்டியில் முதல் இடம் பெற்ற இந்தியா, ஆசிய விளையாட்டுக்களை டெல்லியில் திறம்பட நடத்திய இந்தியா என சாதனைகளைப் பட்டியல் இடலாம்.

இன்னொரு பக்கம் இந்தியாவின் இன்னொரு முகத்தைப் படம் பிடித்துக் காட்டலாம். இந்தியாவில் பெண் குழந்தைகள் பிறப்பு சதவீதம் குறைந்து வருவது, படிக்கும் வயதில் பள்ளி செல்ல முடியாமல் அவர்கள் சுமக்கும் சுமைகள், வரதட்சணைக் கொடுமை என நிறைய பட்டியல் இடலாம் என மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் அவள்.

நினைத்ததைச் செயல்படுத்தினாள் அவள். கணினியில் அவள் எண்ணங்களைப் பதிவு செய்யத் தொடங்கினாள்.

"ஹாய் அவந்தி! குட் மார்னிங்."

"குட் மார்னிங் சார்லஸ்!"

"என்ன... காலையில் பயங்கர பிஸியா இருக்கே?"

"ம்... இந்தப் பெண் குழந்தைகளுக்கான அட்வர்டைஸிங் கேம்பெயினில் என்னென்ன தீம்ஸ் சேர்க்கலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.



எப்படியும் ஒரு நாலு நாளில் இதை முடிச்சிடுவேன். முடிச்சிட்டு உன்கிட்டே காட்டறேன். ப்ளீஸ்... கிவ் யுவர் கிரிடிகல் ஒபினியன்!"

"கண்டிப்பா. பட் உன்னோட ஒர்க் எல்லாமே ரொம்ப அழகா, இயல்பா, மனதை அள்ளற மாதிரி இருக்குமே...

அதோட நீ நிறைய ஆப்ஷன்ஸ் வெச்சிருப்ப. நிறைய தீம்ஸ் இருக்கிறதால ஒரு ஐடியா ஒர்க் அவுட் ஆகாட்டி இன்னொரு ஐடியா ஒர்க் அவுட் ஆகும்.

இதில ஐயாவுக்கு என்ன வேலை பெரிசா இருக்கப் போவுது சொல்லு!"

"கமான் சார்லஸ். நான் இதுவரை வடிவமைச்ச விளம்பரங்கள் எல்லாம் கமர்ஷியல் பர்பஸ்.

அதனால் அதை வடிவமைக்கிறது ரொம்ப சுலபம். அதோட ரீச் நல்லா இருக்கும். ஏன்னா அதை மக்கள் ரெகுலரா யூஸ் செய்வாங்க.

சோப், ஷாம்பூ, காஸ்மெடிக்ஸ், செல்ஃபோன்... இதெல்லாம் எல்லாரும் உபயோகப்படுத்தறது... பட் இப்ப நான் வடிவமைக்கிறது ஒரு வித்தியாசமான ப்ராஜெக்ட்."

"ம்... அப்படியா! வாட் இட் இஸ்? டெல் மீ!"

"பெண் குழந்தைகளுக்கு எதிராக நடக்கும் கொடுமைகள்... குறிப்பாக இந்தியாவில், இதை விளக்கற மாதிரி, மனதைத் தொடற மாதிரி ஒரு விளம்பரம் அமைக்கணும்."

"ஓ... எ டிஃபரண்ட் டாபிக்!"

"யெஸ்... அதுதான் ஐயாம் டென்ஸ்ட்."

"கூல்! யாருக்கு இந்தப் பிராஜெக்ட் செய்யறோம்?"

"ஒரு என்.ஜி.ஓ. (நான்-கவர்ன்மெண்ட் ஆர்கனைஸேஷன்) தான் இந்த பிராஜெக்ட்டைக் கேட்டிருக்காங்க..."

"நைஸ். முடிச்சிட்டு நான் பார்க்கிறேன் அவந்தி. ஆல் தி பெஸ்ட்!" என்றான் புன்முறுவலோடு சார்லஸ்.

"தேங்க்ஸ்!" என்று பதிலுக்குப் புன்னகைத்தாள் அவள்.

## 2

நீ பேசும்
வார்த்தைகளுக்கு
எப்படி
இவ்வளவு
இனிமை வருகிறது?
சர்க்கரை
மொழி
உனக்கு
மட்டும்
எப்படிச்
சொந்தமானது?
நீ
உதிர்த்த
வார்த்தைகளையும்



நான்
பத்திரமாக
வைத்திருக்கிறேன்
என் மனப்
பெட்டகத்தில்!

அன்று சாயங்காலம் வழக்கம் போல் வீட்டிலுள்ள செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சத் தோட்டத்திற்குச் சென்றாள் அவந்திகா.

அந்தச் சிறுவன் நட்டு வைத்திருந்த செடிகளைப் பார்வையிட்டாள். அழகான ரோஜாச் செடிகள். இலைகள் பச்சையும், சிவப்புமாகப் பார்க்க ரம்மியமாக இருந்தன.

தண்ணீர் பாய்ச்சும் பொழுது, புற்களுக்கு இடையே ஏதோ மின்னுவது தெரிந்தது. என்னவாக இருக்கும் என்று குனிந்து அதை எடுத்தாள்.

அவள் விழிகளில் அதிர்ச்சி கொப்பளித்தது. காட்! இது ஒரு துப்பாக்கி. பொம்மை இல்லை. விளையாட்டுத் துப்பாக்கி இல்லை.

இது ரியல். இது... இது எப்படி இங்கே தோட்டத்தினுள் வந்தது? ஆச்சரியமாக இருக்கிறதே...! ஒருவேளை அந்தப் பையன் தவற விட்டு இருப்பானா?

சின்னப் பையன்... அவன் கையில் எப்படித் துப்பாக்கி வந்தது? இல்லை... வேறு யாராவது துப்பாக்கியைப் போட்டிருப்பார்களா என்று நடுங்கும் கரத்தோடு அதைப் பிரித்தாள்.

நல்ல காலம்... இதில் தோட்டா இல்லை என்று அவள் உதடுகள் முணுமுணுத்தன. ஒரு நிம்மதிப் பெருமூச்சு அவளிடமிருந்து பிறந்தது.

இப்பொழுது என்ன செய்வது? போலீஸில் சொல்லலாமா? அவள் முதுகுத் தண்டில் ஒரு ஜில்லிப்பு பரவியது.

'வேண்டாம்... போலீஸில் சொல்ல வேண்டாம். அந்தச் சிறுவன்தான் தவற விட்டிருப்பான். பட், அவன் கைக்கு எப்படி அது சிக்கியது?

நாளைக்குக் காலையில் திறப்பு விழா இருக்கிற தல்லவா... அங்கே போய் வேண்டுமானால் விசாரித்துப் பார்க்கலாம்.

அந்த டெலிவரி பாய் பற்றிய விவரங்கள் வேண்டு மானால் கேட்டுப் பார்க்கலாம். பட், அந்த டெலிவரி பாய் பெயர்கூடத் தெரியவில்லையே?

பட் ஐ ரிமம்பர் ஹிஸ் ஃபேஸ் அண்ட் ஷர்ட். விசாரித்துப் பார்க்கலாம்...' என்று முடிவு செய்தாள் அவந்திகா.

மஞ்சு ஏதோ எமர்ஜென்ஸி என்று ஆஃபீஸ் சென்றிருந்தாள். அதனால் சீக்கிரமாகவே டின்னரை முடித்து விட்டுத் தூங்கச் சென்றாள் அவள்.

எப்பொழுதுமே படுத்தால் உடனே தூங்கி விடுகிற ரகம் இல்லை அவள். இன்று அந்தத் துப்பாக்கியாலோ என்னவோ தூக்கம் வரமாட்டேன் என்று முரண்டு செய்தது.



எப்பொழுது தூங்கத் தொடங்கினோம் என்று அவளுக்கே தெரியவில்லை. காலையில் பெயர் தெரியாத பறவைகளின் சப்தம் கேட்க கண்விழித்தாள் அவள்.

விழித்தவளுக்கு, முதலில் நினைவுக்கு வந்தது அந்தத் துப்பாக்கிதான். இன்னிக்கு அதைப் பற்றித் தெரிய வேண்டும்" என்று தீர்மானித்ததோடு படுக்கையில் இருந்து எழுந்தாள்.

ராகி கஞ்சி மட்டும் போதும், இன்று காலை குடிக்கலாம் என்று நினைத்தபடியே குளித்து விட்டு வந்தாள்.

ஒரு நீலப் பூக்கள் நிரம்பியிருந்த சல்வாரை அணிந்து கொண்டு திறப்பு விழா கார்டைப் பையில் எடுத்துக் கொண்டு கிளம்பினாள் அவள்.

'தென்றல் மூலிகைத் தோட்டம்' என்று பெரிதாக ஒரு பலகை அவளை வரவேற்றது. நிறைய கார்கள் அந்த இடத்தில் நிறுத்தப்பட்டு இருந்தன.

அதன் அருகே ஸ்கூட்டியை நிறுத்திவிட்டு உள்ளே சென்றாள் அவள். அவள் எதிர்பார்த்து வந்தது ஒரு சாதாரணத் தோட்டத்தை...

ஆனால் தென்றல் மூலிகைத் தோட்டம் ரொம்ப அழகாக நேர்த்தியாக இருந்தது. வரவேற்பறையில் வந்தவுடனேயே மூலிகை மணம் அவள் நாசியை நிறைத்தது.

ஒரு பெரிய திரையில் மூலிகைகளின் மகத்துவத்தைப் பற்றி ஒரு படம் ஓடிக் கொண்டிருந்தது.

"மேடம்... மூலிகை நீர் குடிங்க!" என்று ஒரு இளம்பெண் கண்ணாடிக் கோப்பைகள் அடுக்கிய ட்ரேயை அவளிடம் நீட்டினாள்.

"தேங்க்ஸ்!" என்று ஒரு கோப்பையை எடுத்துக் கொண்டாள்.

இதமான சூடோடு இருந்த அந்த நீர் குடிக்க வித்தியாசமான சுவையோடு இருந்தது.

இந்தக் கூட்டத்தில் அந்தச் சிறுவனை எப்படித் தேடுவது என்று அவள் விழிகள் அங்கும் இங்கும் அலைந்தன.

அப்பொழுது அவள் இரு விழிகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. அந்த விழிகளில் இருந்த ஏளனம், அலட்சியம், கோபம்... எல்லாம் அவளை உலுக்கியது.

மூலிகைச் செடிகள் நிரம்பிய தொட்டிகள் மேல் பார்வையைச் செலுத்தினாள் அவள்.

அவன் பார்வையால் ஏனோ உடலும், மனமும் ஒரு புரியாத உணர்வில் மூழ்கி இருந்தது. அதைப் போக்கவே மூலிகைச் செடிகளைப் பார்வையிட்டாள் அவள்.

அவன் பார்வையை நினைத்தாலே, அவள் உடல் சிலிர்த்தது. இரை தேடும் புலியை அவளுக்கு நினைவுபடுத்தியது அவன் பார்வை.

"எந்தச் செடியைப் பற்றியாவது விளக்கம் வேண்டுமா மேடம்?" என்ற இனிய பெண் குரல் அவள் யோசனையைக் கலைத்தது.



"இது ஏன் செடி இலை எல்லாம் இவ்வளவு பெரிசா... குரோட்டன்ஸ் மாதிரி இருக்கே?"

"மேடம்! இந்தச் செடி பெயர் ஆடுதொடா. இதன் இலை கசப்பா இருக்கும். ஆடு, மாடு எதுவும் இதைத் தின்னாது.

அதனால்தான் இதற்கு அந்தப் பெயர். இது உடலில் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும். சளி, இருமல் இதெல்லாம் இதைச் சாப்பிட்டால் குறையும்.

கஷாயம் மாதிரி குடிக்கலாம். இல்லை... பொடி செய்து மோரில் கலந்து குடிக்கலாம். இந்தப் புத்தகத்தில் மூலிகையின் மகத்துவங்கள் உள்ளன!" என்று ஒரு புத்தகத்தை அவளிடம் நீட்டினாள் அந்தப் பெண்.

"தேங்க்ஸ்! நான் உங்க முதலாளியைப் பார்க்கணும்..." என்றாள் அவந்திகா.

"மேடம்! ஸார் ரொம்ப பிஸி. என்ன விஷயமா அவரைப் பார்க்கணும்?"

"ம்... சும்மாதான். இந்தத் தோட்டம் ரொம்ப அழகா இருக்கு. அதனால்தான் அவரைப் பாராட்டிட்டுப் போகலாம்னுதான் கேட்டேன்."

"ஸார் ரொம்ப அவசியம்னா மட்டும்தான் பார்ப்பார் மேடம். நீங்க பாராட்டிச் சொன்னதா நான் அவரிடம் சொல்லி விடுகிறேன்."

'இது என்ன இந்தப் பெண் இப்படி பந்தா செய்கிறாள்? இவள் வேண்டும் என்றே பந்தா செய்கிறாளா... இல்லை, இதுதான் நிஜமா?' என்று புரியாமல் குழம்பினாள் அவந்திகா

"மேடம்! நான் மற்ற கஸ்டமர்ஸைக் கவனிக்க வேண்டும். எக்ஸ்கியூஸ் மீ!" என்று சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்றாள் அவள்.

மீண்டும் அந்தத் தோட்டத்தைச் சுற்றும் முற்றும் பார்த்தாள் அவள். 'ஒன்லி ஃபார் எம்ப்ளாயிஸ்' என்று ஒரு பலகை தெரிந்தது.

அதன் அருகே சென்றாள் அவள். இங்கேதான் முதலாளியின் அறை இருக்கும் என்று நினைத்தபடியே விழிகளால் அந்த இடத்தை ஆராய்ந்தாள் அவள்.

"போர்டு போட்டு இருக்கே... ரொம்பத் தெளிவா 'வேலை செய்பவர்களுக்கு மட்டுமே அனுமதி!' என்று.

படிக்கத் தெரியாதா.. இல்லை, கண்ணில் ஏதாவது பிரச்சனையா?" என்று குத்தலாகக் கேட்டபடியே அவள் அருகே வந்தான் ஒருவன்.

திடுக்கிட்டு அவனைப் பார்த்தாள் அவந்திகா. கொஞ்சம் விநாடிகளுக்கு முன்பு, அவளை ஏளனம் செய்த விழிகளுக்குச் சொந்தக்காரன், அவள் முன்னே அமர்த்தலாக நின்று கொண்டிருந்தான்.

"நான் இந்தத் தோட்டத்தின் முதலாளியைப் பார்க்க வேண்டும்."

"ஏன் அவரைப் பார்க்க வேண்டும்?"

"அதை நான் அவரிடம் சொல்லிக் கொள்கிறேன்."

"ம்... அப்ப என்னிடம்தான் சொல்ல வேண்டும்."

"நான்... நான்... ஐயாம் ஸாரி!" என்று திணறினாள் அவள்.



"லுக்! எனக்கு நிறைய வேலைகள் உள்ளன. சொல்ல வேண்டியதை சீக்கிரமாகச் சொல்லிவிட்டுக் கிளம்பு."

இவன் ஏன் இப்படி சிடுமூஞ்சியாக இருக்கிறான்... சரியான, திமிர் பிடித்தவன் போல என அவனை மனதிற்குள் திட்டினாள் அவள்.

"சொன்னது காதில் விழுந்ததா?" என்று பொறுமையின்றி ஒலித்தது. அவன் குரல்.

"நான் ஒரு டெலிவரி பாய் பற்றிப் பேச வந்தேன்..."

"எந்த டெலிவரி பாய்? என்ன விஷயம்? பீ க்ளியர்!"

"லுக்... என்னைப் பேச விடாமல் குறுக்கே பேசுவது நீங்கள்... பிஸினெஸில் முன்னேறுவதற்கு பொறுமை தேவை.

லிஸனிங் ஸ்கில்ஸ் ஆர் வெரி இம்பார்ட்டண்ட் நவ் எ டேஸ். ஸ்பீச் இஸ் சில்வர், சைலன்ஸ் இஸ் கோல்டன்! உங்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன்..."

"ம்... விட்டால் மேடைப் பிரசங்கம் செய்வாய் போல... அழகாக இருப்பதால் நீ என்ன வேண்டுமானாலும் பேசலாம். அதை எல்லாரும் 'ஆ'வென்று வாய் திறந்தபடி கேட்பார்கள் என்ற திமிர்தானே உன்னை இப்படிப் பேச வைக்கிறது..."

"போதும்... இதற்கு மேல் பேசாதீர்கள்!" என்று சீறினாள் அவள்.

கோபத்தால் அவள் முகம் சிவந்தது.

"சொல்ல வந்ததைச் சொல்! என்றான், சற்றே தணிந்த குரலில் அவன்.

"நேற்று இந்தத் தோட்டம் திறப்பு விழாவிற்காக, சில வீடுகளுக்குச் செடிகளை இலவசமாக டெலிவரி செய்யச் சொன்னது நீங்கள்தானே?"

"யெஸ். அதற்கென்ன இப்பொழுது?"

"என் வீட்டிற்கு ஒரு சிறுவன் நேற்றுக் காலை வந்து, இரண்டு ரோஜாச் செடிகளை நட்டு வைத்தான்."

"உனக்கு ரோஜாச் செடி பிடிக்காதா? வேறு வேண்டுமா?"

"வில் யூ லிஸன்! அவன்... அவன் நட்டு வைத்த செடிகளுக்கு அருகில் புல் தரையில் நான் ஒரு துப்பாக்கியைப் பார்த்தேன்..." என்றாள் நடுங்கும் குரலில் அவந்திகா.

"வாட்?"

"யெஸ்... இந்தாங்க... இதுதான் அந்தத் துப்பாக்கி!" என்று அவனிடம் அதைக் கைப்பையில் இருந்து நீட்டினாள்.

அதை வாங்கியவனின் கண்களில் அதிர்ச்சி தெரிந்தது.

"இதில் குண்டு ஏதும் இல்லை. நான் பிரித்துப் பார்த்தேன்."

"அந்த டெலிவரி பாய்தான் இதைத் தவற விட்டிருப்பான் என்று எப்படித் தீர்மானித்தாய்?"

"ம்... இட்ஸ் எ கெஸ் ஒன்லி. அந்தச் சிறுவன் பதட்டமாக இருப்பது போல் எனக்குத் தோன்றியது.

அவன் கண்களில் ஒரு வலி, பயம் கலந்த சோகம் எனக்குத் தெரிந்தது."



"ஓ... கண்ணைப் பார்த்தால் மனதில் என்ன இருக்கும் என்று உனக்குச் சொல்லத் தெரியும் போல!

வாட் டு யூ கால் திஸ்? இப்பொழுது நான் என்ன நினைக்கிறேன் என்று உன்னால் சொல்ல முடியுமா? லுக் அட் மை ஐஸ் அண்ட் டெல் மீ!" என்றான், சவால் விடும் தொனியில்.

"நான் சொல்வது விளையாட்டுத்தனமான விஷயம் இல்லை. நான் படித்த கோர்ஸில் உளவியலும் உள்ளது.

அதனால் என்னால் சிலவற்றை யூகிக்க முடியும். அந்தச் சிறுவனைப் பற்றிய விவரங்கள் கொடுக்க முடியுமா, ப்ளீஸ்!"

"எங்களிடம் நிறைய டெலிவரி பாய்ஸ் உள்ளனர்" என்று அவன் அலட்சியமாகத் தோளைக் குலுக்கினான்.

"பட், இந்தச் சிறுவன் கொஞ்சம் வித்தியாசமாக இருந்தான். அவன் உடை ரிச்சாக இருந்தது.

ஒரு சிவப்புக் கலர் டி-ஷர்ட் அணிந்திருந்தான். கண்கள் திராட்சைப் பழம் போல் துறுதுறுவென இருந்தன. ஆனால் அதில் ஏதோ ஒரு சோகம், வலி தெரிந்தது.

அவன் கொஞ்சம் பெரிய மனுஷத் தோரணையோடு நடந்து கொண்டான். ஹி வாஸ் நாட் லைக் ரெஸ்ட் ஆஃப் தி கிட்ஸ்.

அவனுடைய பெற்றோரிடம் நான் பேச வேண்டும்..."

அவள் சொன்னதைக் கேட்டு, அவன் அலட்சியமாகப் புன்னகைத்தான்.

## 3

மழைச் சாரல்
சில்லென்று
என்
முகத்தில்
பட்டது!
உன்
ஞாபகம்
வந்தது!
ஒற்றைக்
குயிலின்
இசைக்
கச்சேரி
என்
காதில்
பாய்ந்தது!
உன்
ஞாபகம்
வந்தது!
எப்பொழுதும்
உன்
நினைவில்
நான்!



"அங்கிள்... அங்கிள் என் டென்னிஸ் பேட்டைப் பார்த்தீர்களா?" என்று கத்திக் கொண்டே அவர்களை நோக்கி ஒரு சிறுவன் வந்தான்.

அவனைப் பார்த்த அவந்திகா திடுக்கிட்டாள். அந்தச் சிறுவனின் முகத்திலும் அதிர்ச்சி தெரிந்தது.

காட்... இந்தச் சிறுவன் இவனுடைய சொந்தக்காரன். அது தெரியாமல் நான் இவனிடமே எல்லாவற்றையும் சொல்லி விட்டேனே... எனப் பயந்தாள் அவள்.

ஆனால் அவள் மனசாட்சி அவளுக்குத் தெம்பூட்டியது. நீ செய்தது நல்லதுதான். மனதில் இருந்த சந்தேகத்தைப் போட்டு உடைப்பது சரிதானே! என்று அவளைத் தைரியப்படுத்தியது.

"இ... இந்தப் பையன்தான்... நேற்று..." என்று அவள் முடிக்கும் முன்பு அவன் குறுக்கிட்டான்.

"ரோஹித்! நீ உள்ளே போய் விளையாடு!" என்றான், உத்தரவு போடும் தொனியில்.

அந்தச் சிறுவன் உடனே உள்ளே சென்று விட்டான். அங்கிருந்த ஏ.ஸியை மீறி வியர்வைப் பூக்கள் அவள் நெற்றியில் பூத்தன.

"ஸோ... இந்த மாதிரி சொல்லி பணம் பறிக்கலாம் என்பது உன் திட்டம். சே... வெரி சீஃப் கேர்ல் யூ ஆர்...!"

"வாட்?" என்று அதிர்ந்தாள் அவள்.

"உனக்கு ரோஹித்தைப் பார்த்தவுடனேயே தெரிந்து விட்டது, அவன் பணம் படைத்தவன் என்று...

அதனால் இல்லாத ஒரு பழியைச் சுமத்தி அவனைச் சாக்காக வைத்து, பணம் பறிக்க முயற்சி செய்கிறாய்."

"நீங்கள் இவ்வளவு கீழ்த்தரமான எண்ணங்களைக் கொண்டிருப்பீர்கள்... என்று நான் நினைக்கவில்லை. சே... யூ ஆர் எ க்ரூக்!" என்று படபடத்தாள் அவள்.

"உண்மை கசக்கத்தான் செய்யும். கெட்-அவுட்! இனி, இந்த இடத்தில் நான் உன்னைப் பார்த்தால் அவ்வளவு தான்...! பெண் என்றுகூடப் பார்க்க மாட்டேன்... ஜாக்கிரதை! கெட் லாஸ்ட்."

அவமானத்தாலும் கோபத்தாலும் அவள் முகம் சிவந்தது. என்ன ஒரு பணத்திமிர் இவனுக்கு? எல்லோரும் இவன் பணம் பின்பு அலைவார்கள் என்ற நினைப்பில் ஆணவமாகப் பேசுவதைப் பார் என்று அவனை மனதிற்குள் திட்டினாள்.

"பணம் இருக்குமிடத்தில் குணம் இல்லை. சே... உங்களைப் போன்றவர்களிடம் பேசுவதே வீண். என் நேரம்தான் வேஸ்ட்!" என்று சீறிவிட்டு அங்கிருந்து வேகமாக வெளியேறினாள் அவந்திகா.

சே... அந்தச் சின்னப் பையன் பாவம்! இவனிடம் மாட்டிக் கொண்டு அவஸ்தைப்படுகிறான். அவன் முகத்தில் தெரிந்த சோகத்திற்கு இந்தப் புண்ணியவான்தான் காரணமாக இருப்பான் என நினைத்து மருகினாள் அவள்.

அன்று அலுவலகத்தில் சரியாக வேலையில் கவனம் செலுத்த முடியாமல் திண்டாடினாள் அவந்திகா. அதற்குக் காரணம் அந்தத் தென்றல் தோட்டத்தின் முதலாளிதான்.



அந்தப் புதிய தோட்டத்திற்கு 'தென்றல் தோட்டம்' என்று பெயர் வைப்பதைக் காட்டிலும் புயல்... இல்லை சூறாவளித் தோட்டம் என்ற பெயரே பொருத்தமாக இருக்கும் எனத் தனக்குள்ளே நினைத்து சிரித்துக் கொண்டாள்.

"அவந்தி ஐ நீட் யுவர் ஹெல்ப்!" என்ற சார்லஸ் குரல் பதட்டமாகக் கேட்க, கணினியில் இருந்து பார்வையைத் திருப்பினாள் அவள்.

"என்ன உதவி சார்லஸ்... சொல்... யு லுக் வெரி டென்ஸ்ட் அப்!"

"வீட்டில அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. மயக்கமாயிட்டாங்க போல... பக்கத்து வீட்டில இருந்து ஃபோன் வந்தது."

"காட்! நீ கிளம்பு வீட்டுக்கு உடனே..."

"யெஸ். நான் கிளம்பறேன். பட், இன்னும் முப்பது நிமிஷத்தில ஒரு முக்கியமான க்ளையண்ட்டோட மீட்டிங் இருக்கு. அதுதான் யோசனையா இருக்கு..."

"கூல்... நான் மேனேஜ் பண்றேன். யார் அந்தக் க்ளையண்ட்?"

"ம்... ஹி இஸ் எ நியூ க்ளையண்ட்."

"பெயர் என்ன? என்ன டீடெயில்ஸ் அவர்கிட்டே டிஸ்கஸ் செய்யணும்?"

"ஹிஸ் நேம் இஸ் சரண். இங்க சென்னைக்குப் புதிதாக வந்திருக்கார். இதுக்கு முன்னாடி மும்பையில் இருந்தார் போல..."

"ஓ... அப்படியா!"

"ரொம்ப முக்கியமான புள்ளி போல... பாஸ் அவரை ரொம்ப நல்லா கவனிக்கச் சொன்னார்.

அவரோட பிராஜெக்ட்ஸ் எல்லாம் நம்மளே செய்யறதுக்கு அவர் சரின்னு சம்மதம் சொல்லிட்டார் போல...

அவர் இன்னிக்கு வந்து நமக்கு காண்ட்ராக்ட் கொடுக்க சம்மதம்னு கையெழுத்துப் போடணும்...

எல்லாப் பேப்பரும் தயாரா இருக்கு. நானே போய் கையெழுத்து அவர்கிட்ட வாங்க ரெடியாக இருந்தேன். ஆனால் அவர் பிடிவாதமாக ஆஃபீஸ் வருவேன் என்று சொல்லி விட்டார்.

என்னால் அதைத் தட்ட முடியவில்லை. அதனால்தான் நான் வீட்டிற்குப் போகாமல் இங்கே இருக்கிறேன்..." என்று சொல்லும் பொழுதே சார்லஸிற்கு குரல் உடைந்தது.

"கமான் சார்லஸ். நீ கிளம்பு... நான் அவரைப் பார்த்துக் கொள்கிறேன்."

"இந்த ஃபைல்தான். எல்லா விவரமும் இதில் இருக்கு. தேங்க்ஸ் அவந்தி!"

"நோ ப்ராப்ளம். நீ கவனமாப் போ. இந்தச் சூழ்நிலையில நீ வண்டி ஓட்டாதே. ஆட்டோவில போ...

அப்புறம் என்ன உதவி வேணும்னாலும் உடனே தயங்காமல் ஃபோன் செய். டேக் கேர்!"



"சரி..." என்று முணுமுணுத்துவிட்டு அங்கிருந்து அகன்றான் சார்லஸ்.

அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது அவளுக்கு. சார்லஸின் ஒரே சொந்தம் அவன் அம்மாதான். அதனால்தான் அவன் உருகுகிறான் என்று நினைத்தாள்.

சட்டென தந்தையின் நினைவு அவளை உலுக்கியது. சுயபச்சாதாபத்தால் கண்கள் கலங்கின. கீழ் உதட்டைப் பற்களால் கடித்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் அவள்.

சார்லஸ் கொடுத்த ஃபைலை எடுத்தாள். அதில் மூழ்கினாள் அவள். உள்ளுணர்வு ஏதோ சொல்ல வரவேற்பறைக்குச் சென்றாள்.

"அவந்தி! சார்லஸின் க்ளையண்ட் சரண் இஸ் ஹியர். நீ அட்டெண்ட் செய்வாய் என்று சார்லஸ் சொன்னான்..." என்றாள், மாலினி புன்னகையோடு.

"யெஸ்... ஐ வில் டேக் கேர். ப்ளீஸ் கம் ஸார்!" என்று சொல்லியபடியே அவன் முகத்தைப் பார்த்தவள், அதிர்ந்தாள்.

காரணம் அங்கே நின்று கொண்டிருந்தவன் தென்றல் தோட்டத்தின் முதலாளி. ஆனால் அவளைப் போல் அவன் முகத்தில் அதிர்ச்சி ரேகைகள் தெரியவில்லை.

தன்னைச் சமாளித்துக் கொண்டு அவனைப் பார்த்து லேசாகப் புன்முறுவல் செய்தாள் அவள்.

"என்னுடைய இடம் அங்கே இருக்கு. அங்கே போய் பேசலாம் ஸார்!"

"தேவையில்லை... சார்லஸ் எங்கே?"

"அவர் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. மயக்கம் போட்டு விழுந்திட்டாங்களாம். எமெர்ஜென்ஸி...

அதனாலதான் அவர் வீட்டுக்குப் போகும்படி ஆயிடுச்சு.

அவர் உங்களிடம் மன்னிப்புக் கேட்கச் சொன்னார். ஹி வாஸ் ஃபீலிங் கில்டி!"

"எனக்கு உன் கதையைக் கேட்க நேரமில்லை. ஐ யாம் கோயிங் அர்ஜெண்ட்லி."

"ஸாரி ஸார். உங்கள் கையெழுத்துதான் தேவை இந்த டாக்குமெண்டில்..."

"எனக்கு இதைப் படிக்கப் பொறுமை இல்லை."

"நான் வேண்டுமானால் இதைப் படித்துக் காட்டட்டுமா?"

"அதற்கு நானே படித்துக் கொள்வேன். அதுவே மேல்..."

"உங்களுக்கு ஒரு சாய்ஸ் உள்ளது ஸார்!"

"என்ன அது?"

"ரொம்ப அவசரமாக இருந்தால் நீங்கள் இங்கிருந்து கிளம்பலாம் ஸார்! உங்களுக்கு எப்ப நேரம் கிடைக்குதோ... அப்பொழுது வந்து ஸைன் செய்யலாம்!" என்றாள், மெல்லிய குரலில்.

"நீ இப்பவுமே இப்படித்தான் கஸ்டமர்ஸிடம் அரகண்டாக நடந்து கொள்வாயா?"



"ஸாரி ஸார். நான் அந்த மாதிரி எண்ணத்தில் சொல்லவில்லை.

உங்களுக்கு நேரமாகிறது என்பதால்தான் அப்படிச் சொன்னேன். உங்களுக்குக் குடிக்க காப்பி, டீ ஏதாவது எடுத்து வரச் சொல்லட்டுமா?" என்றாள், லேசான புன்முறுவலோடு.

"வேண்டாம்... அந்த டாக்குமெண்ட்டைக் கொடு."

அவள் அதை பவ்யமாக எழுந்து நின்று அவன் முன் டேபிளில் வைத்தாள்.

அவன் சட்டைப் பாக்கெட்டில் இருந்து தங்க நிறப் பேனா ஒன்றை எடுத்தான். எல்லாப் பக்கங்களிலும் கையெழுத்துப் போடத் தொடங்கினான்.

பின்பு கடைசிப் பக்கத்தில் கையெழுத்துப் போடாமல் தயங்கி நின்றன, அவன் விரல்கள்.

"நான் படித்துக் காட்டட்டுமா?"

அவன் ஏதும் பதில் சொல்லாமல் அவளைப் பார்வையால் அளந்தான்.

"ஸோ... நீ காலையில் வேண்டும் என்றே ஒரு பொய்க் கதையோடு என்னைத் தேடி வந்தாய்.

அப்பொழுதே உனக்குத் தெரியும், நான் இங்கே காண்ட்ராக்ட் சம்பந்தமாக வருவேன் என்று.

இந்த மார்க்கெட்டிங் டெக்னிக்கிற்கு என்ன பெயர்? அழகான பெண்ணை கஸ்டமர்ஸிடம்..." என்று அவன் முடிக்கும் முன்பு அவள் சீறினாள்.

"கெட்... அவுட்!"

"நீ யாரிடம் பேசுகிறாய் என்று தெரியுமா?"

கோபத்தால் அவள் உடல் நடுங்கியது. முகம் சிவந்தது.

"நீங்கள்... ரொம்பக் கேவலமாகப் பேசுகிறீர்கள். ஐ ஜஸ்ட் காண்ட் கண்ட்ரோல் மைசெல்ஃப்!" என்றாள், குரல் நடுங்க...

அவன் அவளிடம் எந்தப் பதிலும் சொல்லாமல் அங்கிருந்து வெளியேறினான். அவள் முகத்தில் பதட்டம் பரவியது.

இவன் டாகுமெண்டில் ஒரு பக்கத்தில் கையெழுத்துப் போடாமல் கிளம்பி விட்டானே... என்ன செய்வது என்று பதறினாள் அவள்.

இவன் முக்கியப் புள்ளி என்று வேறு சார்லஸ் சொன்னானே... இப்பொழுது என்ன செய்வது?

சே... என்ன ஒரு மோசமான எண்ணம் இவனுக்கு? அமிலம் போன்ற அவனின் வார்த்தைகள் அவளுக்கு எரிச்சலை அதிகரித்தது.

கடவுளே! இவனால் சார்லஸிற்குப் பிரச்சனை வருமா? என் வேலை போனால்கூட பரவாயில்லை.

பாவம் சார்லஸ்! அவனை நம்பி அவன் அம்மா இருக்கிறார்கள். அவர்களுக்கு வேறு உடம்பு சரியில்லை.

நான் கொஞ்சம் பொறுத்துப் போயிருக்கலாமோ! அவசரப்பட்டு அவனைத் திட்டி விட்டேனோ?



ஆனால் அவன் பேசிய பேச்சு என் நிதானத்தைத் தொலைந்து போகச் செய்யத் தூண்டியதே... தன்மானமுள்ள எந்தப் பெண்ணாலும் அதைப் பொறுத்துக் கொள்ள முடியாது.

சரி, நான் செய்ததைப் பற்றி ஆராய்ச்சி செய்து நேரத்தை வீணடிக்காமல்... அடுத்து என்ன செய்வது என்று யோசிக்கலாம்.

இந்தக் கடைசிப் பக்கத்தில் அவன் கையெழுத்து வேண்டும். இந்த டாக்குமெண்ட்டில் அதுதான் மிஸ்ஸிங். அது இருந்தால் இந்தக் காண்ட்ராக்ட் முழுமையாகி விடும்.

என்ன செய்யலாம்... என்று யோசித்து யோசித்து தலைவலித்தது அவளுக்கு.

## 4

வெள்ளி
ஓடை
சலசலக்கிறது!
வானில்
விண்மீன்கள்
அதை
ரசிக்கின்றன!
ஓடையோரம்
நான்
உனக்காகக்

காத்துக்
கொண்டு
இருக்கிறேன்!
விநாடிகள்
நத்தை
போல்
ஊர்கின்றன!
நீ வருவாய்
என நான்
காத்திருக்கிறேன்!

**அ**வன் வீட்டிற்குப் போனால் என்ன? போய் கையெழுத்து வாங்கி விடுவதுதான் நல்லது என்று மனதில் ஒரு எண்ணம் பளிச்சிட்டது, அவந்திகாவிற்கு.

அந்தக் காண்ட்ராக்டில் இருந்த முதல் பக்கத்தில் அவன் வீட்டு முகவரி இருந்தது. அங்கே போவதா, வேண்டாமா என்று அவள் மனம் அலைமோதியது.

சார்லஸிற்கு இதனால் பிரச்சனை வரக்கூடாது. இது என்னால் ஏற்பட்ட தவறு. அவன் என்னை நம்பி பொறுப்பை ஒப்படைத்து இருக்கிறான்.

அதனால் நான்தான் இதைச் சரி செய்ய வேண்டும். நான் செய்த தவறை நான்தான் சரி செய்ய வேண்டும்.

அவள் மனம் ஏனோ தயங்கியது. தண்ணீர் பாட்டிலில் இருந்த தண்ணீரை எடுத்துப் பருகினாள் அவள். பின்பு ஒரு முடிவுக்கு வந்தாள்.



சரணின் வீடு அண்ணாநகரில்தான் உள்ளது. இங்கு இருந்து ஸ்கூட்டியில் போனால், பத்து நிமிஷத்தில் போய் விடலாம்.

அங்கே போய் அவனிடம் கையெழுத்து வாங்கி விட்டு வந்துவிடலாம் என்ற எண்ணம் அவள் மனதில் வேரூன்றியது.

இண்டர்காம் மூலம் மாலினியைத் தொடர்பு கொண்டாள் அவள்.

"மாலினி! நான் இப்ப அவசரமாக க்ளையண்ட்டைப் பார்க்கப் போக வேண்டியிருக்கு...

சார்லஸும் இல்லை. ஏதாவது எமெர்ஜென்ஸின்னா என்னைத் தயங்காமல் தொடர்பு கொள்."

"சரி, அவந்தி!"

அடுத்த பத்து நிமிடத்தில் அந்தப் பெரிய பங்களா முன்பு அவள் ஸ்கூட்டி நின்றது. பங்களாவின் முன்பு பெரிய கேட் இருந்தது.

உள்ளே செக்யூரிட்டி யூனிஃபார்ம் அணிந்து ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

"மிஸ்டர்! சரண் ஸார் இருக்காரா?"

"ம்... இருக்கார். உங்க பெயர்?"

"என் பெயர் அவந்திகா. என்னை அவருக்குத் தெரியாது. அவரைக் கொஞ்சம் அவசரமாகப் பார்க்கணும்.

ஒரு இரண்டு நிமிஷம் போதும். நான் ரொம்ப டைம் எடுத்துக்க மாட்டேன். ப்ளீஸ்! கொஞ்சம் உள்ளே விடுங்க..." என்றாள், கெஞ்சலாக அவள்.

"மேடம்! சார் அப்பாயிண்ட்மெண்ட் இல்லாமல் யாரையும் பார்க்க மாட்டார்.

அதுதான் யோசனையா இருக்கு..."

"ப்ளீஸ்! ஒரு ரெண்டு நிமிஷம்தான். அதுக்கு மேல் நான் எடுத்துக் கொள்ள மாட்டேன்.

என்னை நம்பி நீங்கள் உள்ளே விடலாம்... ப்ளீஸ்!"

"விக்ரம்! அங்கே என்ன சப்தம்? யாராவது பிரச்சனை செய்கிறார்களா?" என்று உள்ளிருந்து குரல் கேட்டது.

"ஸார்... ஒரு பொண்ணு உங்களைப் பார்க்கணும்னு பிடிவாதம் பிடிக்குது."

"சரி, உள்ளே அனுப்பு..."

"தேங்க்ஸ்!" என்று செக்யூரிட்டியிடம் சொல்லிவிட்டு உள்ளே சென்றாள் அவள். ஏனோ அவள் இதயத் துடிப்பு அதிகரித்தது.

கதவைத் திறந்தவனின் முகத்தில் கேலியும், கிண்டலும் அப்பட்டமாகத் தெரிந்தன.

"ஸாரி... உங்களைத் தொந்தரவு செய்வதற்கு..." என்றாள், மெல்லிய குரலில்.

"சொல்... வேண்டியதைச் சொல் சீக்கிரமாக..."

"இ... இந்த டாகுமெண்டில் ஒரு பக்கத்தில் நீங்கள் கையெழுத்துப் போட வேண்டும். ப்ளீஸ்! நீங்கள் கையெழுத்துப் போட்டால்தான் இந்தக் காண்ட்ராக்ட் முழுமையாகும்" என்றாள் குரல் நடுங்க.



"ம்... ஸோ என் கையெழுத்து இதில் ரொம்ப அவசியமா?"

"யெஸ் ஸார்!"

"அதுக்காகத்தான் நீ இங்கு வந்திருக்கிறாயா?"

"ஆமாம் ஸார்."

"அப்ப... என்ன வேண்டுமானாலும் செய்வாயா... கையெழுத்து கிடைப்பதற்கு?" என்றான் பார்வையால் அவளை அளந்தபடி.

அவந்திகாவின் முகம் அவமானத்தால் சிவந்தது.

சே... என்ன பேச்சு இது என்று அவள் உடல் அவமானத்தால் நடுங்கியது.

"என்ன... கேள்விக்கு பதிலைக் காணோம்?"

"அனாவசிய கேள்விகளுக்கும் அசிங்கமான கேள்விகளுக்கும் என்னால் பதில் சொல்ல முடியாது."

"நீயாக ஏதேதோ கற்பனை செய்து கொண்டால் ஐ காண்ட் ஹெல்ப் இட்!"

"என்ன சொல்றீங்க?"

"அங்கிள்!" என்று அந்தச் சிறுவனின் குரல் அவர்களின் பேச்சை வளர விடாமல் செய்தது.

ஆனால் அவனைக் கண்டவுடன் அந்தச் சிறுவனின் முகம் மாறியது. அவன் கண்களில் பதட்டம் தெரிந்தது.

"இவனுக்கு கம்ப்யூட்டரில் ஆர்வம் அதிகம்."

"ஓ... அப்படியா!"

"இவனுக்கு கம்ப்யூட்டர் வீட்டிற்கு வந்து சொல்லிக் கொடுக்க ஒரு ஆளைத் தேடிக் கொண்டிருக்கிறேன்..."

"ம்... அப்படியா!"

"ஒரு நல்ல பெண்... நிறைய எனெர்ஜி லெவல் உள்ள பெண் கிடைப்பாளா என்று நான் தேடிக் கொண்டிருக்கிறேன்..."

"வாட்?"

"இவனுக்குத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன். ஸம் ஒன் லைக் எ டியூட்டர் ஃபார் ஹிம்!"

"ஓ..."

"நீ வந்து இவனுக்குச் சொல்லிக் கொடு. அப்பொழுதுதான் நான் கையெழுத்துப் போடுவேன், இந்த டாக்குமெண்டில்..." என்றான் அமர்த்தலாக அவன்.

அவந்திகாவிற்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை. இது அவள் எதிர்பார்க்காத ஒன்று.

சரண் சட்டென இப்படிக் கேட்பான் என்று அவள் துளிக்கூட எதிர்பார்க்கவில்லை.

"நான் நானா...?"

"யெஸ்!"

"பட் எனக்குக் கம்ப்யூட்டர்... சின்னப் பசங்களுக்குச் சொல்லிக் கொடுத்த அனுபவம் இல்லை."

"எல்லாவற்றுக்குமே அனுபவம் முதல் முறை எங்காவது ஏற்படத்தான் வேண்டும். லெட் இட் பி ஹியர்."

"நான்... நான்..." என்று திணறினாள் அவள்.



"லுக்! எனக்கு நேரத்தை வீணடிக்கப் பிடிக்காது. உனக்கு இந்த டாக்குமெண்ட்டில் கையெழுத்து வேண்டுமா?"

"ஆமாம்..." என்று முனகினாள் அவள்.

"அப்ப உனக்கு வேறு ஆப்ஷன் இல்லை..." என்றான், உறுதியான குரலில் அவன்.

அவன் குரலில் இருந்த தெளிவும், உறுதியும் அவளுக்கு எரிச்சலை வரவழைத்தது. தன் கோபத்தை அடக்கிக் கொண்டிருந்தாள் அவள்.

"நீ நாளையிலிருந்து வரலாம்... இவனுக்குப் பாடம் எடுக்க..."

"பட் நான் ஒர்க் செய்கிறேன். என்னால் தினமும் வர முடியாது."

"வேலை நேரம் போக மீதி நேரம் என்ன செய்வாய்?"

"அது... உங்களுக்குத் தேவையில்லாத ஒன்று."

"கையெழுத்து வேண்டுமா... இல்லை வேண்டாமா?"

சே... சரியான இரக்கமில்லாத அரக்கனாக இருக்கிறானே என்று அவனைத் திட்டினாள், மனதினுள் அவள்.

"வேண்டும்... பட் எனக்கு வேலையும் முக்கியம்."

"சரி... சனி, ஞாயிறு மட்டும் நீ வந்து சொல்லிக் கொடு.

அது பரவாயில்லைதானே... இல்லை, அதுக்கும் ஏதாவது சாக்கு சொல்வாயா? பாய்ஃபிரெண்டுடன் அவுட்டிங் அது... இது என்று..."

அவள் பல்லைக் கடித்துக் கோபத்தை அடக்கிக் கொண்டாள்.

"நான் சனி, ஞாயிறு வருகிறேன்."

"தட்ஸ் குட். ஸோ டீல் ஓவர்! கொடு அந்த டாக்குமெண்ட்டை..." என்றவன், விட்டுப் போயிருந்த பக்கத்தில் கையெழுத்துப் போட்டான்.

அதை அவளிடம் நீட்டினான்.

அவளை அறியாமல் ஒரு நிம்மதிப் பெருமூச்சு அவளிடம் இருந்து பிறந்தது.

"நீங்கள் கையெழுத்துப் போட்டதற்கு நன்றி ஸார்!" என்றவள், அதை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டாள்.

"கையெழுத்துப் போட்டாகி விட்டது. அதனால், இனி என்னை ஏமாற்றலாம் என நினைக்காதே!

அப்படி நீ செய்ய முயன்றால் இந்தக் காண்ட்ராக்ட்டை நான் உடனடியாக ரத்து செய்து விடுவேன்."

"அதற்கு அவசியம் இருக்காது. ஒப்புக் கொண்டதை நான் ஒழுங்காகச் செய்வேன்."

"தட்ஸ் எ குட் கேர்ல். முதன் முதலாக வீட்டிற்கு வந்திருக்கிறாய்... என்ன குடிக்கிறாய்?

உன் கோபத்தைத் தணிக்க ஜில்லென ஜூஸ் ஏதேனும் சொல்லட்டுமா?"

"எதுவும் வேண்டாம்... தேங்க்ஸ்! இந்தச் சிறுவன் உங்கள் சொந்தமா?"



"ம்... இவனுக்குப் பெற்றோர் இல்லை. ஒரு விபத்தில் இறந்து விட்டனர்.

நான்தான் அதற்குப் பின்பு இவனை வளர்க்கிறேன். ஹி இஸ் மை வேர்ல்ட்.

எனக்கு எல்லாம் இவன்தான். அதைப் போல்தான் நானும் அவனுக்கு..." என்றான் மெதுவாக சரண்.

அவன் குரலில் இருந்த ஏதோ ஒன்று அவளை உருக்கியது.

"ஓ... ஸாரி! அவனைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்றுதான் நான் கேட்டேன்."

"இட்ஸ் ஓ.கே. நீ கேட்டது நல்லதிற்குத்தான். ரோஹித் பற்றி நீ தெரிந்து கொள்வது நல்லதுதான்.

சில நேரம் நான் இவனைச் சரியாக வளர்க்க முடியாமல் போய் விடுமோ என்று பயமாக இருக்கிறது.

ஐ ஃபீல் கில்ட்டி. என்னுடைய பிஸினெஸ் வளர்ச்சியில் இவனை நான் கண்டு கொள்ளாமல் இருக்கிறேனோ என்று அடிக்கடி நினைக்கத் தொடங்கி விட்டேன்..." என்றான் பெருமூச்சோடு சரண்.

ரொம்பப் பழக்கமே இல்லாத தன்னிடம் இவன் ஏன் இதையெல்லாம் பகிர்ந்து கொள்கிறான் என்று ஒரு எண்ணம் அவள் மனதில் தோன்றியது.

இவனை என்னால் புரிந்து கொள்ளவே முடியாதா?

சில நேரம் மெச்சூர்டாக நடந்து கொள்கிறான். சி நேரம் தீ போல் வார்த்தைகளால் சுடுகிறான்.

இதில் எது இவன் நிஜ முகம்?

ஒருவேளை காரியம் ஆவதற்காக நைச்சியமாகப் பேசுகிறானோ? பிஸினெஸ்மேன் என்பதால் பேச்சு அவனுக்குக் கைவந்த கலையோ!

சரி, எது எப்படியோ டாகுமெண்ட் ஸைன் ஆகிவிட்டது. அதனால் காண்ட்ராக்ட் கைநழுவிப் போய் விடவில்லை.

சார்லஸை நிம்மதியாக எதிர்கொள்ளலாம். என் மனதில் எந்தக் குற்ற உணர்வும் இருக்காது.

ஆனால் இவனிடம் எச்சரிக்கையாகத்தான் இருக்க வேண்டும்.

இந்த வீடு பாதுகாப்பானதா? நான் பாட்டுக்கு யோசிக்காமல் சரி என்று மண்டை ஆட்டி விட்டேனே... சனி, ஞாயிறு இவனும் இங்கே வீட்டில் இருப்பானா?

காட்! இங்கே வீட்டில் வேறு யாரும் இருப்பது போல் தெரியவில்லையே... என்று குழம்பினாள் அவள்.

"ஸோ... என்ன யோசனை உனக்கு?"

"இ... இல்லை... இந்த வீட்டில் நீங்களும், ரோஹித்தும் மட்டும்தான் இருக்கிறீர்களா?"

"ஏன்... நீயும் இங்கேயே தங்கலாம் என்று நினைக்கிறாயா? ஐ யாம் ஓ.கே. ஃபார் இட்!" என்று அலட்சியமாகத் தோளைக் குலுக்கினான்.

"நான் அந்த அர்த்தத்தில் கேட்கவில்லை."

"மனதில் இருப்பதை நேரடியாகக் கேள். எனக்கு அதுதான் பிடிக்கும்.



மனதில் ஒன்றை வைத்துக் கொண்டு வெளியில் ஒன்று பேசுவது... பெண்களுக்கே உரிய குணம். நீயும் அதற்கு விதிவிலக்கல்ல..."

"சனி, ஞாயிறு நீங்கள் இங்கு இல்லாமல் இருந்தால் நன்றாக இருக்கும்.

அட்லீஸ்ட், நான் ரோஹித்திற்குப் பாடம் எடுத்து முடிக்கும் வரை..." என்று பட்டென மனதில் இருப்பதைப் போட்டு உடைத்தாள் அவள்.

"ம்... உனக்கு ரொம்ப தைரியம்தான். என் வீட்டில் இருந்து கொண்டு என்னையே அதிகாரம் செய்கிறாய்.

திஸ் இஸ் டூ மச். எப்பவுமே நீ இப்படித்தானா? ரொம்ப தைரியசாலிதான் நீ..." என்றான் லேசான புன்முறுவலோடு சரண்.

'நீ ரொம்ப தைரியசாலி அதிகுட்டி...' என்று தந்தை சொல்வது போல் இருந்தது அவளுக்கு. சட்டென கண்கள் கலங்கின.

அவள் முகம் தந்தையின் நினைவால் வாடியது. அழாமல், தன் உணர்ச்சிகளைச் சிரமப்பட்டு அடக்கினாள் அவந்திகா.

## 5

## வண்ணக் குழம்பாக வானவில் வானில்!

என்
மன
வானில்
வானவில்லாக
நீ
சிரிக்கிறாய்!
என்னை
இயக்குகிறாய்!
வானவில்
போல்
ஏன்
சட்டென
மறைந்தாய்?
நீ
வருவாயா?
காத்துக் கொண்டு
இருக்கிறேன்.

அவந்திகாவிற்கு. அந்தப் புதிய ப்ராஜெக்ட்டிற்குத் தேவையான டிஸைனை அமைப்பதில் அவள் பிசியாக இருந்தாள்.

ஆனால் வாரக் கடைசி வரும் பொழுது மனம் சோர்ந்து போனது. அதற்குக் காரணம் சரண் வீட்டிற்குப் போய், ரோஹித்திற்குப் பாடம் நடத்த வேண்டும் என்ற எண்ணம்தான் என்று அவளுக்குப் புரிந்தது.



ஆனால் வேறு வழியில்லை. ஒத்துக் கொண்டாகி விட்டது. அதனால் வீட்டிற்குப் போய் பாடம் சொல்லித்தான் கொடுக்க வேண்டும்.

வேறு வழியில்லை. ஐ ஹாவ் டு கோ... என்று தன்னையே சமாதானப்படுத்திக் கொண்டாள் அவள்.

வெள்ளிக்கிழமை டின்னர் தயார் செய்து கொண் டிருந்தாள் அவள். மஞ்சு வழக்கப்படி தொலைக்காட்சியில் மூழ்கி இருந்தாள்.

சமையல் அறையில் இருந்தவளைத் திடுக்கிட வைத்தது மஞ்சுவின் அலறல். வேக வேகமாக சமையல் அறையிலிருந்து ஓடி வந்தாள் அவந்திகா.

தலையணையில் முகம் புதைத்து அழுது கொண்டிருந்தாள் மஞ்சு. அதைப் பார்த்து அதிர்ந்தாள் அவந்திகா.

எப்பவும் சிரிப்பும், துள்ளலுமாகத் திரிபவள் மஞ்சு. அவள் ஏன் இப்படி உயிரே போகும்படி அழுகிறாள்... என்ன பிரச்சனை? என்று புரியாமல் திகைத்தாள்.

"மஞ்சு! என்ன ஆச்சு உனக்கு? ஏன் இப்படி அழறே? உடம்பு சரியில்லையா?" என்று அவள் தோளில் கை வைத்து அவளைத் தன்புறம் திருப்பினாள் அவந்திகா.

மஞ்சு தொடர்ந்து அழுது கொண்டே இருந்தாள்.

"என்ன விஷயம் சொல் மஞ்சு! சொன்னால்தானே ஏதேனும் தீர்வு பிறக்கும்."

"இ... இதுக்கு தீர்வே இல்லை அவந்தி!" என்று விசும்பினாள்.

"மஞ்சு... ஃபர்ஸ்ட் டெல் மீ வாட் இஸ் பாதரிங் யூ?"

"போச்சு... என் வாழ்க்கையே போச்சு..." என்று கதறினாள் மஞ்சு.

"நீ சொல்லிட்டு அழுதாயே! ஏன் இப்படிச் சொல்லாமல் கழுத்தறுக்கிற... நான் அசோக்கிற்கு ஃபோன் செய்யவா?"

"வே... வேண்டாம். பிரச்சனையே அவன்தான்..." என்று கண்களைத் துடைத்தாள் மஞ்சு.

அசோக்கும் மஞ்சுவும் ஒருவரை ஒருவர் காதலிக் கிறார்கள். மஞ்சுவின் குடும்பம் நல்ல வசதியுள்ள இடம்.

மஞ்சுவின் அப்பா ரியல் எஸ்டேட் பிஸினெஸில் பெரும் புள்ளி. அவரது சொத்து முழுவதும் ஒரே வாரிசான மஞ்சுவைத்தான் சேரும்.

ஆனால் அசோக் குடும்பம் மத்திய தரத்தைச் சேர்ந்தது. அசோக் இரயில்வேயில் ஆஃபீஸராக இருக்கிறான்.

மஞ்சுவிற்கு சினிமா, கிரிக்கெட் மேல் மோகம் ஜாஸ்தி. அவள் அசோக்கைச் சந்தித்ததே கிரிக்கெட் மைதானத்தில் தான்.

ரஞ்சி டிராஃபி மாட்ச் ஒன்றில் அசோக்கை அவள் சந்தித்தது... எப்படிக் காதலாக மாறியது என்று அவள் சொன்னது அவளுக்கு நினைவுக்கு வந்தது.

[illegible] இப்பொழுது அசோக்தான் பிரச்சனை என்கிறாள். என்னவாக இருக்கும் என்று குழம்பினாள் அவள்.

"அசோக்கோட சண்டையா?"



"இல்லை..."

"அசோக் உன்னைத் திட்டினாரா?"

"இல்லை..."

"அசோக் எங்காவது வெளிநாடு போகப் போகிறாரா? கிரிக்கெட் டூர் போல... இஸ் தேர் ஸம்திங்?

உன்னை அழைத்துக் கொண்டு போக மாட்டேன் என்றாரா?"

"இல்லை..."

"மஞ்சு கமான். நான் என்ன கேம் ஷோவா நடத்திக் கொண்டிருக்கிறேன்?

இருக்கு... இல்லைன்னு பதில் சொல்றே. என்ன விஷயம் சொல்லு...?" என்றாள் அதட்டலாக.

"எங்க வீட்டில ஒரு வழியா எனக்கும் அசோக்குக்கும் திருமணம் செய்ய ஒத்துக்கிட்டாங்க.

அதுக்குக் காரணமே அசோக் நல்ல கிரிக்கெட் பிளேயர் என்பதால்தான்."

"ஆமாம்... எனக்குத் தெரியுமே மஞ்சு! இப்ப என்ன அதனால பிரச்சனை?"

"இந்தியா – பாகிஸ்தான் ஒரு நாள் போட்டி அடுத்த வாரம் சென்னையில நடக்கப் போகுது."

"யெஸ் ஐ நோ. பேப்பர், ரேடியோ, டி.வின்னு எல்லாத்திலேயும் அதைப் பற்றிதானே பேச்சு...

அதுக்கு என்ன இப்ப?"

"அசோக்கும் அந்த மேட்சில விளையாடறதா இருந்தது...

பட்... இப்ப... இப்ப ஹி காண்ட் ப்ளே!" என்று விசும்பினாள் அவள்.

"ஏய் மஞ்சு அழாதே... அழாம சொல்லு. ஏன் அசோக்கால விளையாட முடியாது?

அவருக்கு உடம்புக்கு ஏதாவது..." என்று இழுத்தாள் அவந்திகா.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை. கல்லாட்டம் நல்லாத்தான் இருக்கார்."

அவளின் பேச்சு அவந்திகாவிற்கு சிரிப்பை வரவழைத்தது.

"அப்புறம் என்ன ப்ராப்ளம் சொல்லு?"

"இவருக்குப் பதிலாக தேர்வுக் குழு இன்னொரு பிளேயரைக் கடைசி நிமிஷத்தில தேர்வு செய்திருக்கிறது..."

"காட்! ஹி இஸ் ஸோ அன் லக்கி. இதற்கு யார் என்ன செய்ய முடியும் மஞ்சு?"

"இது மெரிட்டால் செய்த தேர்வு என்றால் பரவாயில்லை. பட் இப்ப கிரிக்கெட் கேம்ப்ளிங் ஆகிவிட்டது.

பணம் பேசுகிறது அங்கே... அதனால்தான் அசோக் தொடர்ந்து நன்றாக விளையாடியும் அவருக்கு வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை..." என்றாள் அழுதபடியே மஞ்சு.

"ம்... அவர் வாய்ப்பைத் தட்டிப் பறித்த புண்ணியவான் யார் மஞ்சு?"



"அவர் பெயர் சரண். ஹி இஸ் எ பிஸினெஸ்மேன். அசோக்கிற்குப் பதிலாக அவர்தான் தேர்வாகி இருக்கிறார்."

"எ... என்னது சரணா? அவர் போட்டோ ஏதாவது இருக்கிறதா?"

"ஏய்... கிரிக்கெட்டில் உன் அறிவு ஜீரோதான். பட் ஹி இஸ் எ பிஸினெஸ் மேக்னெட். அவரைத் தெரியாதா உனக்கு?

ஆளும் பார்க்க நன்றாக இருப்பார். போன 'ஸ்போர்ட்ஸ் ஃபார் யூ' மேகஸினில் கூட அவர் போட்டோ வந்திருந்ததே..." என்று சொல்லியபடியே தன் மொபைல் மூலம் இண்டர்நெட்டினுள் சென்றாள் மஞ்சு.

அவள் கைபேசியின் திரையில் சில நொடிகளுக்குப் பின்பு சரண் சிரித்தபடி தெரிந்தான்.

ஒரு கறுப்பு கூலிங் கிளாஸும், கவ்பாய் தொப்பியும் அவன் வசீகரத்தை அதிகரித்தது. 'காட்! இவனா அவன்!' என்று முணுமுணுத்தாள் அவந்திகா.

"என்னடி புதுப்பட டைட்டில் எல்லாம் நீ சொல்றே?" என்றாள் மஞ்சு.

"மஞ்சு! எனக்கு இவனைத் தெரியும்..." என்று நடந்ததை எல்லாம் அவளிடம் விளக்கமாகச் சொன்னாள் அவந்திகா.

"ஏய்! என்னடி சினிமா மாதிரி இருக்கு... சரண் கொஞ்சம் ஸ்டைல் பேர்வழி!

நீ கொஞ்சம் ஜாக்கிரதையாக இரு."

"அதெல்லாம் நான் சமாளிச்சுப்பேன் மஞ்சு. ஐ யாம் வொரிட் அபவுட் யூ!

அசோக் இந்த மாட்ச் விளையாடுவது ரொம்ப முக்கியம்... அப்படித்தானே!"

"யெஸ் அவந்தி! எங்கள் திருமணம் நடப்பதும் நடக்காததும் இந்த மேட்ச்சைப் பொறுத்துதான்...

அசோக் இதில் தேர்வானால் போதும். நிச்சயமாக எங்கள் திருமணம் நடக்கும்."

"ம்... ஏன்டி இப்படிச் செய்தால் என்னவாகும்?"

"என்னடி...? ஒழுங்கா விவரமா சொல்!"

"சரண் அன்று மாட்ச்சிற்கு வராவிட்டால் என்ன நடக்கும்?"

"அசோக்தான் விளையாடுவான். ஹி இஸ் தி ஒன் நெக்ஸ்ட் இன் லைன்."

"ஸோ... அன்று சரண் விளையாடக் கூடாது."

"எப்படி அவந்தி அது முடியும்?"

"அப்படித்தான் நடக்க வேண்டும் மஞ்சு! அதுக்குப் பிளான் போடணும்.

கிரிக்கெட் மாட்ச் ஞாயிற்றுக்கிழமை என்பதால் வசதிதான் நமக்கு..."

"ஏ... என்ன சொல்றே அவந்தி?"

"நான் ரோஹித்திற்கு கம்ப்யூட்டர் கிளாஸ் எடுக்க சனி, ஞாயிறு போவேன்.



சரண் வீட்டில்தான் கம்ப்யூட்டர் கிளாஸ். ஸோ... ஐ நீட் டு ப்ளான் ஸம்திங்க். ஸோ தட் சரண் இஸ் இன் ஹவுஸ்!"

"என்னடி செய்யப் போறே?"

"ம்... அதுதான் எனக்கும் தெரியலை!"

"ஏய்! ஹி இஸ் எ பிக் ஷாட். நீ... எனக்காக ரிஸ்க் எடுக்காதே..."

"யானையை அடக்குவதே ஒரு சின்ன அங்குசம்தான். நீ கண்கலங்கி அழுது கொண்டிருப்பதை என்னால் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது மஞ்சு!"

"தேங்க்ஸ் அவந்தி! ஆனால் எனக்கு பயமாத்தான் இருக்கு.

நீ சரணை ரொம்ப சாதாரணமாக எடை போடாதே. ஹி ஹாஸ் எவ்ரிதிங்க். மணி, பவர் அண்ட் சார்ம்!"

"ம்... தெரியும் மஞ்சு... நீ கவலைப்படாதே!"

மஞ்சுவின் முகம் தெளிவானதைப் பார்த்தவுடன் அவள் முகத்தில் நிம்மதிப் பூக்கள் பூத்தன.

அடுத்து என்ன செய்வது என்று யோசிக்கத் தொடங்கினாள் அவந்திகா.

## 6

அருவியில்
நீ
நனைகிறாய்!
தண்ணீர்
புனிதமானது!

பூங்காவில்
நீ
நடக்கிறாய்!
பூக்கள்
குதூகலமாகப்
புன்னகை
செய்கின்றன!
நேற்று
இல்லாத
மாற்றங்கள்
எல்லாம்
உன்னாலே!
ஏதும்
தெரியாதது
போல் நீ
போகிறாய்!

**ச**ரணை எப்படியாவது கிரிக்கெட் விளையாட முடியாமல் தடுக்க வேண்டும். ஆனால் எப்படி அவனைத் தடுப்பது என்று புரியாமல் குழம்பினாள் அவள்.

யோசித்து யோசித்துக் களைத்துப் போனாள் அவள்.

"அவந்தி! ஆர் யூ ஓகே. உன்னை இரண்டு முறை பெயர் சொல்லி அழைத்தேன். நீ கவனிக்கவே இல்லை..." என்றான் சார்லஸ்.



"ஓ... ஸாரி ஏதோ யோசனை?"

"எனி ப்ராப்ளம்?"

"அதெல்லாம் ஒன்றும் இல்லை."

"ப்ராஜெக்ட் பற்றிய நினைப்பா?"

"ம்... அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்..."

"பை தி பை... ரொம்ப தேங்க்ஸ் அவந்தி..."

"எதுக்கு?"

"ம்... அம்மா இஸ் ஓகே நவ். கம்ப்ளீட் செக்அப் செய்தாகிவிட்டது.

சுகர் இருக்கு. இப்ப ட்ரீட்மெண்ட் எடுத்திட்டு இருக்காங்க. சரியான சமயத்தில் நீ எனக்கு உதவி செய்தாய்.

அதனால்தான் நான் அம்மாவை நன்றாகக் கவனிக்க முடிந்தது. அதோடு சரணின் காண்ட்ராக்ட்டும் ஈஸியாக முடிந்தது. தேங்க்ஸ் டு யூ அவந்தி..."

"இட்ஸ் ஓகே சார்லஸ்!" என்றாள் சுவச்சமாக அவள்.

"அம்மா உன்னை வீட்டிற்கு அழைத்தார்கள். வர்ற ஞாயிற்றுக்கிழமை டின்னர் வர முடியுமா?"

"ஞாயிற்றுக்கிழமையா...?" என்று பதறினாள்.

"கூல்! ஸண்டே உனக்கு வேற அப்பாயிண்ட் மெண்ட்ஸ் இருந்தால் இன்னொரு நாள் வா... வீட்டுக்கு..."

"ஷ்யூர் சார்லஸ்!"

"அப்புறம் சரண் ஏதும் பிரச்சனை செய்யவில்லையே அன்றைக்கு...?"

"கொஞ்சம் கோபமாகத்தான் இருந்தார் அவர். நீ காண்ட்ராக்ட் ஸைன் ஆகும் பொழுது இங்கே இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்து ஏமாற்றம் அடைந்ததால் காச் மூச் எனக் கத்தினார்."

"காட்! உன்னைக்கூட கத்தத் தோன்றுமா யாருக்காவது?"

அவள் அதைக் கேட்டு கலகலவெனச் சிரித்தாள்.

"ஏன் அப்படிச் சொல்றே சார்லஸ்?"

"யூ ஆர் ஆன் ஏஞ்சல் அவந்தி. உன் முகத்தில் ஏதோ ஒரு காந்த சக்தி கலந்த கருணை தெரிகிறது. உன் உதட்டில் தெரியும் புன்னகை... உன் முகத்திற்கு ப்ளஸ்!"

"சார்லஸ் யூ ஆர் ஸீயிங் டு மெனி ஃபிலிம்ஸ். ஐ பிலீவ்!" என்றாள் கண்களில் குறும்பு துள்ள அவந்திகா.

"அவந்தி கமான். நான் சொல்வதெல்லாம் உண்மை. உண்மையைத் தவிர வேற ஏதும் இல்லை... என்று தலையில் அடித்து சத்தியம் செய்தால் நம்புவாயா?" என்று சொல்லிக் கொண்டே அவள் தலையில் கை வைத்தான் சார்லஸ்.

"எக்ஸ்கியூஸ் மீ!" என்று சரணின் குரல் கேட்க, திடுக்கிட்டு அறை வாசலை நோக்கிப் பார்வையைப் பதித்தாள் அவள்.

அங்கே அறை வாசலில் அவன் நின்று கொண்டிருந்தான்.

"ப்ளீஸ்... கம் ஸார்!" என்று சார்லஸ் அவனை வரவேற்றான்.



"ஸாரி... ஹோப் ஐ டிட் நாட் டிஸ்டர்ப் யூ. வரவேற்பறையில் யாரும் இல்லை. அதனால்தான் நான் இங்கே நேரடியாக, முன் அறிவிப்பின்றி வர வேண்டியதாயிற்று..."

"யூ ஆர் அவர் டாப் க்ளையண்ட் ஸார். இட்ஸ் அவர் ப்ளஷர் டு ஹாவ் யூ ஹியர் எனி டைம்!" என்றான் சார்லஸ்.

ஏதும் சொல்லாமல் கணினியில் பார்வையைப் பதித்தாள் அவள். அவனை அங்கே எதிர்பார்க்காததால் அவள் இதயம் படபடத்தது.

மஞ்சுவின் அழுகை தோய்ந்த முகம் அவள் கண் முன்னே நிழலாடியது. தன்னைச் சமாளித்துக் கொண்டு கணினியில் கவனம் செலுத்த முயன்றாள் அவள்.

"ஹவ் கேன் ஐ ஹெல்ப் யூ ஸார்!" என்றான் சார்லஸ்.

"சார்லஸ்! என்னோட குரூப் ஆஃப் கம்பெனிஸிற்கு விளம்பரப் படம் ஒன்று தயாரிக்கணும்.

இட்ஸ் எ ஜாயிண்ட் வென்ச்சர். ஐ வாண்ட் டு கிவ் இட் டு யுவர் க்ரூப்."

"ஓ... கண்டிப்பா ஸார்! என்ன பிஸினெஸ் ஸார்?"

"ம்... இட்ஸ் அபெளட் ஜுவல்லரி. கோல்ட் ஜுவல்லரி!

ஸோ... யாராவது பெண்கள் இந்த ப்ராஜெக்ட்டில் ஒர்க் செய்தால் நன்றாக இருக்கும்."

"நோ ப்ராப்ளம் ஸார். அவந்திகா வில் பி தி ரைட் சாய்ஸ் ஃபார் திஸ்."

"பட் சார்லஸ்! ஐயாம் ஒர்க்கிங் இன் தி என்.ஜி.ஓ. ப்ராஜெக்ட் ஆல்ரெடி."

சரணுடன் ஒர்க் செய்வதில் அவளுக்குப் பிரிய மில்லை. அதனாலேயே தட்டிக் கழிக்க முயன்றாள்.

“டோண்ட் ஒர்ரி அவந்தி! ஐ வில் ஹெல்ப் யூ ஃபார் தி என்.ஜி.ஓ. ஒர்க்!” என்றான் சார்லஸ்.

அதற்கு மேல் மறுத்துப் பேச அவள் மனம் இடம் கொடுக்கவில்லை. அதுவும் சரண் முன்னிலையில்.

அதனால் ‘சரி...’ என்பது போல் தலையசைத்தாள் அவள்.

“ஓ.கே. சார்லஸ் பை!” என்று அங்கிருந்து வேகமாக வெளியேறினான் சரண்.

“வாவ்! இட்ஸ் கோயிங் டு பி எ நைஸ் டீல்!” என்றான் உற்சாகமாக சார்லஸ்.

சுரத்தே இல்லாமல் ‘உம்...’ கொட்டினாள் அவள்.

“ஆர் யூ ஓகே அவந்தி! சரண் இஸ் எ பிக் ஷாட். நீ அதை மனதில் வைத்துக் கொள்.”

“பட்... யார் எந்த ப்ராஜெக்ட்டிற்கு வேலை பார்க்க வேண்டும் என்று சொல்லும் அதிகாரத்தை அவருக்கு யார் கொடுத்தார்கள்?”

“ம்... அவந்தி! உனக்கென்ன ஆச்சு? நீ எப்பவும் கூலாக இருப்பாய்.

இன்று ஏன் இப்படிப் படபடக்கிறாய்? சரணின் கோரிக்கை நியாயமானது. ஹி இஸ் ஸ்பெண்டிங் மணி ஃபார் தி ப்ராஜெக்ட்.

ஹி ஹாஸ் ஆல் ரைட்ஸ் டு ஆஸ்க் ஃபார் தி பெஸ்ட் பெர்ஸன்ஸ் ஃபார் ஹிஸ் ஒர்க்.”



“சரி சார்லஸ்! முடிவு எடுத்தாகி விட்டது. ஐ வில் ஒபே இட்.”

“அவந்தி! நீ முழு மனதோடு ஈடுபட்டால்தான் அவுட்கம் நன்றாக இருக்கும். அதனால் ஐ நீட் யூவர் கோவாபரேஷன்!”

சார்லஸிற்கு அவளைக் காட்டிலும் அனுபவம் அதிகம். அவளுக்கு வேலையைக் கற்றுக் கொடுத்தவன் அவன்.

அதனால் இதற்கு மேல் அவனிடம் முறைத்துக் கொண்டிருப்பது நன்றாக இருக்காது. அதனால் இதற்கு ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும் என்று தீர்மானித்தாள் அவள்.

“ஷ்யூர் சார்லஸ்! ஐ வில் கிவ் மை பெஸ்ட் ஃபார் திஸ் ப்ராஜெக்ட்.”

“தட்ஸ் குட். அந்த என்.ஜி.ஓ. ப்ராஜெக்ட்டை நான் எடுத்துக்கிறேன் அவந்தி!

ஸோ தட் யூ கேன் ஃபோகஸ் ஆன் திஸ் அலோன்!”

“இ... இல்லை சார்லஸ். ஐ கேன் மேனேஜ். ஐ லைக் தி என்.ஜி.ஓ. ப்ராஜெக்ட்!”

“அதனால்தான் சொல்கிறேன். நீ உன் முழு கவனத்தையும் உன்னை அறியாமல் இதில் செலுத்துவாய்.

அது தப்பு என்று நான் சொல்லவில்லை. ஆனால் சரண் ப்ராஜெக்ட் இஸ் வெரி இம்பார்ட்டெண்ட் ஃபார் அஸ் ஃப்ரம் மணி வேல்யூ!”

“புரிகிறது சார்லஸ். நான் சரண் ப்ராஜெக்ட்டில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும் என்று நீ நினைக் கிறாய். ஐ காட் யுவர் பாயிண்ட்.”

"உனக்கும் சரணிற்கும் ஏதேனும் பிரச்சனையா என்ன?"

"இ... இல்லை. நத்திங்... ஏன் கேட்கிறாய்?"

"யூ வேர் வெரி கோல்ட் வென் ஹி வாஸ் தேர். உன் கண்களில் ஏதோ ஒரு கோபம் தெரிந்தது.

அதனால்தான் கேட்கிறேன். ஹோப் எவ்ரி திங்க் இஸ் ஓகே."

"ஓ... அதெல்லாம் ஏதும் இல்லை. அந்த என்.ஜி.ஓ. ப்ராஜெக்ட் என் மனதிற்குப் பிடித்த ஒன்று.

அதைச் சரணால் இழக்க வேண்டி உள்ளதே என்ற கோபம்தான். வேறு ஏதும் இல்லை.

ஐயாம் ஸாரி. நான் அப்படி நடந்து கொண்டிருக்கக் கூடாது."

"இட்ஸ் ஓ.கே. அவந்தி! சில நேரம் இப்படி ஆவது உண்டு.

வாழ்க்கையிலும் இது மாதிரி அனுபவங்கள் நிறைய ஏற்படும்.

அந்த என்.ஜி.ஓ. ப்ராஜெக்ட்டை நீ முடித்த வரையில் எனக்கு மெயில் அனுப்பு.

நீ விட்ட இடத்தில் இருந்து நான் தொடர்கிறேன். சந்தேகம் எல்லாம் உன்னிடம்தான் கேட்பேன்..." என்றான் புன்முறுவலோடு அவன்.

"சரி!" என்று அவளும் பதிலுக்குப் புன்னகைத்தாள்.



# 7

அமுதைப்
பொழிந்து
கொண்டு
இருக்கிறது
இரவு!
ஆனால்
எனக்கு
மட்டும்
அது
இனிக்கவில்லை!
நட்சத்திரப்
படுக்கையில்
நிலா
சுகமாகத்
தூங்குகிறது!
ஒரு
பெருமூச்சு
என்னை
அறியாமல்
பிறக்கிறது!
என் தூக்கத்தையும்
நீ திருடி விட்டாய்!

அந்த வாரம் இறுதி நாள் ஞாயிற்றுக்கிழமை நெருங்கியவுடன் அவந்திகாவின் மனதில் பயம் வேர் விட்டுப் படர்ந்தது.

மஞ்சுவிற்கு நல்லது செய்ய வேண்டும் என்று அவள் மனம் பரபரத்தது.

எப்படிச் செய்யப் போகிறோம் என்று புரியாமல் திகைத்தாள் அவள்.

மஞ்சு அவளுடைய பெற்றோரைப் பார்க்க ஊட்டி சென்றிருந்ததால் அவள் அறை அமைதியாக இருந்தது.

மஞ்சுவும், தானும் பெங்களூரில் ஒன்றாகப் படித்தது, ஜாலியாகத் திரிந்தது எல்லாமே அவள் நினைவுக்கு வந்தன.

வேறு யாராவதாக இருந்தால் அப்பா பற்றிய உண்மை தெரிந்தவுடன் 'சீ... போ! நீயும் வேண்டாம்... உன் ஃபிரெண்ட்ஷிப்பும் வேண்டாம்...' என்று ஒதுக்கித் தள்ளி இருப்பார்கள்.

பட்! மஞ்சு அந்த மாதிரி இல்லை. நட்பை உயிராக மதிப்பவள். அவள் இருந்ததால்தான் கஷ்டமான நினைவு களை ஜீரணித்துக் கொண்டு வாழ்க்கையை நடத்த முடிகிறது.

அவளுக்கு நான் ரொம்பக் கடமைப்பட்டுள்ளேன். என் கடனைத் தீர்க்க ஒரு வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது.

மஞ்சுவும் அசோக்கும் திருமணம் செய்து கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

அதற்கு நான் ஒரு கருவியாக இருக்கப் போகிறேன்.

இதைவிட ஒரு நல்ல அருமையான சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்காது.



நான் அதை எப்படியாவது பயன்படுத்த வேண்டும் என்று தீர்மானித்தாள் அவந்திகா.

தொலைக்காட்சியில் ஏதோ ஒரு படம் ஓடிக் கொண்டிருந்தது. மஞ்சு இருந்தால் தொலைக்காட்சியை விரும்பிப் பார்ப்பாள்.

சரி, அப்படி என்னதான் இருக்கிறது இதில்... நாமும் பார்க்கலாமே என்று ஒரு எண்ணம் தோன்ற திரையில் பார்வையைப் பதித்தாள் அவள்.

திரைப்படத்தில் வந்த காட்சி அவள் மனதில் சட்டென ஒரு எண்ணத்தைத் தோற்றுவித்தது. இப்படிச் செய்தால் என்ன என ஒரு பொறி மூளையில் தோன்றியது.

கண்மூடி யோசித்தாள் அவள். இப்படிச் செய்தால் சரண் நிச்சயமாக வெளியே போக மாட்டான். என் மேல் அவனுக்கு சந்தேகம் வராது.

குட்... இப்படித்தான் செய்ய வேண்டும். மஞ்சுவிடம் இதைப் பற்றிச் சொல்லலாமா?

வேண்டாம்... இதை அவள் ஒத்துக் கொள்ள மாட்டாள்.

தீர்மானம் செய்தாலும் உள்ளூர பயமாகத்தான் இருந்தது அவளுக்கு. தன்னைச் சமாளித்துக் கொண்டு நடக்க வேண்டியவற்றில் மனதைப் பதித்தாள் அவள்.

அன்றிரவு தூங்காமல் மறுநாள் நடக்கப் போவதையே நினைத்துக் கொண்டிருந்ததால், அடுத்த நாள் காலை நேரம் போனது தெரியாமல் தூங்கிக் கொண்டிருந்தாள் அவள்.

சுவர்க் கடிகாரம் மணி ஒன்பது என்று உறுதி செய்தது.

சே... இவ்வளவு நேரம் தூங்கி விட்டேனே... எனத் தன்னையே கடிந்து கொண்டாள் அவள்.

குளித்து விட்டு வந்தவள், தன்னிடம் இருப்பதிலேயே நல்ல சுடிதார் ஒன்றை எடுத்து அணிந்து கொண்டாள்.

வேக வேகமாகப் பால் பாயசம் செய்தாள். அதை ஜாக்கிரதையாக ஒரு டப்பர்வேர் டம்ளரில் ஊற்றினாள்.

கைப்பையில் அதைப் பத்திரப்படுத்தினாள். பின்பு கைப்பையின் உள்அறையில், தனக்குத் தேவையானது இருக்கிறதா என்று சரி பார்த்துக் கொண்டாள்.

அவள் இதயம் படபடத்தது. 'கூல் டவுன்!' என தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள் அவந்திகா.

பிரெட், ஜாம் ஒரு ஸ்லைஸ் வாயில் போட்டுக் கொண்டு வீட்டை விட்டுக் கிளம்பினாள். கதவைப் பூட்டும் பொழுது மீண்டும் ஒரு அச்சம் அவளுள் படர்ந்தது.

சமாளித்துக் கொண்டு வேகமாக வெளியேறினாள் அவள். ஸ்கூட்டியை கிளப்பும் பொழுது அவள் நிதானமாகவே இருந்தாள்.

ரோஹித் வீட்டை அடைந்தாள் அவந்திகா.

வாசல் கேட்டில் இருந்த செக்யூரிட்டி அவளைப் பார்த்து ஒரு சலாம் அடித்தான்.

"வாங்க மேடம்! குட் மார்னிங்..." என்றபடியே கதவைத் திறந்தான்.

"குட் மார்னிங்... ஸார் இருக்கார்தானே?"

"ம்... இருக்கார் மேடம். ரோஹித் தம்பி இப்பத்தான் நீச்சல்குளத்திற்குப் போயிருக்கு...



ஐயாவும் அங்கேதான் இருப்பார் மேடம்!"

"ஓ... அப்படியா!" என்று சொல்லிபடியே ஸ்கூட்டியை நிறுத்தினாள் அவள்.

வீட்டின் தோட்டத்தில் நிறைய மரங்கள் இருந்தன. மரங்களுக்குப் போட்டியாக வண்ண மலர்கள் செடிகளில் பூத்து மணம் பரப்பிக் கொண்டிருந்தன.

இங்கு வரும் பொழுது எல்லாம் நான் பதட்டத்தில் இருக்கிறேன்.

முதல் தடவை வந்த பொழுது சரணின் கையெழுத்து கிடைக்குமா, கிடைக்காதா என்ற பதட்டம்...

இப்பொழுது நான் மனதில் நினைத்திருக்கிற ப்ளான் நிறைவேற வேண்டும் என்ற பதட்டம்...

அதனால் இங்கே உள்ள சூழலை, இந்தக் குளுமையை, நாசியில் நிறையும் மணத்தை என்னால் முழுமையாக ரசிக்க முடியவில்லை என்று பெருமூச்சு விட்டாள் அவள்.

வீட்டின் முன்புறம் இருந்த காலிங்பெல்லை அடிக்கலாமா, வேண்டாமா என்று அவள் யோசித்துக் கொண்டிருந்த பொழுதே கதவு திறந்தது.

கதவைத் திறந்தது சரண்தான். ஸ்விம்மிங்பூலில் இருந்து வந்திருப்பான் போல... தலையில் நீர்த்துளிகள் தெரிந்தன.

நாக்கு சட்டென ஒட்டி உலர்ந்தது போல் இருந்தது அவளுக்கு. கண்கள் படபடத்தன.

"ஹலோ அவந்திகா! உள்ளே வாங்க..."

"ஹலோ!" என்று முணகினாள் அவள்.

"என்ன ஆச்சு காலையில் சாப்பிடவில்லையா?"

"இ... இல்லை... சாப்பிட்டேனே... ஏன்?"

"எனர்ஜியே இல்லாமல் ஹலோ சொன்னாய். அதோடு முகம் வேறு வெளுத்துப் போயிருக்கு... அதான் கேட்டேன்..." என்றான் அமர்த்தலாக.

'எல்லாத்துக்கும் காரணம் நீதான்' என்று அவனை மனதிற்குள் திட்டினாள் அவள்.

"ஹ... லோ... ஆர் யூ ஓகே!" என்றான்.

தன்னைச் சமாளித்துக் கொண்டு புன்னகை புரிய முயன்றாள் அவள்.

"யெஸ்..." என்றாள் மெல்லிய குரலில்

"ஸ்கூட்டியில் வருவது சோர்வாக இருக்கிறதா?"

"இ... இல்லை. ஐ யாம் யூஸ்ட்டு இட்."

"அடுத்த வாரத்தில் இருந்து நான் கார் அனுப்பறேன்..."

"நோ... நோ... வேண்டாம்."

"இட்ஸ் ஓ.கே. இதுதான் ரோஹித் அறை. இன்னும் ஐந்து நிமிடத்தில் அவன் வந்து விடுவான்."

"வெளியே போயிருக்கானா ரோஹித்?"

"இல்லை. ஹி இஸ் ஹாவிங் ப்ரேக்பாஸ்ட். வாட் அபௌட் யூ?

லைக் டு ஜாயின் ஹிம் அண்ட் மீ!"

"இ... இல்லை."



"ஏன் இவ்வளவு பதட்டம்? ஐயாம் ஹங்க்ரி. பட் உன்னைச் சாப்பிட்டு விட மாட்டேன்."

அவள் அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள்

"நீங்க சாப்பிட்டு முடித்தபின் வாருங்கள். நான் இங்கே இருக்கிறேன்..."

"ஓகே!" என்று அங்கிருந்து உள்ளே சென்றான் அவன்.

அவளிடமிருந்து ஒரு பெருமூச்சு பிறந்தது. கடவுளே! நான் பதட்டமில்லாமல் இருக்க வேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள்.

அடுத்த ஐந்து நிமிடத்தில் ரோஹித்தும், சரணும் அங்கு வந்தனர்.

"ஹாய் ரோஹித்!"

"ஹலோ...!"

"ரோஹித்! ஷி இஸ் யுவர் கம்ப்யூட்டர் மிஸ். ஷோ ஹர் யுவர் ரூம்."

"ஓகே அங்கிள்!"

"இதைக் கொஞ்சம் ஃபிரிட்ஜில் வைக்க முடியுமா?" என்று டப்பர்வேர் டம்ளரை அவனிடம் நீட்டினாள் அவள்.

அவள் கைவிரல்கள் நடுங்கின. காய்ந்த உதட்டை நாவால் ஈரப்படுத்திக் கொண்டாள் அவள்.

"என்ன இது?"

"இ... இன்னிக்கு எனக்கு பர்த்டே. அதனால் உங்களுக்கும் ரோஹித்திற்கும் பால் பாயசம் கொண்டு வந்தேன்."

"வாவ்! பிறந்த நாள் வாழ்த்துக்கள். ஸோ நைஸ் ஆஃப் யூ!

எனக்கும் ரோஹித்திற்கும் பாயசம் செய்து கொண்டு வந்ததற்கு நன்றி..." என்றவன், அவளின் கைகுலுக்க தன் கையை நீட்டினான்.

அவன் நீண்ட கை விரல்களுள் அவளின் மெல்லிய விரல்கள் தஞ்சமடைந்தன.

"தேங்க்ஸ்..." என்றாள் மெல்லிய குரலில் அவள்.

"பாயசத்தை இப்பவே குடிக்கலாமே!" என்று அதைத் திறக்கப் போனான்.

அவள் பதறினாள்.

"இப்ப... இப்ப... வேண்டாமே!"

"ஏன்... குடிக்க நல்ல நேரம் பார்க்கணுமா?"

"இல்லை. கொஞ்ச நேரம் ஃபிரிட்ஜில் இருந்தால் ஜில்லென நன்றாக இருக்கும். அதற்குத்தான் சொன்னேன். ப்ளீஸ்!"

"ஓ... அப்படியா! சரி..." என்று சொல்லியபடியே அதை ஃபிரிட்ஜில் வைத்தான் அவன்.

அவள் முகத்தில் நிம்மதி ரேகைகள் படர்ந்தன.

"ஆன்ட்டி! கம்ப்யூட்டர் அங்கே அந்த ரூமில இருக்கு!"

ரோஹித்தைத் தொடர்ந்தாள் அவள். அறையின் மூலையில் இருந்தது கம்ப்யூட்டர்.

"ம்... நீ இதில என்னவெல்லாம் செய்வாய் ரோஹித்?"



"ஐ லைக் டு ப்ளே கேம்ஸ்."

"ஓ... அப்படியா! வாட் கேம்ஸ்?"

"ஸ்பைடர்மேன், டாம் அண்ட் ஜெர்ரி, அப்புறம் எப்பயாவது ஜாக்கிசான்..."

"அப்படியா... எங்கே எனக்கு ஒரு கேம் விளையாடிக் காட்டு பார்க்கலாம்..."

இதெல்லாம் எனக்கு ஜுஜுபி என்ற ரேஞ்சில் ரோஹித் ஸ்பைடர் மேன் கேம் ஒன்றைத் திரையில் தோற்றுவித்தான்.

அவன் கைவிரல்கள் ரொம்ப அனாயாசமாக கீபோர்டில் விளையாடின. ஸ்பைடர்மேனின் சாகசங்களைத் திரையில் பார்த்து பிரமித்தாள் அவள்.

"எப்படி இவ்வளவு சூப்பரா விளையாடற ரோஹித்! இட்ஸ் அமேஸிங்..."

"போர் அடிக்கும்போது எனக்கு இதுதான் ஃபிரெண்ட்."

"நீ இப்ப எந்தக் கிளாஸ் படிக்கிறே?"

"ம்... நான் ஃபர்ஸ்ட் ஸ்டாண்டர்ட்."

"குட்! உன் ஸ்கூலில் உன் ஃபிரெண்ட்ஸ் யார்?"

"ஐ டோண்ட் ஹாவ் எனி ஒன்..."

"பட் வொய் ரோஹித்?"

அவன் ஏதும் பதில் சொல்லவில்லை. அவன் கண்களில் பயம் கலந்த சோகம் இருப்பது போல் அவளுக்குத் தோன்றியது.

முதல் முறை பார்க்கும் பொழுது, அவன் செடி நட்டு வைக்க வந்தபொழுது கூட அவன் கண்கள் இதே போல்

ஒரு உணர்வைப் பிரதிபலித்தது போல் அவளுக்குத் தோன்றியது.

அவன் தலைமுடியை விரல்கள் மூலம் கோதி நேர்ப்படுத்தினாள் அவந்திகா.

"சரி... ரோஹித்! நாம் வேறு ஏதாவது செய்யலாமா கம்ப்யூட்டரில்... லைக் பெயிண்டிங்!"

"ஓ... நோ ஆன்ட்டி! இட்ஸ் போர்..."

"அப்ப வேற என்ன செய்யலாம்?"

"ஐ வாண்ட் டு ஸ்லீப்."

"ஓ... ஷ்யூர்! இட்ஸ் குட் டு ஸ்லீப் கம்."

"இதுதான் என் பில்லோ. ஆன்ட்டி! நீங்களும் படுத்துக்கோங்க..."

"ம்... நீ தூங்கு ரோஹித். நான் உனக்குக் கதை சொல்கிறேன்."

அடுத்த ஐந்து நிமிடத்தில் நல்ல தூக்கத்தில் ஆழ்ந்து விட்டான் ரோஹித்.

பாவம்! இந்தக் குட்டிப் பையனின் மனதில் ஏதோ ஒரு சோகம் ஒளிந்து கொண்டிருக்கிறது.

அது என்னவென்று தெரியவில்லை. சட்டென அப்பாவின் நினைவில் அவள் கண்கள் கலங்கின. நிலவொளியில் கதை சொல்லி, தன்னை மொட்டை மாடியில் தூங்க வைத்த தந்தையின் நினைவில் கண்கள் பனித்தன.

தன்னைச் சமாளித்துக் கொண்டு அறையில் இருந்து வெளியேறினாள் அவள்.



# 8

ஒரு
அழகான
மாலைப்
பொழுது!
வீதியில்
மழை
நீர்
ஓடிக்
கொண்டு
இருந்தது!
சாரல்
மழையை
ரசித்தபடி
நான்!
மின்னல்
போல்
நீ
நடந்து
வந்தாய்!
என் மனதினுள்
மழை தொடங்கியது!

"ஓ... ஸாரி! ரோஹித் தூங்கி விட்டானா?"

ரோஹித் படுக்கையில் உட்கார்ந்திருந்த அவந்திகா சட்டென எழுந்தாள்.

"ஆமாம். ஹி வாஸ் டயர்ட். தூங்குவது நல்லதுதானே!"

"யெஸ்... எல்லோருக்கும் நல்லதுதான் தூக்கம்."

"சரி... நான் கிளம்பறேன்..."

"ஓ... தேங்க்ஸ் ஃபார் கம்மிங். அடுத்த வாரம் நீங்கள் ஸ்கூட்டியில் வந்து கஷ்டப்பட வேண்டாம்.

ஐ வில் ஸெண்ட் மை கார்."

"இல்லை... வேண்டாமே!"

"ப்ளீஸ் அக்ஸெப்ட் இட். ரோஹித் அப்பா, அம்மாவை இழந்தவன்.

இஃப் ஹி இஸ் ஹாப்பி, ஐ கேன் ஹாவ் எ பீஸ்ஃபுல் லைஃப்."

"சரி, நான் காரிலேயே வருகிறேன்."

"தட்ஸ் குட். தேங்க்ஸ் எ லாட்!"

"அப்புறம்... பாயசம் உங்களுக்கு?"

"ஓ... ஐ ஃபர்காட்."

"இருங்க... நான் எடுத்துக் கொண்டு வருகிறேன்" என்று வேகமாக ஃப்ரிட்ஜ் நோக்கிச் சென்றாள்.

டப்பர்வேரில் இருந்ததை ஒரு கிண்ணத்தில் ஊற்றினாள். பின்பு ஒரு ட்ரேயில் வைத்து ஏந்திக் கொண்டு வந்தாள்.



ஏ.ஸி.யை மீறி அவள் நெற்றியில் வியர்வைப் பூக்கள். ட்ரேயை ஏந்திய கை விரல்கள் நடுங்கின.

"ஆர் யூ ஓகே."

"யெஸ்..."

"என்னைப் பார்த்து ஏன் இப்படிப் பயப்படற?"

"இ... இல்லையே...!"

"உன் கை நடுங்குகிறது. முகமெல்லாம் வியர்த்துக் கொட்டுகிறது. அதனால்தான் கேட்கிறேன்..." என்றான் மென்மையாக.

எங்கே எதையாவது உளறி விடுவோமோ எனப் பயந்து போய் வாயை மூடிக் கொண்டாள் அவள்.

"ஓகே. ஸம்திங் இஸ் ஃபாதரிங் யூ. எனக்கு அது தெரிகிறது..."

"பாயசம் இந்தாங்க... குடிங்க."

"சரி, தேங்க்ஸ் ஃபார் இட். முன்னமே தெரிந்திருந்தால் நான் உனக்கு ஏதாவது பரிசுப் பொருள் வாங்கிக் கொடுத்திருப்பேன்..."

"இட்ஸ் ஓ.கே. குடிங்க..." என்றாள் வலிய வரவழைத்த புன்னகையோடு அவள்.

அவன் குடிப்பதை அவள் விழிகள் கலக்கமாகப் பார்த்தன.

"நீயே செய்ததா இந்தப் பாயசம்?"

"யெஸ்..."

"குட்! சுவை நன்றாக இருக்கிறது."

"தேங்க்ஸ்! நான் கிளம்புகிறேன்."

"ஸீ யூ நெக்ஸ்ட் வீக்."

அவள் ஓட்டமும் நடையுமாக வெளியேறினாள். தோட்டத்தில் இருந்த ஸ்கூட்டியில் உட்கார்ந்த பின்புதான் மனம் நிம்மதியானது.

ஸ்கூட்டியைக் கிளப்பியவுடன் மனம் கொஞ்சம் கொஞ்சமாக உற்சாகமடைந்தது. அப்பாடா! ஒரு பெரிய வேலை முடிந்தது.

மஞ்சு! இன்னிக்கு மேட்சில் விளையாடப் போவது சரண் இல்லை. அசோக்தான்! ஆமாம், சரணால் இன்று மேட்ச் எல்லாம் விளையாட முடியாது.

இந்நேரம் அவன் தூங்கி இருப்பான். பாயசத்தில் தூக்க மருந்து கலந்தது... இந்நேரம் அதன் வேலையைக் காட்டத் தொடங்கியிருக்கும்.

தூக்கம் தெளிய எப்படியும் ஐந்து மணிநேரமாவது ஆகும். அதற்குள் மைதானத்தில் மேட்ச் தொடங்கிவிடும்.

ஹி காண்ட் பார்டிஸிபேட் இன் தி மேட்ச். வேண்டுமானால் டி.வியில் மேட்ச்சைப் பார்க்கலாம்.

நினைக்க நினைக்க அவள் மனம் மகிழ்ச்சியில் மூழ்கியது. வீட்டினுள் நுழைந்தவள் முதல் வேலையாக மஞ்சுவிற்கு ஃபோன் செய்தாள்.

"ஹாய் மஞ்சு! ஹவ் ஆர் யூ?"

"ஏதோ இருக்கேன்டி!" என்றாள் சுரத்தில்லாமல் அவள்.

"மஞ்சு! டோண்ட் ஒர்ரி. இன்னிக்கு மேட்ச்சை டி.வியில் ...ர்."



"மூடே இல்லை அவந்தி!"

"சொல்றதைச் செய். உன் ஆள்தான் இன்னிக்கு விளையாடுவார். நாட் சரண்!"

"ஏய்... என்ன சொல்றே நீ?"

"யெஸ்... ஐ மேட் இட் மஞ்சு!"

"காட்! சரணை என்ன செய்த?"

"நத்திங்! இந்நேரம் நன்றாகத் தூங்கிக் கொண்டிருப்பார் அவர்..."

"பட்... எப்படி அவந்தி?"

"அதெல்லாம் அப்படித்தான் மஞ்சு..."

"எ... என்னாலே நம்ப முடியலை அவந்தி!"

"ம்... உனக்காக நான் இது கூடச் செய்யாவிட்டால் எப்படி மஞ்சு?

நான்... நான் மீளாத துக்கத்தில் மூழ்கிப் போயிருப்பேன். நீ இல்லை என்றால்!"

"ஏய் அவந்தி! டோண்ட் பி ஸெண்டிமெண்ட்ஸ்!"

"நான் மெண்டல் ஆகியிருப்பேன் மஞ்சு... நீ இல்லா விட்டால்!"

"ஏய் போதும்... டி.ராஜேந்தர் ஸ்டைல்ல பேசறே... சரி, தூங்கிக் கண் விழித்த பின்பு சரணிற்கு உன் மேல் சந்தேகம் வராதா?"

"வந்தால்... வரட்டும். ஐ டோண்ட் பாதர்!"

"நீ எனக்காக ஏதோ பெரிய ஆபத்தில் தானாக மாட்டிக் கொள்கிறாயோ... என்று உறுத்தலாக இருக்கிறது."

"அதெல்லாம் ஒன்றும் இல்லை. சந்தேகம் வந்தாலும் சரணால் என்னை என்ன செய்துவிட முடியும்?"

"அதுவும் சரிதான்."

"அப்புறம் அந்த வீட்டில் ஒரு சின்னப் பையனைப் பார்த்தேன் மஞ்சு! ஹிஸ் நேம் இஸ் ரோஹித்!

ஹி இஸ் எ ஸ்வீட் சைல்ட். பட் ஐ ஃபீல் தேர் இஸ் ஸம்திங்க் பாதரிங் ஹிம்."

"அப்படியா! சரணின் சொந்தக்காரப் பையனா அவன்?"

"யெஸ்... ஹி கால்ஸ் ஹிம் அங்கிள்!"

"நீ எதற்கும் ஜாக்கிரதையாக இரு அவந்தி! சரண் இஸ் எ வெரி ஸ்மார்ட் பெர்ஸன்."

"சரி மஞ்சு! கண்டிப்பாக ஐ வில் ஹாவ் இட் இன் மைண்ட். அப்புறம் நீ நிம்மதியா மேட்ச் பார்."

"தேங்க்ஸ் எ லாட் அவந்தி!"

கைபேசியைத் துண்டித்த பின்பு அவந்தி நிம்மதியாக உணர்ந்தாள். இனி அசோக் விளையாடுவதை யாராலும் தடுக்க முடியாது.

அட்லீஸ்ட் மஞ்சுவிற்கு இந்த உதவியேனும் செய்ய முடிந்ததே... எனத் தன்னைத் தானே மெச்சிக் கொண்டாள்.

அப்பாவின் நினைவு மனதை அழுத்தியது.

அப்பா இப்பொழுது என்ன செய்து கொண்டிருப்பார் என நினைக்கும் பொழுதே கண்கள் பனித்தன.



மனம் மீண்டும் பாரமானது. அப்பாவைப் பார்க்க முடியுமா என அவள் மனம் ஏங்கியது. தனியாக இருந்தாலே தேவை இல்லாத சிந்தனைகள் மனதை ஆக்கிரமிக்கின்றன என நினைத்துப் பெருமூச்சு விட்டாள் அவள்.

தன்னுடைய பெட்டியைத் திறந்தாள். தந்தையின் ஃபோட்டோ அதில் பத்திரமாக இருந்தது. அதைப் பார்த்தபடியே உட்கார்ந்திருந்தாள் அவள்.

அடுத்த நாள் காலையில் அலுவலகம் செல்லும் பொழுது அவந்திகாவிற்குப் படபடப்பாக இருந்தது. நான் செய்த வேலை சரணிற்குத் தெரிந்திருக்குமா?

அச்சோ... அவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டு விட்டால் நான் தொலைந்தேன். இந்த ஆஃபீஸ் காண்ட்ராக்ட்டை கேன்சல் செய்தாலும் செய்து விடுவான் என்று பதட்டத்துடனேயே உள்ளே அலுவலகத்திற்குள் நுழைந்தாள் அவள்.

"ஹாய் சார்லஸ்! குட் மார்னிங்."

"ஹாய் அவந்தி! குட் மார்னிங். இப்பத்தான் உன்னைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன்."

"என்னைப் பற்றியா... எதுக்கு?"

"சரண், நம்ம பிரெஸ்டீஜியஸ் க்ளையண்ட் கால் செஞ்சார்... இப்பதான்...!"

"ஓ... அப்படியா! எ... என்ன விஷயம்?" என்று திணறினாள் அவள்.

"ம்... அதை உன்கிட்ட எப்படிச் சொல்றதுன்னு தெரியலை!"

அவந்திகாவிற்குப் பதட்டத்தில் வியர்வைப் பூக்கள் நெற்றியில் பூத்தன.

"ம்... சொல்லுங்க சார்லஸ்!"

"சரண்... அவரோட பிஸினெஸ் ப்ராஜெக்ட் பற்றி நாம புரிஞ்சுக்கணும்னு எதிர்பார்க்கிறார்...

நாம அட்வர்டைஸிங், அந்தப் ப்ராஜெக்ட் பற்றி செய்யணும்னா... இதைப் பற்றி தெரிஞ்சுக்கறது அவசியம். அதனாலே அவரோட மும்பாய் ஆஃபீஸை வந்து நாம ஒரு நாள் சுற்றிப் பார்க்கணும்னு சொன்னார்..."

"ஓ... எப்ப சொன்னார் சார்லஸ்?"

"இன்னிக்குக் காலையிலதான் பேசினார் அவந்தி! நான் சரின்னு சொல்லிட்டேன்.

இட் இஸ் எ குட் ஐடியா. வீ வில் நோ மோர் அப்வுட் தி கம்பெனி. அதனால நம்ம அட்வர்டைஸ்மெண்ட் நல்லா இருக்கும்."

"யெஸ் கரெக்ட்தான். நீங்கதானே மும்பாய் போகப் போறீங்க?"

"நோ அவந்தி! நீதான் போகப் போற..."

"வாட்... பட்...?"

"நோ பட்ஸ் ப்ளீஸ்!"

"சார்லஸ்! எனக்கென்னவோ இது சரி வரும்னு தோணலை. ஐ மீன் நான் மும்பாய் போறது...?"

"ஏன் அவந்தி... மும்பாய் இஸ் எ நைஸ் பிளேஸ். அதுவும் நீ ஒரு நாளோ இரண்டு நாளோதானே அங்கே இருக்கப் போகிறாய்..."



"பட் ஸ்டில் ஐ ஃபீல் அதர்வைஸ்..."

"கூல் அவந்தி! நீ ஏன் இவ்வளவு பிடிவாதம் பிடிக்கிறேன்னு புரியலை?

இட் வில் கிவ் எ டிஃபரண்ட் எக்ஸ்பீரியன்ஸ்.

நாம செய்யப் போற ப்ராஜெக்ட் நல்லா வரணும்னு தானே நாம இதைப் பற்றி இவ்வளவு நேரம் டிஸ்கஸ் செய்யறோம்.

இஃப் யூ ஆர் நாட் கீன் லீவ் இட். உனக்கு விருப்பம் இல்லைங்கிறது எனக்குப் புரியுது."

அங்கே கனத்த மௌனம் நிலவியது. சார்லஸ் கோபமாக இருக்கிறான் என்று அவளுக்குப் புரிந்தது.

கோபமாக இருப்பதால்தான் அவன் சட்டென அப்படிப் பேசினான் என்று அவளுக்குப் புரிந்தது.

"சரி, நான் போகிறேன் சார்லஸ்!

ஐயாம் ஸாரி... இவ்வளவு நேரம் இதைப் பற்றி டிஸ்கஸ் செய்ததற்கு...!"

"இட்ஸ் ஓகே அவந்தி. நீ பயணம் செய்வதற்கான ஏற்பாடுகளை எல்லாம் சரணே செய்வார்.

அநேகமாக இந்த வாரம் நீ பயணம் செய்ய வேண்டி வரும்."

"ஓ.கே. சார்லஸ்... தேங்க்ஸ்!"

அந்தப் பயணம் தன் வாழ்க்கையையே மாற்றப் போகிறது என்பதை அறியாமல் சம்மதித்தாள் அவள்.

# 9

வருவாய்
என
நான்
காத்துக்
கொண்டு
இருக்கிறேன்!
பாதையைப்
பார்த்துக்
கொண்டு
இருந்தேன்!
குடையைப்
பிடித்தபடி
நீ
நடந்து
வந்து
கொண்டு
இருந்தாய்!
உன்னை
ஸ்பரிசிக்க
முடியாததால்
வானம் கண்ணீர்
விடுகிறதோ!



சென்னை விமானத் தளம் வழக்கமான உற்சாகத் துடன் இயங்கிக் கொண்டிருந்தது. விமான நிலையத்தை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தாள் அவந்திகா.

சரண் நினைத்ததைச் சாதித்துக் கொள்கிறான்.

இந்தப் பயணத்திற்கு எனக்கு முழு சம்மதம் இல்லை... இருந்தாலும் வேறு வழியில்லாமல் நான் இதற்கு ஒத்துக் கொள்ளும்படி ஆகிவிட்டது என நினைத்தபடியே செக்கிங் செய்வதற்காகக் காத்திருந்தாள்

அவளுடைய பேக்கேஜ் செக்கிங் முடிந்தது. போர்டிங் பாஸை அங்கிருந்த சிப்பந்தியிடம் காட்டிவிட்டு விமானத் தினுள் ஏறினாள் அவள்.

டொமஸ்டிக் ஃபிளைட்டாக இருந்தாலும் விமானம் நிரம்பி இருந்தது. இப்பொழுது எல்லோரும் பயணம் செய்கிறார்கள்.

பயணம் அத்தியாவசியமாக மாறிவிட்டது. அதுவும் பேருந்து, டிரெயின் வழியாகப் பயணம் செய்தால் நேரம் கூடுதலாக இருப்பதால் பெரும்பான்மையான மக்கள் விமானம் வழியாகப் பயணம் செய்வதை விரும்புகிறார்கள்.

முன்பு எதெல்லாம் ஆடம்பரமாகக் கருதப்பட்டதோ... அதெல்லாம் இப்பொழுது அத்தியாவசியமான ஒன்றாகி விட்டது.

விமானப் பயணமும் அப்படித்தான் என நினைத்த படியே, தன் இருக்கையில் அமர்ந்தாள் அவள்.

ஜன்னலை ஒட்டிய இருக்கை என்பதால் வெளியே பஞ்சுப் பொதிகளாக மேகங்கள் தெரிந்தன.

விமானம் லேசான குலுக்கலோடு வானில் எழும்பியது. சீட் பெல்ட்டை அணிந்து கொண்டு கண்மூடி உட்கார்ந்திருந்தாள் அவள்.

திடீரென உரத்த அழுகைக் குரல் பதட்டம் கலந்து ஒலிக்கத் திடுக்கிட்டு கண் திறந்தாள் அவந்திகா.

விமானப் பணிப்பெண், விமானத்தின் நடுவே நின்று கொண்டிருந்தாள். அவள் தலைக்கு அருகே துப்பாக்கியை நீட்டியபடி நின்று கொண்டிருந்தான் ஒருவன்.

அவன் முகமூடி அணிந்திருந்ததால் அவன் கண்கள் மட்டுமே தெரிந்தன. விமானத்தில் இருந்தவர்கள் எல்லோரும் பீதியில் உறைந்திருந்தனர்.

அவந்திகா அதிர்ச்சியில் சிலை போல் ஆடாமல் அசையாமல் இருந்தாள்.

அந்த முகமூடி அணிந்தவன் விமானப் பணிப் பெண்ணைத் துப்பாக்கி முனையில் ஓட்டுனர் இருக்கும் இடம் நோக்கி நடத்திச் சென்றான்.

சில பயணிகள் பயந்து போய் கூச்சல் போடத் தொடங்கினர். அந்த முகமூடி அணிந்தவன் அவர்களைத் திரும்பிப் பார்த்து அமைதியாக இருக்கும்படி சமிக்ஞை செய்தான்.

அவந்திகா உட்பட எல்லோரும் செய்வது அறியாமல் அதிர்ச்சியில் இருந்தனர். விமானப் பணிப்பெண் காக்பிட் உள்ளே அவனால் அழைத்துச் செல்லப்பட்டாள்.

அவந்திகா அருகே இருந்த ஒரு வயதான பெண் அதிர்ச்சியால் மயங்கி அவள் தோள் மேல் தலை சாய்ந்தாள்.



காக்பிட்டில் இருந்து துணை பைலட் என்று பேட்ஜ் அணிந்த ஒருவன் பயணிகளைப் பார்த்து பேசத் தொடங்கினான்.

"யாரும் பதட்டப்பட வேண்டாம். இந்த விமானம் மும்பாய் போகும். ஆனால் அதற்கு உங்க ஒத்துழைப்பு வேண்டும்!" என்றான்.

பயணிகளிடையே சலசலப்பு தோன்றியது.

"சத்தம் போட வேண்டாம். அமைதியாக இருங்கள். இந்த விமானத்தைக் கடத்துபவர்கள் ஒரே ஒரு கோரிக்கைதான் வைத்திருக்கிறார்கள்."

பயணிகளில் ஒருவர் பொறுமை இழந்து பேசத் தொடங்கினார்.

"ஸார்... சொல்ல வந்ததைச் சீக்கிரமாகச் சொல்லுங்க... இங்கே பயணம் செய்பவர்களில் நிறைய பேருக்கு உடல்நிலை சரியாக இல்லாமல் இருக்க வாய்ப்பு இருக்கு. அதோட நிறைய பெண்கள் இருக்காங்க. அவங்களால அதிர்ச்சியைத் தாங்க முடியாது. அதனாலே சொல்ல வந்ததைச் சீக்கிரமாகச் சொல்லுங்க..."

"இங்க பாருங்க... என் பக்கத்தில... ம்... இவங்க மயக்கம் போட்டு விழுந்திட்டாங்க. ப்ளீஸ்! இவங்களைக் கவனிங்க. இது இப்ப ரொம்ப அர்ஜெண்ட்!" என்றாள் படபடப்பாய் அவந்திகா.

விமானப் பணிப் பெண் அவளை நோக்கி விரைந்து வந்தாள். முதல்-உதவிப் பெட்டியுடன் அந்தப் பெண்

வருவதைப் பார்த்து அவந்திகாவின் மனதில் நிம்மதி பரவியது.

"இங்கே அவந்திகாங்கிறது யார்?" என்று துணை பைலட் அறிவித்தவுடன் அவந்திகா திடுக்கிட்டாள்.

"நான் கேட்கிறதுக்குப் பதில் சொல்லுங்க... பதட்டப்பட வேண்டாம்.

இங்க யார் அவந்திகா? ப்ளீஸ் பதில் சொல்லுங்க... எந்த ஆபத்தும் இல்லை."

பயணிகள் தங்களுக்குள்ளே பேசத் தொடங்கினர்.

"நான்... நான்தான் அவந்திகா!" என்று மெதுவாக எழுந்து பதில் சொன்னாள்.

"வாங்க... மேடம்... வாங்க!"

அந்தப் பைலட்டைப் பின்தொடர்ந்தாள் அவள்.

காக்பிட்டினுள் முகமூடி இல்லாமல் இருந்தவனைப் பார்த்துத் திகைத்தாள் அவந்திகா. அதிர்ச்சியில் வார்த்தை வராமல் திணறினாள்.

"இதில் இருப்பதைப் படி!" என்று ஒரு கடிதத்தை அவளிடம் நீட்டினான் அவன்.

நடுங்கும் விரல்களால் அதைப் பிரித்தாள் அவந்திகா.

"இதில் இருப்பது போல் நீ நடந்து கொள்ள வேண்டும்."

"முடியாது... ஐ காண்ட் டூ திஸ்!"

"நீ யாரிடம் பேசுகிறாய் என்று தெரிகிறதா?"

"யெஸ்... ஐ நோ தட்!"



"நீ இப்படிப் பேசுவது நல்லது இல்லை..."

"எது உங்களுக்கு நல்லதோ... அது மற்றவர்களுக்குக் கெடுதலாக இருக்கிறது."

"இந்த மாதிரி வேதாந்தம் பேசுவதால் யாருக்கும் எந்தப் பயனும் இல்லை."

"நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள். நான் இதைச் செய்ய மாட்டேன்..."

"உன் முடிவில் மாற்றம் இல்லையா?"

"இல்லை... எந்த மாற்றமும் இல்லை."

"சரி, நீ போகலாம்."

"நான்... நான் அவரைக் கேட்டதாகச் சொல்லுங்கள்..." என்றாள் கண்கள் கலங்க... உதடு துடிக்க... அவந்திகா.

"தேவையில்லாத வார்த்தை ஜாலம் எல்லாம் வேண்டாம். உன் உதடுகள் உச்சரிக்கும் பொய்யை நாங்கள் யாரும் நம்ப மாட்டோம்."

அவந்திகா ஏதும் சொல்லாமல் அங்கிருந்து சென்றாள். தன் இருக்கையில் உட்கார்ந்தவளுக்கு நடந்ததை எல்லாம் நம்ப முடியவில்லை.

நம்பாமலும் இருக்க முடியவில்லை. ஏன் இப்படி எல்லாம் நடக்கிறது? காட்! இனி யாரையும் நம்ப முடியாது போல என மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

மற்ற பயணிகள் எல்லோரும் தன்னையே குறுகுறு வெனப் பார்ப்பது தெரிந்தது. கண்களை மூடிக் கொண்டு அமைதியாக இருக்க முயன்றாள் அவள்.

ஆனால், தன் மனம் கொந்தளிப்பது அவளுக்குத் தெரிந்தது. இனி, அடிக்கடி இந்த மாதிரித் தொல்லைகள், அச்சுறுத்தல்கள் ஏற்படுமா என யோசித்தபடியே இருந்தாள் அவள்.

தன் அருகில் அந்த வயதான பெண்மணி தன்னை ஆர்வமாகப் பார்ப்பது அவளுக்குத் தெரிந்தது. அந்தப் பார்வையின் தீட்சண்யத்தைத் தாங்க முடியாமல் முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டாள் அவள்.

"என்ன ஆச்சு? உன்னை மிரட்டினார்களா?"

"இல்லை..."

"உனக்கு அவர்களைத் தெரியுமா?"

"தெரியாது..."

"ஏன்... கூட்டத்தில் அவ்வளவு பேர் இருக்கும் பொழுது உன்னை மட்டும் உள்ளே அழைத்துப் போனார்கள்?"

"தெரியாது..." என்று கத்தினாள் அவள்.

"இல்லை... உனக்குத் தெரியும்... சொல்!"

"ஜஸ்ட் லீவ் மீ!" என்று அலறினாள் அவள்.

"மேடம்! ஆர் யூ ஓகே!" என்று விமானப் பணிப்பெண் அவள் அருகே வந்து தோளை ஆதரவாகத் தட்டினாள்.

அவந்திகா... மலங்க மலங்க விழித்தாள். சுற்றும் முற்றும் பார்த்தாள். முகமூடி அணிந்து கொண்டு யாரும் இல்லை.

நடந்ததெல்லாம் கனவு என்று மெதுவாக அவள் மூளைக்கு எட்டியது. காட்! எல்லாமே கனவுதான்.



பகல் கனவு பலிக்காது என்று சொல்வார்கள்... அது உண்மையானால் நல்லதுதான். இந்த மாதிரி கெட்ட கனவு இதுவரை வந்ததே இல்லை...

ஏதாவது ஆபத்து வரப் போகிறது என்பதை எனக்கு எச்சரிக்கைப் படுத்தத்தான் இந்தக் கனவு வந்திருக்கிறதோ?

நான் அப்பாவைப் பற்றியே நினைத்துக் கொண்டிருப் பதால் இந்த மாதிரிக் கனவு வந்ததா? அப்படித்தான் இருக்கும்.

இனி, வேறு ஏதாவது முயற்சிகள் செய்ய வேண்டும் என்று இந்தக் கனவு சொல்லாமல் சொல்கிறதா!

இதை அப்படியே ஒதுக்கி வைத்து விட்டு, இங்கே எதற்கு வந்தேனோ... அந்த வேலையில் கவனம் செலுத்த வேண்டும்.

'சரண் இஸ் எ இம்பார்ட்டண்ட் கஸ்டமர்' என்று சார்லஸ் சொன்னது அவள் காதுகளில் ஒலித்தபடியே இருந்தது.

## 10

நீ சிந்தும்
புன்னகை
என்
கண் முன்னே
விரிகிறது!
சின்னச்
சின்ன
மழைத்

தூறல்களை
நினைவு
படுத்துகிறது
அது!
வானத்தின்
நிலாவை
நினைவு
படுத்துகிறது
உன்
வட்ட
முகம்!

மும்பாயில் இறங்கியவுடன் அவளை அழைத்துச் செல்வதற்காக தயாராக இருந்தான், சரண் கம்பெனியில் வேலை பார்க்கும் ஒருவன்.

அவன் பெயர்ப் பலகை வைத்துக் கொண்டிருந்ததால் அவளுக்கு அடையாளம் கண்டுபிடிப்பது சுலபமாக இருந்தது.

"வாங்க மேடம்! ஸார் பிஸியாக இருப்பதால் என்னை அனுப்பினார். என் பெயர் முகில்.

உங்களுக்குத் தங்குவதற்கு வசதியான இடம் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கு. நீங்க தங்கி கொஞ்சம் ரெஸ்ட் எடுத்த பின்பு நான் உங்களுக்குக் கார் அனுப்புகிறேன்."

"ஓ... ரொம்ப நன்றி முகில். ரெஸ்ட் எல்லாம் வேண்டாம்.



நான் தங்கப் போகும் இடம் போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?"

"ம்... இன்னும் ஒரு பத்து நிமிடத்தில் போய் விடுவோம் மேடம்.

அது கம்பெனி கெஸ்ட் ஹவுஸ்தான்!"

"ஓ... அப்படியா! அப்ப இன்னும் ஒரு அரை மணி நேரம் கழித்து கார் அனுப்பினால் வசதியாக இருக்கும்... ஐ வில் பீ ரெடி பை தட் டைம்!"

"சரி... மேடம்! நீங்க இதற்கு முன் மும்பாய் வந்திருக்கீங்களா?"

என்ன பதில் சொல்வது இதற்கு என்று ஒரு நொடி யோசித்தாள் அவள்.

"இ... இல்லை... இதுதான் முதல் தடவை!"

"அப்ப... நீங்க சுத்திப் பார்க்க நிறைய இடங்கள் இருக்கு மேடம்! ஏற்பாடு செய்யவா?"

"வேண்டாம். நான் இங்கே வேலை முடிந்தபின் உடனே சென்னை போக வேண்டும்."

"ஓ... அப்படியா! அப்ப நீங்க சாயங்காலமா சுற்றிப் பார்ப்பது போல் ஏற்பாடு செய்கிறேனே!"

"வேண்டாம் என்றால் விடுங்களேன்..." என்றாள், பட்டென அவந்திகா.

அவன் முகம் மாறுவதைக் கவனித்தாள் அவள்.

சே... நான் இவ்வளவு கடுமையாகப் பேசக் கூடாது எனத் தன்னையே கடிந்து கொண்டாள் அவள்.

"ஐயாம் ஸாரி. எனக்கு ஷாப்பிங் செய்வது, சுற்றிப் பார்ப்பதில் எல்லாம் அவ்வளவாக ஈடுபாடு இல்லை.

அதனால்தான் அப்படிச் சொல்லிவிட்டேன். ஐயாம் ஸாரி. ஐ டிட் நாட் மீன் டு ஹர்ட் யூ!"

"ம்... இட்ஸ் ஓ.கே. மேடம்! இதுதான் கெஸ்ட் ஹவுஸ்!" என்றபடியே கார்க் கதவை அவள் இறங்குவதற்கு வசதியாகத் திறந்து வைத்தான்.

"தேங்க்ஸ் எ லாட்!" என்றபடியே கீழே இறங்...



சொன்னதைக் கேட்டு கூச்சத்தால் முகம் சிவந்தது அவளுக்கு.

தன்னைச் சமாளித்துக் கொண்டு கெஸ்ட் ஹவுஸ் ரூமினுள் நுழைந்தாள் அவள்.

"மேடம் ஏதாவது வேணும்னா ஃபோன் செய்யுங்க. இதுதான் என் மொபைல் நம்பர்!" என்று ஒரு காகிதத்தில் ... எழுதி நீட்டினான் முகில்.

அவனைப் பகைத்துக் கொள்ளக் கூடாது என்று சார்லஸ் நினைப்பதில் தப்பு இல்லை. சரணுக்குத் தன் மேல் சந்தேகம் ஏற்படாதது ஆச்சரியமாக இருந்தது.

காரின் ஹார்ன் ஒலி அவளைக் கனவுலகில் இருந்து மீட்டு நிஜ உலகிற்கு அழைத்து வந்தது.

“மேம்ஸாப்.. காடி வந்திடுச்சு!” என்ற குரல் கொடுத்தான் அந்தக் கூர்க்கா.

“ஏக் மினிட்!” என்று குரல் கொடுத்தபடியே வெளியே வந்தாள் அவள்.

தான் குறிப்பெடுக்கத் தேவையானவற்றைத் தன் கைப்பையினுள் வைத்தாள். பின்பு காரினுள் அமர்ந்தாள்.

கார் வழுக்கிக் கொண்டு சென்றது.

“மேடம்! ஸார் ஃபாக்டரியில் இருக்கிறார். உங்களை அங்கே அழைத்து வரச் சொன்னார்.”

“சரி...”

அவளுக்கு உள்ளூர பயமாக இருந்தது. சரணை அந்தச் சம்பவத்திற்குப் பிறகு சந்திக்கப் போவது இப்பொழுதுதான்.

அவனுக்கு ஏதேனும் சந்தேகம் வந்திருக்குமா என் மேல்? நான் ஏதும் உளறாமல் சமாளிக்க வேண்டும் என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

அந்தேரியில் இருந்த ஏற்றுமதித் தொழிற்சாலையை நோக்கிக் கார் சென்றது.

“மேடம்! இங்கேதான் இறங்கணும். மூணாவது தளம். சரண் சார் அங்கேதான் இருக்கார்.”



“தேங்க்ஸ்! நான் போயிடுவேன்.”

லிஃப்டில் ஏறி மூன்றாவது தளத்திற்கான பட்டனை அழுத்தினாள். லிஃப்ட்டில் கைபேசியில் பேசிக் கொண்டிருந்தனர் சிலர்.

எல்லாவிடத்திலும் இது பொதுவான கலாச்சாரமாகி விட்டது எனத் தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள்.

வரவேற்பறையில் இருந்த அழகி டெலிபோனில் யாரிடமோ பேசிச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

வெண்ணை போல் மின்னிய அந்தப் பெண்ணின் சருமத்தைப் பார்த்து வியந்தபடியே அவளை நெருங்கினாள் அவந்திகா.

“ஐயாம் அவந்திகா! சரண் சாரை...” என்று அவள் முடிக்கும் முன்பு...

“அவந்திகா! ஹி இஸ் ஃப்ரீ... முதல் ரூம்...” என்றாள் அவள் ஆங்கிலத்தில்.

“தேங்க்ஸ்!” என்று சொல்லிவிட்டு அறையை அடைந்தாள்.

அறைக்குக் கதவே இல்லை. ஓபன் டோர் பாலிஸி போல... என நினைத்தபடியே உள்ளே நுழைந்தாள்.

“ஹலோ! குட்மார்னிங் அவந்தி!”

“குட்மார்னிங் சார்!”

“ஸோ... ஹவ் ஆர் யூ?”

“ஐயாம் குட் சார்!”

“பார்த்தால் அப்படித் தெரியவில்லையே...?”

"புரியவில்லை..."

"ம்... யூ லுக் டயர்ட் அண்ட் ஸ்லீப்பி!"

"அப்படி எல்லாம் ஏதும் இல்லையே!"

"உனக்குத் தெரியாது. ஆனால் யூ லுக் லைக் எ ஸ்லீப்பிங் பியூட்டி!"

அவன் தூக்கத்தைப் பற்றிச் சாதாரணமாகப் பேசுகிறானா... இல்லை வேண்டுமென்றே பொடி வைத்துப் பேசுகிறானா என்று புரியாமல் திகைத்தாள் அவள்.

"இதற்கு முன் மும்பாய்க்கு வந்திருக்கிறாயா?"

அவள் என்ன பதில் சொல்வது என்று புரியாமல் நின்றிருந்தாள்.

அத்றகுள் அவன் பொறுமை இழந்தான்.

"ஹலோ! நான் ரொம்பக் கஷ்டமான கேள்வி ஏதும் கேட்கலையே?

ஏன் இவ்வளவு யோசனை... ஸ்லீப்பிங் பியூட்டி?"

"டோண்ட் கால் மீ லைக் தட்!"

"சரி... கேட்ட கேள்விக்குப் பதில் சொல்."

"என்ன கேட்டீங்க?" என்றாள் வேண்டுமென்றே...

"ம்... மறதி வேறவா.. கஷ்டம்தான்!"

"லுக்... எனக்கு ஃபேக்டரியைச் சுற்றிக் காட்ட முடியுமா, முடியாதா?"

"கண்டிப்பாக சுற்றிக் காட்டுவேன். பட், நீ இன்னும் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லையே?

மும்பாய் உனக்குப் பழக்கமான இடமா?"



"இ... இல்லை. ஏன் கேட்கறீங்க?"

"சும்மாதான். சரி, பாதாம்கீர் இங்கே ஸ்பெஷல். குடித்து விட்டுப் போ. வீ வில் கெட் ஸ்டார்ட்டர்ட்."

"ஓ... எனக்கு எதுவும் வேண்டாம்."

"கீர் நன்றாக இருக்கும். டோண்ட் ஒர்ரி. நீ கூட அன்று பாயசம் மாதிரி ஏதோ கொண்டு வந்தாயே... உன் பிறந்த நாள் அன்று...

அதுபோல் இதுவும் ரொம்ப நன்றாகச் சுவையாக இருக்கும். டேஸ்ட் இட்!" என்று ஒரு கோப்பையை அவளிடம் நீட்டினான்.

திருடனுக்குத் தேள் கொட்டிய நிலையில் இருந்தாள் அவந்திகா.

"தேங்க்ஸ்!" என்றபடியே அதைப் பருகினாள் அவள்.

"ஸோ ஹவ் இஸ் இட்!"

"எது?"

"ம்... நீ குடிக்கிறாயே... அதைத்தான் கேட்கிறேன்."

"இட்ஸ் நைஸ்!"

"பயப்படாமல் குடி. இதைக் குடித்தால் யூ வில் ஃபீல் எனெர்ஜெடிக்."

"எனக்கு இந்த ஃபேக்டரியைச் சுற்றிக் காட்டினால் நன்றாக இருக்கும்..."

"கண்டிப்பாக... நானே சுற்றிக் காட்டுகிறேன்."

"நீ... நீங்க எதுக்கு... பாவம் உங்களுக்கு நிறைய வேலைகள் இருக்கும்..."

"இல்லை. இதைக் காட்டிலும் முக்கியமான வேலைகள் இருக்கின்றன என்று பொய் சொல்ல மாட்டேன்.

நானாகச் சுற்றிக் காட்டினேன் என்றால் எனக்கு ஒரு திருப்தி!"

"சரி... சீக்கிரமாகச் சுற்றிக் காட்ட முடியுமா?"

"ம்... ஷ்யூர். ஏன் தூக்கம் வருகிறதா?"

"இ... இல்லை."

"டயர்டாக இருக்குமே... அதனால்தான் கேட்டேன். கமான் லெட் அஸ் கோ!"

அவனைப் பின்தொடர்ந்தாள் அவந்திகா.

வழியில் தென்படுவோரைப் பார்த்து அவன் புன்னகை செய்து கொண்டு வந்தான். சிலர் 'குட் மார்னிங்!' என்றனர். அவனும் பதிலுக்கு 'குட் மார்னிங்!' சொன்னான்.

"இதுதான் எங்கள் ஏற்றுமதித் தொழிற்சாலை. இங்கே ஒரு நாளைக்கு மூவாயிரம் தொழிலாளர்கள் ஷிஃப்ட் முறையில் வேலை செய்கிறார்கள்."

"ஓ... பெரிய யூனிட்தான்."

"யெஸ்... பெண்கள் நிறையப் பேர் வேலை செய்கிறார்கள். பத்து சதவீதம்தான் ஆண்கள். மற்றது எல்லாம் பெண்கள்தான்..."

"வாவ்! திஸ் இஸ் எ குட் நியூஸ்!"

"உனக்கு இந்த மாதிரி விஷயம் பிடிக்கும் என்று எனக்குத் தெரியும். பரவாயில்லை... என் கணிப்பு சரியாகத் தான் உள்ளது."



அவள் முகம் சிவந்தது. தன்னைப் பற்றி இவனுக்கு இதெல்லாம் தெரிகிறதே... என்று அவள் திகைத்தாள்.

"ஷிஃப்ட் என்று சொன்னீர்களே... என்ன டைமிங்க்ஸ்?"

"ஒன்று ஒன்பது மணிக்குத் தொடங்கி ஆறு மணிக்கு முடிகிறது.

இன்னொரு ஷிஃப்ட் காலை ஆறு மணிக்குத் தொடங்கி மதியம் இரண்டு மணிக்கு முடிகிறது."

"பரவாயில்லை. இது நல்ல டைமிங்தான். ரொம்ப அசௌகரியமாக இருக்காது."

"எந்த சௌகரியக் குறைவும் இங்கே இல்லை. இருக்கக் கூடாது என்பதில் நான் கவனமாக இருக்கிறேன்.

இங்கே பெண்களுக்கென்று இரண்டு டாக்டர்கள் உள்ளனர். அதோடு குழந்தைகளைப் பெண்கள் இங்கேயே தங்கள் பராமரிப்பிலேயே வளர்க்கலாம்.

அதற்கென்று ஒரு கிரஷ் இங்கே உள்ளது. வா... அதைப் பார்க்கலாம்."

அந்தக் குழந்தைகள் காப்பக அறை விசாலமாக இருந்தது. நிறைய விளையாட்டுச் சாமான்கள் இருந்தன.

இரண்டு பெண்கள் சரணைப் பார்த்தவுடன் எழுந்து நின்றனர்.

"நமஸ்தே... சாகிப்!"

"நமஸ்தே...!"

"அவந்தி... இவங்கதான் குழந்தைகளைப் பார்த்துப் பாங்க... தாய்மார்கள் எந்தக் கவலையும் இல்லாமல் குழந்தைகளை இவர்கள் பொறுப்பில் ஒப்படைக்கலாம்."

"நமஸ்தே...!" என்றாள் புன்முறுவலோடு அவந்திகா, அவர்களைப் பார்த்து.

விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளின் புன்முறுவலே அவர்களின் சந்தோஷத்தைச் சொல்லாமல் சொல்லிக் காட்டியது.

## 11

சின்னச்
சின்ன
மொட்டுக்கள்
மலர்ந்தும்
மலராமல்
இருக்கின்றன!
வண்ணத்துப்
பூச்சி
ஒன்று
வானவில்லுக்கு
சவால்
விட்டபடி
அங்கும்
இங்கும்



பறந்து
கொண்டு
இருக்கிறது!
உனக்காக
நான்
காத்துக்
கொண்டு
இருக்கிறேன்!

குழந்தைகளின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சியும் உற்சாகமும் அங்கே வேலை பார்க்கின்ற எல்லோர் முகத்திலும் இருப்பதைக் கவனித்தாள் அவள்.

"இங்கே வேலை பார்க்கிற பெண்கள் எல்லாரும் சந்தோஷமா இருக்காங்க. ஐ கேன் ஸீ இட்!"

"தேங்க்ஸ்... ஃபார் டெல்லிங் தட்!"

"ம்... நீங்க அதுக்கு ஸ்பெஷலா ஏதாவது சலுகைகள் செய்யறீங்களா?"

"அப்படி எல்லாம் ஏதும் இல்லை..." என்றான் லேசான புன்முறுவலோடு அவன்.

"நான் அவர்களிடம் பேசலாமா?" என்றாள் அவள்.

அவன் புன்னகை ரொம்ப அழகு என்று தன்னை அறியாமல் ரசித்தாள் அவள்.

"ஓ... ஷ்யூர்!"

"யாரிடம் பேசுவது?"

"ம்... உனக்கு ஹிந்தி தெரியுமா?"

"தெ... தெரியாது."

"அப்ப நம்ம தமிழ் பேசத் தெரிந்த பெண்ணைக் கூப்பிடறேன். நீ பேசி முடித்த பின்பு என் அறைக்கு வா..."

'சரி!' என்பது போல் தலை அசைத்தாள் அவள்.

அவன் கைபேசியில் யாரிடமோ எதையோ சொல்வது அவள் காதில் விழுந்தது.

"நித்யாங்கிற பெண் இங்கே வருவா அவந்தி. உனக்கு என்னென்ன விஷயம் தெரியணுமோ அதை யெல்லாம் நீ அவளிடம் கேட்கலாம்..." என்று சொல்லிவிட்டு இடத்தை விட்டு அகன்றான் அவன்.

நித்யா என்ற அந்தப் பெண்ணிற்கு வயது நாற்பதுக்கு மேல் இருக்கும். ஒரு புன்னகையோடு அவளை அணுகினாள் அவந்திகா.

"ஹலோ மேடம்! நான்தான் நித்யா. சரண் சாரிடம் நீங்க எதைப் பற்றியோ தெரிந்து கொள்ள வேண்டும் என்று சொன்னீர்களாமே...!"

"யெஸ்... ஐ வாண்ட் டு நோ அபவுட் தி வொர்க் யூ டு ஹியர். ஆர் யூ ஹேப்பி?"

"ஹேப்பி என்பது ரொம்ப மிதமான வார்த்தை மேடம்! வீ ஆர் மோர் தேன் தட் டு வொர்க் ஹியர்."

"ஓ... நைஸ் டு ஹியர். அப்படி என்ன இந்த இடத்தில் ஸ்பெஷல் வசதிகள் உள்ளன உங்களுக்கு?"

"என்ன இங்கே இல்லை என்று நினைக்கிறீர்கள் மேடம்...?"



"ஓ... விட்டால் நீங்கள் என்னைப் பேட்டி எடுத்து விடுவீர்கள் போல...!"

"அப்படி ஏதும் இல்லை மேடம். இங்கே வேலை பார்க்கும் பெண்கள் எல்லோரும் ரொம்ப அடிமட்டத்து வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

அதோடு மட்டும் இல்லாமல்... சில பேர் சிறைச் சாலைக் கைதிகளாக நிறைய வருடங்கள் சிறையில் இருந்தவர்கள்."

"வாட்... கைதிகளா?"

"யெஸ் மேடம்! அவர்களுக்கு நல்ல வாழ்க்கை அமைத்துத் தர வேண்டும் என்பது சாரின் லட்சியம்.

எல்லோருக்கும் அந்த மாதிரி எண்ணம் வராது. பெரும்பாலான பணக்காரர்கள் தங்கள் நேரத்தையும் பணத்தையும் மேலும் பணம் திரட்டுவதில் மும்முரமாக இருப்பார்கள்.

ஆனால்... சார் அதற்கு எல்லாம் அப்பாற்பட்டவர். ரொம்ப கொஞ்சம் பேர்தான்... அவரை மாதிரி பொது நலத்தில் ஆர்வமாக இருப்பார்கள்."

"ம்... சரிதான்!"

"அதோடு ஆடைகள் தைப்பதற்கு இங்குள்ள பெண்களுக்கு இலவசமாகப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்துள்ளார்.

அவர்கள் தங்குவதற்கு வசதியும் செய்து கொடுத்துள்ளார். அது மட்டும் இல்லாமல் அவர்கள் குழந்தைகளுக்கு ஆகும் படிப்புச் செலவையும் அவரே ஏற்றுக் கொள்கிறார்."

"அப்படியா! என்னால் நம்ப முடியவில்லை."

"மேடம்! அந்த மாதிரி எல்லாம் பேசாதீர்கள். இட் ஹர்ட்ஸ் மீ. நானே ஒரு கைதியாக திஹார் ஜெயிலில் இரண்டு வருடங்கள் இருந்தவள்..."

"வாட்...?" என்று அதிர்ந்தாள் அவந்திகா.

"ஆமாம் மேடம்! என் புருஷன் ஒரு குடிகாரன். கோபத்தில் வாய்ச் சண்டை முற்றி நான் ஒருநாள் அவனை அடித்து விட்டேன்.

அவன் மயக்கமாகி விட்டான். என் மாமனார் இதுதான் சாக்கு என்று இதைப் போலீஸ் கேஸ் ஆக்கி விட்டார்.

அதுவரை ஒன்றும் செய்யாமல் இருந்த என் புருஷன் வீட்டுப் பக்கம் இருந்த எல்லோரும் அதற்குப் பின்பு ஒரே கட்சியாக மாறி விட்டனர்.

அவரைக் கொலை செய்ய முயன்றேன் நான்... என்று என் மேல் குற்றம் சுமத்தினார்கள். நல்ல காலம் என்னைப் பெற்றவர்கள் எனக்கு அனுசரணையாக இருந்தனர்.

அதனால் எனக்குக் குறைந்தபட்ச தண்டனை கிடைத்தது. சிறையிலிருந்து வந்த பின்பு என் வாழ்க்கையே கேள்விக்குறியாக மாறியது.

என் கணவர் என்னைத் தள்ளி வைத்து விட்டு வேறு ஒரு பெண்ணை மணந்து கொண்டு விட்டார்.

என் வாழ்க்கையே இடிந்து, சூனியமாகப் போய் விட்டது என்று நான் நினைத்துப் புலம்பி அழுது கொண்டு இருந்தபொழுதுதான் நான் சரண் சாரைச் சந்தித்தேன்.

நான் இப்ப உயிரோடு இருக்கக் காரணமே சரண் சார்தான் மேடம்!" என்றாள், கண்கள் கலங்க நித்யா.



அவள் சொன்னதைக் கேட்டுத் திகைத்தாள் அவந்திகா. இது என்ன சரணின் இன்னொரு புதுமுகம்!

இதுவரை நான் துளிகூட இதை எதிர்பார்க்க வில்லையே! சரண் ஒரு பிஸினெஸ்மேன் என்று தெரியும். ஆனால் அதைத் தாண்டி இந்த மாதிரி ஒரு நல்ல உள்ளம் அவனுக்கு இருக்கிறதே!

நான்தான் அவனைத் தவறாகப் புரிந்து கொண்டு விட்டேனா? என்று குழம்பினாள் அவள்.

"என்ன மேடம்! ஏதும் சொல்ல மாட்டேங்கறீங்க?"

"இல்லை... மனிதர்கள் எவ்வளவு வித்தியாசமான வர்கள்! சரண் இப்படி இருப்பார் என்று நான் துளிக்கூட எதிர்பார்க்கவில்லை..."

"சில நேரம் அப்படித்தான் நடக்கிறது மேடம்! வாழ்க்கையில் நமக்கு எல்லாமே திறந்த புத்தகம் போல் இல்லை..."

"சரிதான்... உங்களைச் சந்தித்ததில் ரொம்ப மகிழ்ச்சி. உங்களால் எனக்கு நிறைய விஷயங்கள் தெளிவாகின."

"நான்தான் மேடம் உங்களுக்கு நன்றி சொல்லணும். சரண் சாரைப் பற்றிப் பேசறதுக்கு... அவர் செய்யற நல்ல செயல்களைப் பட்டியலிட எனக்கு ஒரு வாய்ப்பு நீங்க கொடுத்தீங்க..."

இருவர் உதடுகளிலும் புன்னகை விரிந்தது.

சரணின் அறை நோக்கி நடந்தாள் அவந்திகா. அந் தொழிற்சாலையில் தெரிந்த பிரம்மாண்டமான மெஷின்க வேலை பார்ப்பவர்களின் எண்ணிக்கை அவளுக்கு முத பிரமிப்பை ஊட்டியது உண்மையே!

ஆனால் நித்யாவிடம் பேசிய பின்பு அதெல்லாம் பெரிய விஷயமாகத் தெரியவில்லை. அவள் சொன்ன விஷயங்களை மனம் அசை போட்டது.

"ஹலோ அவந்தி...!" என்று அவளை வரவேற்றான், லேப்டாப்பில் மூழ்கியபடியே சரண்.

"ஹலோ ஸார்!"

"ஸோ... உனக்குத் தேவையான விஷயங்கள் எல்லாம் சேகரித்து விட்டீர்களா?"

"யெஸ் ஸார். நித்யாவிடம் பேசியது ரொம்ப உபயோகமாக இருந்தது.

நான் உங்களைப் பற்றி இந்த மாதிரி எல்லாம் நினைக்கவே இல்லை..."

"நித்யா! என்னைப் பற்றி நல்லவிதமாகத்தான் சொல்லி இருப்பாள் என நம்புகிறேன்!" என்றான் கிண்டலாக அவன்.

"ம்... நீங்கள் கைதிகளுக்கு வேலை கொடுத்து ஒரு பெரிய புரட்சி செய்கிறீர்கள்..."

"அப்படி எல்லாம் இல்லை அவந்தி! சூழ்நிலைதான் ஒரு மனிதனைத் தவறு செய்யத் தூண்டுகிறது. பிறக்கும் பொழுது யாரும் நல்லவர்களோ கெட்டவர்களோ இல்லை..."

"கரெக்ட். நான்... நான்கூட உங்களைத் தப்பாகப் புரிந்து கொண்டேன்."

"என்னையா... என்ன தப்பாக...?"

"ம்... நீங்கள் பணத்திலேயே குறியாக இருக்கும் பிஸினெஸ்மேன் என நான் நினைத்தேன்."



"அது தவறு இல்லையே... என்னைப் பற்றிச் சரியாகத்தான் புரிந்து கொண்டிருக்கிறாய்!"

"பட்... நீங்கள் சேர்த்த பணத்தை எல்லாம் நல்ல வழியில் செலவு செய்கிறீர்களே...!"

"கமான். இது ஒன்றும் ரொம்ப பெரிய சாதனை எல்லாம் இல்லை. சில விஷயங்கள் செய்வதில் மனம் அமைதியாகிறது.

மனம் சந்தோஷமடைகிறது. அதுவும் நல்ல விஷயத்தால் நம்மால் நாலு பேர் நிம்மதியாக இருக்கிறார்கள் என்றால் சந்தோஷம் இரட்டிப்பாகிறது."

"உங்களை இந்தக் கோணத்தில் யோசித்துப் பார்க்காதது என் தவறு!"

"தவறுக்குப் பிராயச்சித்தம் உண்டு."

"எ... என்ன செய்ய வேண்டும்?"

"எது வேண்டுமானாலும் செய்வாயா?"

அவள் இதயம் படபடத்தது. அவன் என்ன கேட்கப் போகிறானோ என பதறி அவள் முகம் சிவந்தது.

"என்னால் முடிந்ததைச் செய்வேன்."

"உன்னால்... அது முடியும் அவந்தி!"

"எ... என்ன வேண்டும்?"

"அன்று உன் பிறந்தநாள் பொழுது ஒரு பாயசம் செய்து கொண்டு வந்தாயே... அதேபோல் செய்து கொண்டு வா."

"ஓ... அப்படியா... ச... சரி!"

"அந்தப் பாயசம் ரொம்ப வித்தியாசமாக இருந்தது."

"ஏ... என்ன வித்தியாசம்?"

"அதைக் குடித்துவிட்டு நான் தூங்கினேன் பார்... காட்! நான் அந்த மாதிரி தூங்கினதே கிடையாது.

என்ன நடக்கிறது என்னைச் சுற்றி என்று தெரியாதபடி, ஒரு பயங்கரத் தூக்கம் அது..."

"அ... அப்படியா என்ன?"

"ம்... அன்று தூங்கியதால் ஒரு முக்கியமான ப்ரோக்ராமை மிஸ் செய்து விட்டேன்.

பட்... அதுவும் நல்லதிற்குத்தான்!"

அவன் கிரிக்கெட் மேட்ச்சைப் பற்றித்தான் பேசுகிறான் என்று அவளுக்குப் புரிந்தது. ஆனால் அந்த முக்கியமான விளையாட்டுப் போட்டியை மிஸ் செய்ததால் என்ன நன்மை என்று குழம்பினாள் அவள்.

## 12

மீனுக்கு
நீந்த
யார்
கற்றுக்
கொடுத்தார்கள்?
வானவில்லிற்கு
வண்ணத்தையும்
வடிவத்தையும்



யார்
கொடுத்தார்கள்?
மழை
வரும்பொழுது
மயிலுக்கு
நடனமாட
யார்
கற்றுக்
கொடுத்தது?
உன்னைப் பார்த்தவுடன்
தொலைந்து போக
என் மனதிற்கு யார்
கற்றுக் கொடுத்தது?

"என்ன சொல்றீங்க புரியலை?"

"ம்... நீ கொடுத்த பாயசத்தை நான் குடிச்சதால நான் ஒரு கிரிக்கெட் மேட்ச்சில் பங்கேற்க முடியாமல் போயிற்று.

ஆனால் அன்று ரோஹித்திற்கு ரொம்ப உடம்பு முடியாமல் போனது. அன்று இரவு நான் அவனை ஹாஸ்பிடலுக்கு அழைத்துச் செல்லும்படி ஆகிவிட்டது.

அதனால் உன் பாயசத்திற்குத் தான் நன்றி சொல் வேண்டும். இல்லாவிட்டால் அன்று ரோஹித் ரொம்ப கஷ்டப்பட்டு இருப்பான்."

"ஓ... அ... அப்படியா! பாவம் ரோஹித்..." எ தடுமாறினாள்.

"அந்தப் பாயசத்தில் ஏதாவது கலந்தியா அவந்தி?"

"இ... இல்லை..." என்று சமாளித்தாள்.

"நீ பொய் சொல்கிறாய் என்று எனக்குத் தெரிகிறது."

அவன் விழிகள் கூர்மையாக அவள் மேல் படிந்தது. அவன் விழிகளின் தீட்சண்யத்தைத் தாள முடியாமல் முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டாள் அவள்.

"இல்லை... நான் பொய் சொல்லவில்லை!" என்று முனகினாள் அவள்.

"ஏன்... அதில் தூக்க மருந்து கலந்தாய் அவந்தி?"

"நான் ஏதும் கலக்கவில்லை..." என்று கத்தினாள்.

"கத்திச் சொன்னால் பொய் உண்மையாகிவிடாது. புரிந்து கொள்!"

"நோ... நோ... நீங்கள் என்ன லை-டிடெக்டர் மிஷினா வைத்துக் கண்டுபிடிக்கிறீங்க?

நீங்க டயர்டா இருந்ததால தூங்கி இருப்பீங்க. இட்ஸ் நாட் பிகாஸ் ஆஃப் மீ!"

"ம்... உன் கண்களைப் பார்த்தாலே தெரியும்... அதுக்கு லை-டிடெக்டர் வேண்டாம்.

எவ்வளவு டயர்டாக இருந்தாலும்... நான் அந்த மாதிரித் தூங்க மாட்டேன் அவந்தி. சொல்... ஏன் அப்படிச் செய்தாய்?" என்றான் மென்மையாக.

அவள் ஏதும் பதில் சொல்லாமல் தலைகுனிந்தாள்.

"நீங்க அனாவசியமாக என்னைச் சந்தேகப்படறீங்க. என் வேலையைப் பார்க்கத்தான் நான் வந்தேன்.



உங்க தேவையில்லாத கேள்விகளுக்குப் பதில் சொல்ல நான் இங்கு வரலை..."

"ம்... பொய் பேசுபவர்கள் எல்லோருமே இப்படித்தான் தவறை மறைக்க ஏதாவது உளறுவார்கள்.

நீயும் அதே மாதிரிதான் செய்கிறாய்."

"வில் யூ ஜஸ்ட் ஸ்டாப் இட். போலீஸ் விசாரணை மாதிரி செய்யறீங்க..."

அவன் அதைக் கேட்டு கலகலவெனச் சிரித்தான்.

"போலீஸ் விசாரணை உனக்குப் பழக்கமா அவந்தி?"

"எல்லாமே அனுபவத்தால் தெரிய வேண்டும் என்று அவசியம் இல்லை..." என்று படபடத்தாள்.

கோபத்தால் அவள் முகம் சிவந்தது.

"கூல்... சரி வா. இதற்கு மேல் நான் உன்னைச் சங்கடப்படுத்த விரும்பவில்லை."

"எனக்குத் தலைவலிக்கிறது. வேறு என்ன இடம் உங்கள் ஃபேக்டரியில் பார்க்க வேண்டும்?"

"ம்... இதற்கு மேல் ஏதும் இல்லை. இன்னொரு யூனிட் உள்ளது.

ஆனால் அதுவும் இதே போன்றதுதான். நிறைய மெஷின்கள் இதே போல் இருக்கும். அதனால் உனக்கு ரொம்ப யூஸ்ஃபுல்லான விஷயம் ஏதும் கிடைக்காது."

"அப்படியா! தென்... நான் கெஸ்ட்-ஹவுஸ் போகவா? இஃப் யூ அலவ் மீ?"

"ஷ்யூர்... போகலாமே! நான் உன்னைப் பிடித்து வைத்திருக்கவில்லை அவந்தி.

நான் உன்னை வெளியே அழைத்துப் போய் மும்பையின் முக்கிய இடங்களைக் காட்டலாம் என நினைத்தேன்..."

"இ... இல்லை. எனக்குத் தலை வலிக்கிறது."

"சரி... ஓ.கே. உன் இஷ்டம்! டேக் ரெஸ்ட். நாளை பார்க்கலாம்."

"தேங்க்ஸ்!" என்று சொல்லிக் கொண்டே ஓட்டமும் நடையுமாக அங்கிருந்து வெளியேறினாள் அவந்திகா.

கம்பெனியில் இருந்து அவளைத் திரும்ப கெஸ்ட் ஹவுஸ் அழைத்துச் செல்லக் கார் தயாராக இருந்தது.

காரில் ஏறி உட்கார்ந்த பின்பும் அவள் படபடப்பு அடங்கவில்லை.

காட்! சரண் எவ்வளவு துல்லியமாக என்னை எடை போட்டு இருக்கிறான். நான் பொய் சொல்கிறேன் என்பதை எவ்வளவு அடித்துத் தீர்மானமாகச் சொல்கிறான் என்று வியந்தாள்.

அவன் கண்களுக்கு மனதில் இருப்பதை ஊடுருவிப் பார்க்கும் திறன் இருப்பது போல் தோன்றியது அவளுக்கு. அவன் ஸ்கேன் செய்யும் வித்தை தெரிந்தவன் போல.

அவன் பார்வையின் கூர்மை தாங்காமல்தானே இல்லாத தலைவலியை வரவழைத்துக் கொண்டு கிளம்ப வேண்டியதாயிற்று.



அதற்கு மேல் அங்கே இருந்தால் நானே ஏதாவது உளறிக் கொட்டினாலும் கொட்டி விடுவேன். அவனுடைய பார்வையின் சக்தி அது என்று நினைத்துப் பெருமூச்சு விட்டாள்.

"மேடம்! கெஸ்ட் ஹவுஸ் வந்திடுச்சி..." என்று டிரைவர் குரல் கொடுக்க, கனவுலகில் இருந்து நிஜ உலகிற்கு வந்தாள் அவந்திகா.

"ஓ... தேங்க்ஸ்."

"மேடம்! வேற எங்காவது போகணும்னா சொல்லுங்க..."

"இ... இல்லை. வேண்டாம்..."

"மேடம்! என் நம்பரைத் தர்றேன். குறிச்சுக்கோங்க. எங்காவது போகணும்னா ஃபோன் செய்யுங்க. அஞ்சு நிமிஷத்தில வந்திடுவேன்!" என்று ஒரு பேப்பரில் நம்பரை நீட்டினான் அவன்.

"சரி... தேங்க்ஸ்!" என்று அதைக் கைப்பையில் பத்திரப்படுத்தினாள் அவள்.

கெஸ்ட் ஹவுஸிற்கு வந்தவள் அலுப்பு தீரச் சுடுநீரில் குளித்தாள். சாப்பாட்டு வாசனை அவள் பசியைத் தூண்டியது.

"மேம்ஸாப்... கானா..." என்று கூர்க்கா புன்முறுவலோடு அவளிடம் சமிக்ஞை செய்தார்.

டைனிங் டேபிளில் சமையல் பதார்த்தங்கள் பீங்கான் பாத்திரங்களில் மூடி வைக்கப்பட்டு இருந்தன.

"சாப்பிடுங்கள்..." என்று ஹிந்தியில் உபசரித்தான் சுவர்க்கா.

சேரில் உட்கார்ந்தாள் அவள். சப்பாத்தி, நான், சப்ஜி, ஜீரா ரைஸ், நவரத்ன குருமா என ஏகப்பட்ட அயிட்டங்கள் இருந்தன.

பசிக்கு எல்லாமே சுவையாக இருந்தன. வேக வேகமாக சாப்பிட்டாள் அவள். கடைசியில் பாதாம்கீர் இருந்தது.

ஏனோ சரண் கேட்ட கேள்விகள் அவள் மனதைக் குடைந்தன. பாயசத்தைக் குடிக்க மனமில்லாமல் இருந்தாள்.

"மேடம்... கீர் டேஸ்ட் செய்யுங்க... பகுத் அச்சா!" என்று சுவர்க்கா சொன்னார்.

"இல்லை... வேண்டாம்."

"சரி மேடம்! ஈவினிங் குடிங்க..."

"ஓகே. சாப்பாடு ரொம்ப அருமை. ரொம்ப நன்றி!" என்றாள் புன்முறுவலோடு அவந்திகா.

"நன்றி மேடம்! உங்களுக்காக ஸ்பெஷலா செய்தது. சரண் சார்தான் மெனு சொன்னார்."

"ஓ... அப்படியா! அவருக்கும் தேங்க்ஸ்!"

"சரி... மேடம்! போய் ரெஸ்ட் எடுங்க நீங்க..."

"சரி..." என்று சொல்லிவிட்டு, தன் அறைக்குள் சென்றாள் அவள்.

அங்கிருந்த படுக்கை அறை 'வா... வா...' என்று அழைப்பது போல் பிரமை அவளுக்கு.



டி.வி.யை உயிர்ப்பித்தாள். ஒரு பழைய இந்திப் படம் ஓடிக் கொண்டிருந்தது. சட்டெனக் கண்கள் பனித்தன அவளுக்கு.

அப்பாவிற்கு ரொம்ப பிடித்த படம் அது. அதை அவர் குழந்தை போல் ரசித்துப் பார்த்தது ஞாபகம் வந்தது.

மேலும் அந்தக் காட்சியைத் தொலைக்காட்சியில் பார்க்கப் பிடிக்காமல் அணைத்தாள் அவள். சட்டென அந்த இடம் மூச்சு முட்டுவது போல் தோன்றியது அவளுக்கு.

மஞ்சு நினைவை வலுக்கட்டாயமாக வரவழைத்தாள் அவள். அவளுக்கு ஏதாவது ஷாப்பிங் செய்தால் என்ன என்று தோன்றியது அவளுக்கு.

'சரி... கொஞ்சம் வெளியே சென்று வரலாம். அப்பொழுதாவது மனம் வேறு எதையேனும் நினைக்கும். இல்லாவிட்டால் உடும்பு போல் பழசையே பிடித்துக் கொண்டிருக்கும்' என நினைத்தாள்.

அறையை விட்டு வெளியே வந்தாள். சுவர்க்கா அவளை ஆச்சரியமாகப் பார்த்தான்.

"மேம்சாப் தூக்கம் வரலையா?"

"இல்லை... நான் கொஞ்சம் வெளியே போய் விட்டு வருகிறேன்."

"உங்களுக்கு வேண்டியவர்கள் இங்கு யாராவது இருக்கிறார்களா?"

"இல்லை... சும்மா வாக்!" என்று பூசி மெழுகினாள்.

"டிரைவரை வரச் சொல்கிறேன், மேடம்!"

"சரி..."

இவர்களிடமிருந்து தப்பித்து தனியாகப் போக முடியாது போல என்ற நினைப்பே அவளுக்கு ஆயாசத்தை அளித்தது.

அடுத்த ஐந்து நிமிடத்தில் கார் தயாராக நின்றது வாசலில்.

"தேங்க்ஸ்!" என்று சொல்லியபடியே காரினுள் அமர்ந்தாள்.

"எங்கே மேடம் போகணும்?"

"பாந்த்ரா கிட்ட ஷாப்பிங் மால்கள் நிறைய இருக்கு. அங்கே போகணும்."

"சரி... மேடம்!"

அங்கே நிறைய கடைகள் உள்ளன என்று அவளுக்குத் தெரியும். விலையும் ரொம்ப அதிகம் இருக்காது.

துணிகளும் நன்றாக, ஸ்டைலிஷாக இருக்கும். மஞ்சுவின் டேஸ்ட் அவளுக்குத் தெரியும். அதனால், அதற்கு ஏற்ற மாதிரி தேர்வு செய்யலாம் அங்கே... என்று தீர்மானித்தாள்.

மும்பை வாழ்க்கை எவ்வளவு பரபரப்பானது என்று அவளுக்குத் தெரியும். நாட்கள் ஆக ஆக பரபரப்பு குறையாது, அதிகரிக்கத்தான் செய்யும் என்று நினைத்துப் பெருமூச்சு விட்டாள்.

"மேடம்! நான் வண்டியைப் பார்க் செய்கிறேன், இங்கே...



நீங்க ஷாப்பிங் போயிட்டு வாங்க மேடம்!"

"சரி... எப்படியும் ஒரு அரை மணி நேரத்தில் வந்திடுவேன்."

அந்த ஷாப்பிங் மாலினுள் நுழையும் பொழுது மீண்டும் தந்தையின் நினைவு மனதை அழுத்தியது.

தன்னைச் சமாளித்துக் கொண்டு கடையினுள் நுழைந்தாள் அவள்.

மஞ்சுவிற்குப் பிடித்த நிறம் மஞ்சள் மற்றும் ஆரஞ்சு. அதனால் அந்த வண்ணங்களில் சுடிதார்கள் தேர்வு செய்தாள்.

அதற்குப் பொருத்தமாக காதணிகள் மற்றும் மாலையும் எடுத்தாள். எல்லாவற்றுக்கும் உண்டான பணத்தைக் கொடுத்து விட்டு வெளியே நடந்தாள்.

அப்பொழுது யாரோ தன்னைக் கூர்ந்து பார்ப்பது போல் தோன்ற, சட்டெனத் திரும்பினாள் அவள். அங்கே அவனை எதிர்பார்க்காததால் அதிர்ந்தாள்.

மூளை ஒரு நொடி மரத்துப் போக... என்ன செய்வது என்று புரியாமல் திகைத்தாள். பின்பு வேக வேகமாகத் தலை தெறிக்க ஓடினாள்.

கூட்டத்தினரை இடித்துத் தள்ளிக் கொண்டு கண் மண் தெரியாமல் ஓடியவள் எதிரில் வந்த ஒருவன் மீது மோதினாள்.

அவளைத் தாங்கிப் பிடித்தன அவன் வலுவான கரங்கள். அவனும் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவனோ என மிரண்டு போய் விலக முயன்றாள் அவள்.

## 13

நினைவிலும்
உன்
நீள் விழிகள்
என்னை
வருடுகின்றன!
கனவிலும்
உன்
இதழ்கள்
என்னைப்
பார்த்துச்
சிரிக்கின்றன!
எது
நிஜம்!
எது நிழல்?
என்று
புரியாமல்
தடுமாறியபடி
நான்!
கரை சேர்ப்பாயா
என்னை?



"என்ன ஆச்சு அவந்தி? ஏன் இப்படி ஓடி வர்ற...?" என்று சரண் அவளை உலுக்கினான்.

"நான்... நான் அங்கே..." என்று பேச முடியாமல் அவள் கண்கள் கலங்கின. அழுகை வெடித்தது.

"அவந்தி! என்ன இது? நான் இருக்கிறேன்... பயப்படாதே!" என்று அவளை அணைத்தான்.

அவள் அவன் மார்பில் தஞ்சமடைந்தாள். அவள் உடல் நடுங்குவதை அவனால் உணர முடிந்தது.

"உஷ்... அவந்தி... வா என்னோடு... இந்த இடத் திலிருந்து நாம் கிளம்பலாம்..." என்றவன் அவளை அணைத்தபடி கார் அருகே சென்றான்.

காரினுள் அவளை அவன் உட்காரச் செய்தான். கண்மூடி உட்கார்ந்திருந்தாள் அவள். கார் சீறிப் பாய்ந்தது.

ஆனால் அவள் அழுகை அடங்கவில்லை. நினைத்து நினைத்து அழுது கொண்டிருந்தாள் அவள்.

"அவந்தி! ப்ளீஸ் அழாதே. அழுதால் உனக்குத் தலைவலிதான் வரும். ஸோ டோண்ட் க்ரை..." என்று கார் ஓட்டிக் கொண்டே அவளிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டே இருந்தான் அவன்.

கார் ஒரு பெரிய பங்களா முன் நின்றது.

"வா... அவந்தி... இறங்கு."

"இ... இது கெஸ்ட் ஹவுஸ் இல்லையே...?"

"யெஸ்... இது என் வீடு. வா... உள்ளே!"

"நான் எதற்கு... உங்களுக்குச் சிரமம்? என்னை கெஸ்ட் ஹவுஸிற்கு அனுப்பி விடுங்கள்.

ஸாரி... என்னால் உங்களுக்குக் கஷ்டம்..." என்றாள் மெல்லிய குரலில்.

"உள்ளே வா அவந்தி! எனக்கு ஒரு கஷ்டமும் இல்லை..."

"இ... இல்லை ப்ளீஸ்!"

"டோண்ட் ஆர்க்யூ... வா!" என்று அவள் கை மணிக்கட்டை அவன் அழுத்தமாகப் பற்றினான்.

இனி மறுத்துப் பேச முடியாது என்று அவளுக்குப் புரிந்தது.

"உட்கார் அவந்தி. நான் உனக்குச் சூடா குடிக்க ஏதாவது எடுத்து வருகிறேன்."

அடுத்த இரண்டு நிமிடத்தில் ஆவி பறக்க இரண்டு கோப்பைகளை ஒரு ட்ரேயில் வைத்து எடுத்து வந்தான் அவன்.

"குடி... அவந்தி!" என்று அவளிடம் நீட்டினான்.

"ஏ... என்ன இது?"

"ம்... பாயசம்."

அவள் குற்ற உணர்வோடு தலைகுனிந்தாள்.

"ஏய்! பாயசம் எல்லாம் இல்லை. இதில் நான் தூக்க மருந்து கலக்கவும் இல்லை.

சூடான பால்தான். ஸோ... பயப்படாமல் குடி."

"ஸாரி..."

"எதுக்கு அவந்தி?"



"நான்தான் அன்று பாயசத்தில் தூக்க மாத்திரை கலந்தேன். ஐயாம் ஸாரி!" என்றாள் மெல்லிய குரலில்.

"எனக்குத் தெரியும். நீதான் கலந்தாய் என்று... பட் வொய் யூ டிட்?"

"நீங்கள்... அன்று ஒரு மேட்ச்சில்... கிரிக்கெட் மேட்ச்சில் கலந்து கொள்வதாக இருந்தது அல்லவா!"

"யெஸ்... யூ ஆர் ரைட்."

"நீங்கள் அதில் விளையாடக் கூடாது என்றுதான் நான் அப்படிச் செய்தேன்."

"ஓ... நவ் ஐ காட் இட். அசோக் உனக்கு வேண்டியவனா?"

அவன் சட்டெனப் புரிந்து கொண்டானே என அவள் ஆச்சரியப்பட்டாள்.

"இல்லை... எனக்கு அசோக்கைத் தெரியாது."

"அப்புறம் ஏன் அப்படிச் செய்தாய்?"

"என் ஃபிரெண்ட் பெயர் மஞ்சு. ஷி இஸ் மை க்ளோஸ் ஃபிரெண்ட்.

அவளும் அசோக்கும் ஒருவரை ஒருவர் விரும்புகிறார்கள். ஆனால் மஞ்சு வீட்டில் இந்தக் காதலை ஏற்கவில்லை.

அசோக் அந்தஸ்து விஷயம் மஞ்சுவின் பெற்றோருக்குக் காதலை எதிர்க்கச் சாதகமாக இருந்தது.

ஏனென்றால் மஞ்சு பெரிய இடத்துப் பெண். அசோக் கிரிக்கெட்டில் பிரபலமாக இருந்தால் திருமணத்திற்கு சம்மதிக்க வாய்ப்பு அதிகம்.

அதனால்தான் நான்... நான் வேறு வழியின்றி அப்படிச் செய்தேன். ஐயாம் ஸாரி. ப்ளீஸ்!" என்று அழுத படியே பேசினாள் அவள்.

"ம்... கூல் அவந்தி. நீ செய்தது தப்புதான். ஆனால் அது நன்மையில் முடிந்தது.

ரோஹித்திற்கு உடம்பு சரியில்லாமல் போனது அன்றுதான். நான் அவன் அருகே இருந்தது ரொம்ப நல்லதாகப் போனது.

தேங்க்ஸ் டு யூ!" என்றவன் அவள் விழிகளில் இருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்தான்.

"ஐயாம் ஸாரி!" என்று தொடர்ந்து விசும்பிக் கொண்டே இருந்தாள் அவள்.

"ஏய்... நீ செய்தது நல்லதுதான்னு சொல்றேன். இன்னும் என்ன அழுகை?" என்று அவளைத் தன் புறம் இழுத்தான் அவன்.

அவன் அணைப்பு அவளுக்கு இதமாக இருந்தது. நான் ஏன் இவ்வளவு பலவீனமாக உணர்கிறேன்... என்று தன் நிலை கண்டு அவளுக்கு அவமானமாக இருந்தது.

சட்டென விலகினாள் அவள்.

"ஏன் அவந்தி! என்னைப் பிடிக்கவில்லையா?"

அவள் பதில் ஏதும் சொல்லாமல் தலைகுனிந்தாள்.

"சரி... ஏன் அப்படித் தலைதெறிக்க ஓடி வந்தாய் சொல்?"

அவள் மௌனமாக இருந்தாள்.



"சொல் அவந்தி! யார் உன்னைத் துரத்தினார்கள்?"

அவள் ஏதும் சொல்லாமல் அழத் தொடங்கினாள்.

"அவந்தி! நீ விஷயம் என்னவென்று சொன்னால்தான் என்னால் உனக்கு உதவி செய்ய முடியும்."

"எனக்கு எந்த உதவியும் வேண்டாம். யாரும் என்னைத் துரத்தவில்லை."

"ஏன் இப்படி விஷயத்தை மூடி மறைக்கிறாய் அவந்தி?

நீ எதற்கோ பயப்படுகிறாய்?

உன்னைச் சுற்றி ஏதோ மர்மம் இருக்கிறது. எனக்கு அது புரிகிறது.

ப்ளீஸ்! நான் உனக்கு உதவி செய்யத்தான் கேட்கிறேன், சொல்!" என்று அவள் கையைப் பற்றினான் அவன்.

அவன் தொடுகையில் தன்னை மறந்து எல்லா வற்றையும் உளறி விடுவோமோ எனப் பயந்தாள் அவள்.

"ப்ளீஸ்! என்னை வற்புறுத்தாதீங்க..." என்று கையை இழுத்துக் கொண்டாள் அவள்.

அவனிடமிருந்து ஒரு பெருமூச்சு பிறந்தது.

"சரி... நீ போய் ரெஸ்ட் எடு. எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு..." என்றபடியே அறையில் இருந்து வெளியேறினான் அவன்.

அவன் சென்ற பின்பு ஏனோ தான் ஒரு இருண்ட உலகில் இருப்பது போல் உணர்ந்தாள் அவள். யாரை

மும்பையில் சந்திக்கக் கூடாது என நினைத்தாளோ... அந்த அரக்கனை அவள் சந்தித்தது விதியா?

கடவுளே! அவன் என்னைப் பார்த்திருப்பானா? என்னைப் பின்தொடர்வானா? என் வாழ்க்கை ஏன் இப்படித் தடம் மாறி ஓடுகிறது?

சென்னைக்குக் கிளம்பி விடலாமா? சரணிடம் பேசலாமா...?

சரணிடம் எல்லாவற்றையும் சொல்லி விடலாமா?

வேண்டாம்! சென்னைக்கு உடனே போக வேண்டும் என்று மட்டுமே சரணிடம் சொல்லலாம்.

என்ன காரணம் என்றால் உடம்பு சரியில்லை என்று சொல்லிவிடலாம்.

நிஜமாலுமே மனமும் உடலும் சோர்ந்துதான் போய் விட்டது. சென்னையிலும் அந்தக் கொடுமைக்காரன் என்னைத் தொடர்வானா?

அப்பா... எனக்குப் பயமாக இருக்கிறது. ஐயாம் அலோன். என்னைக் காப்பாற்றுங்கள் அப்பா... என்று கதறினாள் அவள்.

சட்டென ஏற்பட்ட அதிர்ச்சியாலோ என்னவோ உடலும் மனமும் சோர்ந்து போய் படுக்கையில் கிடந்தாள் அவள். அடுத்து என்ன செய்வது என்று புரியாமல் அவள் மனம் தவித்தது.

கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது. யாராக இருக்கும் என்று பயந்தாள் அவள்.



"அவந்தி! நான்தான் கதவைத் திற..." என்று சரண் குரல் கேட்ட பின்பு ஒரு நிம்மதிப் பெருமூச்சு அவளை அறியாமல் வெளிப்பட்டது.

படுக்கையில் இருந்து எழுந்து கதவைத் திறந்தாள் அவள்.

"இந்தா அவந்தி!" என்று ஒரு கவரை அவளிடம் நீட்டினான் அவன்.

"எ... என்ன இது?"

"பிரித்துப் பார்."

நடுங்கும் விரல்களோடு அந்தக் கவரைப் பிரித்தாள் அவள்.

உள்ளே ஒரு விமான டிக்கெட் இருந்தது. அவள் பெயரில்.

"உன்னுடைய ரிடர்ன் டிக்கெட் அவந்தி! நீ சென்னை போகலாம்.

ஐ நோ யூ ஆர் நாட் கம்ஃபர்டபிள் ஹியர் இன் மும்பாய்."

"ஐயாம் ஸாரி... நான் பாதியிலேயே போகும்படி ஆகிவிட்டது."

"இட்ஸ் ஓகே. யூ ஆர் நாட் வெல். உன்னை ஏதோ உருக்குலைக்கிறது.

அது என்னவென்று நீ சொல்ல மறுக்கிறாய். உன் கண்களில் எப்பொழுதும் பயமும் கோபமும் கவலையும் தெரிகிறது அவந்தி!"

"இ... இல்லை... அப்படி..." என்று அவள் முடிக்கும் முன்பு அவன் குறுக்கிட்டான்.

"நிஜம் எது என்று உனக்குத் தெரியும். உன் மனதிற்குத் தெரியும். நான் பொய் சொல்லவில்லை என்றும் உனக்குத் தெரியும்.

என் கணிப்புத் தவறானது கிடையாது அவந்தி. உன்னைச் சுற்றி ஒரு மர்மம் இருக்கிறது. நீ அதில் அமிழ்ந்து போய் இருக்கிறாய்.

உன்னைக் காப்பாற்ற நான் இருக்கிறேன். உனக்கு உதவிக்கரம் நீட்ட நான் தயாராக இருக்கிறேன். ஆனால் நீ ஏனோ என்னை நம்ப மறுக்கிறாய்."

அவள் கண்கள் அகல அவனைப் பார்த்தாள்.

"நான் நல்லவன்தான் என்று உனக்குத் தெரியும். உன் மனதிற்கு அது தெரியும். பட் ஏன் நீ உன் மாய உலகில் இருந்து நீ வெளியே வர மறுக்கிறாய்?

சொல் அவந்தி... சொல். வாட் இஸ் பாதரிங் யூ. ப்ளீஸ் என்னிடம் சொல்!" என்று அவள் முகத்தைக் கையில் ஏந்தினான்.

அவள் கண்களை மூடிக் கொண்டாள். அவன் உதடுகள் அவள் மூடிய கண்களை ஒற்றி எடுத்தன.

அவள் ஏதோ ஒரு புதிய உலகில் பவனி வந்து கொண்டிருந்தாள். அந்த மென்மையில் தன்னைத் தொலைத்து விடுவோமோ என்று மனம் பதறியது. இருந்தாலும் உடல் அதை அலட்சியப்படுத்தியது.

"ப்ளீஸ் அவந்தி! என்னிடம் சொல்..." என்று அவன் குரல் அவள் காதோரம் கிசுகிசுத்தது.



அவள் அவன் தோள் வளைவில் முகம் புதைத்தாள். அவன் கைகள் அவளை வலுவாக அணைத்தன.

"அவந்தி! சொல் என்னிடம்... உன் சஞ்சலத்தை..."

சட்டென அவள் புலன்கள் விழித்துக் கொண்டன.

"வேண்டாம்... ப்ளீஸ்!" என்று சொல்லியபடியே அவனைத் தள்ளினாள் அவள்.

அவன் முகத்தில் கோப ரேகைகள் தெரிந்தன.

"நீ ஒரு வித்தியாசமான பெண். ரொம்ப அழுத்தமான பெண்ணும்கூட. இட்ஸ் நாட் குட் ஃபார் யூ.

சீக்கிரமாக இங்கிருந்து சென்னை போய் விடு. ஐ டோண்ட் வாண்ட் டு ஸீ யூ அகெய்ன்!" என்று சொல்லிய படியே அங்கிருந்து வெளியேறினான் அவன்.

அவன் கோபமாகச் செல்வதையே பார்த்தபடி நின்றாள் அவள்.

## 14

பூலோகம்
என் காலின்
கீழே!
விண்மீன்கள்
சாலை
எங்கும்!
என் வீட்டுத்
தோட்டத்தில்

நிலவு
அமுதைப்
பொழிகிறது!
கனாக்
கண்டேன்
தோழி!
உன்னாலே
இனிமையான
கனவுகள்!
இனிமையான
நிஜம்
எப்பொழுது என்
கை வசமாகும்!

சென்னை வந்த பின்பு மனம் சற்று லேசானது போல் உணர்ந்தாள் அவள். மஞ்சுவும் உடன் இருந்ததால் மனம் ஏதும் நினைக்காமல் சமர்த்தாக இருந்தது.

"அவந்தி! ஒரு குட் நியூஸ்."

"சொல் மஞ்சு..."

"மேக் எ கெஸ்...?"

"உன் வீட்டில் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டார்களா? ஐ மீன் உனக்கும் அசோக்கிற்கும் திருமணம் பேசி முடிவு செய்து விட்டார்களா?"



"வாவ். சூப்பரா கெஸ் செஞ்சிட்டியே... சான்ஸே இல்லை... உன்னை ஃபீட் செய்ய... டீலா... நோ டீலா... ப்ரோக்ராமில் கலந்துக்கோ அவந்தி! யூ வில் பி ரிச் ஜஸ்ட் லைக் தட்!"

"எனக்கும் லக்கிற்கும் ரொம்ப தூரம் மஞ்சு!"

"ஏய் கமான் அவந்தி! நான் உன்னைப் புண்படுத்த நினைச்சு அப்படிச் சொல்லலை... இட்ஸ் எ ஜோக். ப்ளீஸ் தப்பாகப் பேசி இருந்தால் ஐயாம் ஸாரி."

"இட்ஸ் ஓ.கே. அதுக்குள்ள ஏன்டி ஸாரி எல்லாம்... சரி, எப்பக் கல்யாணம்?"

"இன்னும் ஒரு மாசத்தில அவந்தி. ஐயாம் ஸோ எக்ஸைட்டட். உனக்குத்தான் நன்றி சொல்லணும். காட்! தட் கிரிக்கெட் மேட்ச் டிஸைடட் மை லைஃப். அதுவும் அசோக் அந்த மேட்ச்சில் 'மேன் ஆஃப் தி மேட்ச்' வேறு. அப்பாவிற்கு ரொம்ப சந்தோஷம். நான் உனக்கு ரொம்ப ரொம்ப தேங்க்ஸ் சொல்லணும் அவந்தி!" என்று அவள் கன்னத்தைச் செல்லமாகத் திருகினாள் மஞ்சு.

"ஏய்... இந்த விளையாட்டெல்லாம் இனி என்கிட்டே வேண்டாம் மஞ்சு!"

"யூ..." என்று அவளை அடிக்கக் கை ஓங்கினாள் மஞ்சு.

"கல்யாணம் எங்கே மஞ்சு? சென்னையிலா இல்லை ஊட்டியிலா?"

"ஊட்டியில்தான். அப்பாவின் பிஸினெஸ் நண்பர்கள் பெரும்பாலானோர் ஊட்டியில்தான் இருக்கிறார்கள்.

பட் சென்னையில் என் ஃபிரண்ட்ஸ் நிறைய பேர் இருக்கிறார்கள். அதனால் இங்கே ஒரு ரிசப்ஷன் வைக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

நீ என்கூடவேதான் இருக்கப் போகிறாய். சென்னை ஆர் ஊட்டி இட்ஸ் இம்மெட்டீரியல் ஃபார் யூ!

அதோடு நீ... அதற்கு அப்புறம் சரணைப் பார்த்தாயா... பேசினாயா?"

"ம்... நான் அவரிடம் பேசினேன் மஞ்சு. எல்லா விஷயத்தையும் அவரிடம் சொல்லி விட்டேன்."

"காட்! எல்லா விஷயம் என்றால் உன் அப்பாவைப் பற்றிக் கூடவா?"

"இல்லை மஞ்சு. கிரிக்கெட்டில் அசோக் விளையாடுவதற்காக நான் பாயசத்தில் ஸ்லீப்பிங் டோஸைக் கலந்தேன் என்று ஒத்துக் கொண்டேன்."

"அச்சோ... சொல்லிட்டியா? அதுக்குச் சரண் என்ன சொன்னார்? ஹி ஷுட் ஹாவ் பீன் அப்ஸெட்?"

"இல்லை மஞ்சு... ஹி இஸ் எ நைஸ் பெர்ஸன். அன்று அவர் நன்றாகத் தூங்கிவிட்டார் போல...

ரோஹித்திற்கு அன்று ரொம்ப உடம்பு சரியில்லாமல் இருந்தது போல... மேட்ச் போயிருந்தால் வீட்டிற்கு வந்திருக்க முடியாது. ரோஹித்தைக் கவனித்திருக்க முடியாது...



அதனால் ஹி வாஸ் ஹாப்பி தட் ஹி வாஸ் இன் ஹோம் ஆன் தட் டே" என்று சொல்லும் பொழுது சரணின் நினைவுகளால் அவள் முகம் சிவந்தது.

"ஏய்... என்ன ட்ரீம் உனக்கு? இப்படி முகம் எல்லாம் சிவப்பாகி விட்டது. இஸ் தேர் எனிதிங்க் இண்ட்ரஸ்டிங்!" என்று குறும்பாகக் கண் அடித்தாள் அவள்.

"ஏய்... அப்படி எல்லாம் ஏதும் இல்லை..." என்று சொல்லும் பொழுது முகம் மேலும் சிவந்தது.

"சரண் இஸ் எ நைஸ் பெர்ஸன். யூ ஆர் எ ஸ்வீட் கேர்ல்.

இரண்டு பேரும் சேர்ந்தால் லைஃப் வில் பி வெரி குட்!"

"மஞ்சு... ப்ளீஸ்! நீ நினைப்பது போல் ஏதும் நடக்காது. சரண் எங்கே... நான் எங்கே...

ஹி இஸ் எ டாப் பிஸினெஸ்மேன். மும்பாயில் அவர் தொழிற்சாலையைப் பார்த்தேன். எவ்வளவு பிரம்மாண்டமாக இருந்தது தெரியுமா?

அங்கே தொழிற்சாலையில் நிறைய கைதிகளுக்கு அவர் வேலை வாய்ப்புக் கொடுத்திருக்கிறார். அவர்கள் குடும்பத்திற்கு நிறைய உதவிகள் செய்துள்ளார்.

ஹி இஸ் எ நைஸ் பெர்ஸன். என் வாழ்க்கைத் தரம் என்று ஒன்று இருக்கிறதே மஞ்சு..." என்றாள் மெல்லிய குரலில்.

"ஏய்... நான் கேட்பதற்குப் பதில் சொல். உனக்கு அவரைப் பிடித்திருக்கிறதா?"

அவந்திகாவின் கண்கள் கலங்கின. அவன் சொன்னது அவள் நினைவுக்கு வந்தது.

'நீ ஒரு அழுத்தமான பெண், வித்தியாசமான பெண். ஐ டோண்ட் வாண்ட் டு லீ யூ அகெய்ன்!' என்று அவன் சொல்லிவிட்டு வெளியேறியது அவள் நினைவில் வட்டமடித்தது.

"சொல் அவந்தி! டு யூ லைக் ஹிம்?"

"யெஸ்... மஞ்சு. நான் மும்பாயில் இப்ராஹிமைப் பார்த்தேன்."

"ஏய்... என்ன சாவகாசமாகச் சொல்றே... உன்னை அவன் பார்த்தானா?"

"பார்த்தான் மஞ்சு. ஒரு ஷாப்பிங் மால் பாந்த்ராவில் ரொம்பப் பிரசித்தம். அங்கே உனக்கு சல்வார் செட் வாங்கிவிட்டு திரும்பிக் கொண்டிருந்தேன்.

அப்பொழுதுதான் அவனைப் பார்த்தேன் மஞ்சு. என் உயிர் போனது போல் உணர்ந்தேன் நான்... வேகவேகமாக ஓடினேன்."

"ஓடியபோது சரண் மேல் மோதினாயா...?"

"ஏய்... என்னடி நேரில் பார்த்த மாதிரி சொல்றே?"

"ம்... எத்தனை சினிமாவில் இதைப் பார்த்திருப்போம்... வில்லன் சேஸ் செய்வான். ஹீரோயின் ஓடுவாள்.

ஹீரோ மேல் அவள் மோதுவாள். பின்பு வெள்ளைத் தேவதைகள் பாட்டுப் பாடிக் கொண்டு அவர்களைச் சுற்றுவார்கள்."



"ஏய்... நான் எவ்வளவு பதட்டப்பட்டேன் தெரியுமா? உனக்கு இது கிண்டலா இருக்கா...?"

"அச்சோ... உன்னைக் கிண்டல் செய்ய அப்படிச் சொல்லலை அவந்தி!

இப்ராஹிமைப் பார்த்து நீ எப்படி பயந்திருப்பன்னு எனக்குத் தெரியும்.

ஐ ஜஸ்ட் வாண்டட் டு மேக் யூ ஃபீல் லைட். அதனால்தான் அப்படிச் சொன்னேன். என்னைத் தப்பாக நினைக்காதே!"

"இல்லை... மஞ்சு! நான் தப்பாக நினைக்கவில்லை. ஆனால் சரண் என்னைத் தப்பாக நினைத்துக் கொண்டிருக்கிறார்.

அவருக்கு என் மேல் ஏதோ சந்தேகம்? 'யாராவது உன்னைத் துரத்தினார்களா? ஏன் அப்படிப் பயந்து ஓடி வந்தாய்?' என்று என்னைத் திரும்பத் திரும்பக் கேட்டார்.

உன்னைச் சுற்றி ஏதோ மர்மம் இருக்கிறது என்றுகூடச் சொன்னார்."

"ஓ... இவ்வளவு பேசினாரா? நீ பேசாமல் உண்மையை அவரிடம் சொல்லி விடலாமே அவந்தி!"

"சொல்லலாமா என்று நினைத்தேன் மஞ்சு. ஆனால் ஏனோ பயமாக இருக்கிறது.

வாழ்க்கை எனக்கு கற்றுக் கொடுத்த பாடமே அவநம்பிக்கைதான். குறிப்பாக ஆண்கள் மேல்!"

"பட் சரண் இஸ் எ நைஸ் பெர்ஸன் என்று நீதானே சொன்னாய். மே பி ஹி வில் அண்டர்ஸ்டாண்ட் யூ!"

"நீ சொன்னபடி நடந்தாலும் நடக்கலாம். பட் ஐ டோண்ட் வாண்ட் டு ட்ரை இட் அவுட்.

அதோடு உண்மை எல்லாம் தெரிந்தால் ஹி... ஹி மே அவாய்ட் மீ... ஐ ஜஸ்ட் டோண்ட் வாண்ட் தட் டு ஹாப்பன்!"

"ம்... புரிகிறது. நீ செய்வது தப்பு என்று நான் சொல்ல விரும்பலை.

பட் ஸ்டில் ஐ ஃபீல் யூ கேன் கிவ் எ ட்ரை!"

"ம்... ஐயாம் நாட் ஷ்யூர் வாட் ஹாஸ் டு பி டன் மஞ்சு? மனம் ஒன்று சொல்கிறது. மூளை ஒன்று சொல்கிறது...

நான் எப்பவும் இந்த மாதிரிக் குழம்பியது இல்லை. இப்பொழுதுதான் முதல் முறையாக இந்த மாதிரி ஃபீல் செய்கிறேன்."

"ம்... மனதில் காதல் வந்து விட்டால் இதுதான் பிரச்சனை. எனக்குப் புரிகிறது."

"ஏய்! என்ன நீ... உடனே இப்படி எல்லாம் சொல்கிறாய்?"

"ம்... நான் உன்னைவிட இதில் அனுபவசாலி. நான் சொல்வது நடக்கும் பார்..."

"போடி... சும்மா ஜக்கம்மா மாதிரி ஏதோ பேசறே?"

"ஜக்கம்மா குறி எப்படி சரியா பலிக்குதுன்னு பார் மகளே! பொறுமையாகப் பார்..." என்று கை உயர்த்தி ஆசிர்வதிப்பது போல் பாவனை செய்தாள் அவள்.



அதைக் கேட்டு அவள் கலகலவெனச் சிரித்தாள்.

"மஞ்சு... போதும் கதை அடிச்சது... உன்னோடு பேசிக் கொண்டிருந்தால் நேரம் போவதே தெரியவில்லை...

பட் ஆஃபீஸுக்குப் போக வேண்டும். அதனால் நான் கிளம்ப வேண்டும்."

"சரிடி... நீ கிளம்பு. நான் ஒரு குட்டித் தூக்கம் போடப் போகிறேன்."

"ஓகே மஞ்சு. பை... ஸ்வீட் ட்ரீம்ஸ்...!"

அன்று ஆஃபீஸ் சென்ற பின்பு முதல் வேலையாக சரணின் ப்ராஜெக்ட்டைத் தொடங்க வேண்டும்.

"ஹாய் சார்லஸ்! ஹவ் ஆர் யூ?"

"ஹாய் அவந்தி! குட் டு ஸீ யூ அகெய்ன். ஹவ் ஆர் யூ?

மும்பைப் பயணம் உபயோகமாக இருந்ததா?"

"நன்றாக இருந்தது சார்லஸ். அங்கே போனதால் சரண் கம்பெனி பற்றி நிறைய விஷயங்கள் தெரிந்தன."

"ஹோப் இட்ஸ் ஆல் குட் நியூஸ்."

"யெஸ்... அஃப்கோர்ஸ். சரண் கம்பெனியில் வேலை பார்ப்பவர்கள் பெரும்பாலும் கைதிகள்.

அவர் சப்தமில்லாமல் ஒரு புரட்சி செய்து கொண்டிருக்கிறார். இதைப் பற்றி எல்லாம் நம்ம விளக்கப் படத்தில் காட்டலாம் என்று நினைக்கிறேன்."

"ம்... நல்ல ஐடியாதான். நிறைய பிஸினெஸ்மேனிற்கு இது வித்தியாசமான முயற்சியாக இருக்கும்.

அவர்களும் தம் கம்பெனிகளில் ஏதேனும் புதுமை யான நல்ல விஷயம் செய்யலாம் என நினைக்கலாம்...

அட்லீஸ்ட் வீ கிவ் ஆன் ஆப்பர்சூனிடி டு தெம்."

"யெஸ் சார்லஸ்! நானும் அப்படித்தான் நினைத்தேன்."

"சரி... எப்ப முடிப்ப இந்தப் ப்ராஜெக்ட்டை?"

"ம்... ஒரு வாரம் டைம் வேணும்..."

"சரி... ஒரு வாரம் கழித்து ஃபர்ஸ்ட் மாடலை ரிவியூ செய்யலாம்."

"ஷ்யூர்... ரிவியூ பார்க்கலாம்..." என்று சொல்லிவிட்டு வெளியேறினாள் அவள்.

தன் அறைக்குள் சென்றவள், கணினி முன் அமர்ந்து வேலையைத் தொடங்கினாள்.

மும்பையில் சரண் கம்பெனியில் பார்த்ததை எல்லாம் குறிப்பெடுத்து வைத்திருந்தாள்.

அதைக் கணினியில் லோட் செய்தாள்.

பின் அதற்குத் தேவையான படங்கள் என்ன வரைந்தால் நன்றாக இருக்கும் என யோசித்தாள்.

அதைக் கணினியில் கிராபிக்ஸ் மூலம் வரைந்து பார்த்தாள்.

முதல் திரையில் சரணின் மும்பை கம்பெனி.

பின்பு அங்குள்ள இயந்திரங்கள், பின்பு அங்கு வேலை பார்க்கும் பெண்கள் என ஒவ்வொன்றாக உருவகப் படுத்தி அதைக் கணினியில் வரைந்தாள்.



பின்பு சரணின் படம். அவன் பேசுவது போல் வரவேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

சரணே பேசலாம்... டப்பிங் தேவைப்படாது.

அவன் குரல் நல்ல கம்பீரமாக இருக்கிறது. அதனால் அவனே பேசலாம்... என்று தீர்மானித்தாள்.

நித்யா பேசுவதைக்கூட இதில் சேர்க்கலாம்.

ரொம்ப இயற்கையாக, அழகாக அவள் விவரித்தது அவந்திகாவின் நினைவுக்கு வந்தது. எல்லாவற்றையும் மறக்காமல் கவர் செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டே கணினியில் மூழ்கினாள்.

## 15

உன்
மேல்
பட்டுத்
தெறிக்கும்
சூரியக்
கதிர்
மேல்
ஏனோ
எனக்குப்
பொறாமை!
உன்னைத்
தீண்டி

உன்
கூந்தலைச்
செல்லமாகக்
கலைக்கும்
காற்றின்
மேல்
ஏனோ
எனக்குப்
பொறாமை!

அந்த வாரம் இறக்கைக் கட்டிக் கொண்டு பறந்தது அவந்திகாவிற்கு. சரண் கம்பெனி சம்பந்தப்பட்ட ப்ராஜெக்ட் வேலையில் மும்முரமாக இருந்தாள்.

சனிக்கிழமை வந்தது. ரோஹித்திற்குக் கம்ப்யூட்டர் க்ளாஸ் எடுக்க வேண்டும் என்று அவளுக்கு நினைவுக்கு வந்தது.

ஆனால் அங்கு செல்ல ஏனோ தயக்கமாக இருந்தது. சரண் சொன்னது அவள் காதில் ஒலித்தது. 'ஐ டோண்ட் வாண்ட் டு ஸீ யூ அகெய்ன்' என்று சொன்னானே அன்று.

அதை எல்லாம் மீறி நான் அங்கு போக வேண்டுமா என்று மனதில் ஒரு நமைச்சல் பரவியது.

மஞ்சு, அசோக்குடன் ஷாப்பிங் சென்று இருந்ததால் அறையில் தனியாக இருந்தாள் அவள். யோசனையில் மூழ்கி இருந்தவளைக் கலைத்தது கைபேசி சப்தம்.



"ஹலோ அவந்திகா."

"ஸோ... மேடமை போன் செய்து அழைத்தால்தான் வருவீங்களா?" என்று மறுமுனையில் சரண் குரல் உறும லாகக் கேட்டது.

ஒரு வாரம் கழித்து சரண் குரல் கேட்கிறது. ஆனால் அவன் கோபப்படும் பொழுதுகூட என் மனதில் ஒரு மென்மையான இசை வழிகிறதே, அது ஏன் என்று தன்னையே கேட்டுக் கொண்டாள் அவள்.

"என்ன பதிலையே காணோம்?"

"இ... இல்லை. நீங்கள்தானே அன்று வர வேண்டாம் என்று சொன்னீர்கள்?"

"நானா...? எப்பொழுது?"

"மும்பாயில் இருந்தபொழுது நீங்கள் சொன்னீர்கள்... ஐ டோண்ட் வாண்ட் டு ஸீ யூ அகெய்ன் என்று சொன்னீர்கள்."

"யூ ஆர் எ கிட்."

"எ... என்னது...?"

"ம்... நீ சரியான குழந்தை என்று சொல்கிறேன். அன்று நான் கோபத்தில் அப்படிச் சொன்னேன். அதைப் போய் மனதில் வைத்துக்கொண்டு ஞாபகமாகச் சொல் கிறாயே. உன்னை என்ன செய்யலாம்?" என்றான் குரலில் கிண்டல் வழிய.

"எ... எனக்கு எப்படித் தெரியும்? நீங்கள் நிஜமாக சொன்னீர்களா இல்லை சும்மா கேலிக்குச் சொன்னீர்க என்று எனக்கு எப்படித் தெரியும்?"

"சரி... ஸாரி. நான் அப்படிச் சொல்லி இருக்கக் கூடாது. ப்ளீஸ்... இப்ப வீட்டுக்கு வா. ஸாரி... இப்படிச் சொன்னால் போதுமா? இல்லை வேறு மாதிரி சொல்ல வேண்டுமா?"

அவள் அதைக் கேட்டு லேசாகச் சிரித்தாள்.

"அப்பாடா... கோபம் போச்சு. நான் கார் அனுப்புகிறேன்... வா."

"இ... இல்லை. கார் எல்லாம் வேண்டாம்."

"சொன்னதைக் கேள். அப்புறம், வரும்பொழுது ஏதேனும் குடிக்கக் கொண்டு வரப் போறியா?"

"ம்... எ... என்னது. புரியவில்லை."

"நாளைக்கு ஒரு கிரிக்கெட் மேட்ச் இருக்கு. அதனால பாயசம் எடுத்துட்டு வரப் போறியோன்னு நினைச்சேன்."

"ஸாரி... நான் அப்படிச் செய்தது தப்புதான்."

"இப்படி மாறி மாறி ஸாரி கேட்டுக் கொண்டு இருந்தால்... நீ வீட்டுக்கு வருவது அம்பேல்தான்."

"இ... இல்லை. வருகிறேன்."

"தட்ஸ் குட். நான் இப்பொழுது கார் அனுப்புகிறேன்.'

"தேங்க்ஸ்."

"ம்... அப்புறம் என்னுடைய பிராஜெக்ட் எந்த அளவில் இருக்கிறது?"

"நான் வடிவமைத்து விட்டேன். சார்லஸ் ரிவ்யூ செய்ய வேண்டும்."

"ஓ... குட். எப்ப ரெடியாகும்?"



"எப்படியும் இன்னும் ஒரு இரண்டு நாளில் ரெடியாகி விடும்."

"சரி... அப்ப டெமோவை நான் வந்து பார்க்கிறேன். உங்க ஆஃபீஸிற்கு வருகிறேன்."

"ஓ... உங்களுக்கு எதற்குச் சிரமம்? நான் சார்லஸை வீட்டுக்கு வேண்டுமானால் வரச் சொல்கிறேன்."

"இல்லை... நானே வருகிறேன். அந்த அட்மாஸ் பியரில் டெமோ பார்த்தால்தான் நன்றாக இருக்கும். நீ இருக்க வேண்டும், கண்டிப்பாக டெமோ பொழுது. நீ தானே இந்த ப்ராஜெக்டில் ஒர்க் செய்தாய்."

"ம்... நான் தான் முழுக்க முழுக்கச் செய்தேன். ஐ வில் பி தேர் ஃபார் தி டெமோ."

"தட்ஸ் நைஸ் அவந்தி. டேக் கேர்."

"யூ டூ..."

அவனிடம் போனில் பேசிய பின்பு மனம் ஏனோ உற்சாகமாக இருப்பதை அவளால் உணர முடிந்தது.

ஒரு மஞ்சள் நிற சல்வாரை அணிந்து கொண்டு சரண் வீட்டிற்குச் செல்லத் தயாரானாள் அவள்.

வாசலில் காலிங் பெல் அடிக்கும் சப்தம் கேட்டது. டிரைவராக இருக்கும் என்று நினைத்தபடியே துவாரம் வழியாகப் பார்த்தாள் அவள்.

டிரைவர் முகம் தெரிந்தது. கதவைத் திறந்தாள் அவள்.

"மேடம்... சரண் சார் வீட்டிலிருந்து வருகிறேன்."

“ஓ... வாங்க போகலாம். நான் ரெடி” என்றபடியே வீட்டுக் கதவைப் பூட்டினாள்.

காரில் உட்காரும்பொழுது மீண்டும் சரண் நினைவில் அவள் மனம் மிதந்தது. அவனைப் பார்க்க வேண்டும் என்று அவள் மனம் துடித்தது.

தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு மனதை அலைபாய விடாமல் இருந்தாள் அவள். ரோஹித்திற்கு அடுத்த தடவை ஏதாவது வாங்கி வர வேண்டும் என்று நினைத்தபடியே காரில் இருந்தாள்.

“மேடம்... வீடு வந்துவிட்டது.”

“ஸாரி... ஏதோ யோசனை...” என்று சொன்னபடியே காரில் இருந்து இறங்கினாள்.

வீட்டை நெருங்கும்பொழுது ஒரு பெண்ணின் சிரிப்பொலி அவள் காதில் விழுந்தது. கூடவே சரணின் பேச்சுக் குரல் சப்தம்.

அவள் மனதில் ஏனோ ஒரு பொறாமை உணர்வு புகை போல் படர்ந்தது. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு வீட்டினுள் சென்றாள்.

ஹாலில் சோபாவில் ஒரு இளம்பெண் அமர்ந்து இருந்தாள். அவள் முகம் ரொம்பப் பொலிவாக இருந்தது. கண்களில் மின்னிய ஒரு கவர்ச்சி அவள் அழகை அதிகப்படுத்தியது.

சரணும் அந்த அழகியும் ஏதோ பேசிக்கொண்டு இருந்தனர். இவளைக் கண்டவுடன் பேச்சுத் தடைப்பட்டது. ஆனால் அவர்கள் இருவர் கண்களும் ஏதோ பேசிக் கொள்வது போல் ஒரு பிரமை அவளுக்குத் தோன்றியது.



“தாரிணி... ஷீ இஸ் அவந்திகா. நம்ப கம்பெனி ப்ராடெக்ட்ஸ் பற்றி ஒரு விளம்பரம் தயாரிக்கிறதா சொன்னேன்தானே... ஷீ இஸ் வொர்க்கிங் ஆன் திஸ் ப்ராஜெக்ட்.”

“ஓ... அப்படியா அத்தான்? ப்ராஜெக்டில் ஏதாவது சந்தேகமா? இங்கே வந்திருக்காங்க.”

“ஓ... நோ. ரோஹித்திற்கு க்ளாஸ் எடுக்க வந்திருக்கா. ஷீ இஸ் வெரி ஸ்மார்ட் இன் ஆல். ரொம்ப முக்கியமாகச் சொல்ல வேண்டும் என்றால் பாயசம் செய்வதில்...”

அவந்திகாவின் முகம் சிவந்தது.

சே... ஏன் இவன் இப்படி மானத்தை வாங்குகிறான் என்று மனதினுள் அவனைத் திட்டினாள்.

“ஹலோ அவந்தி... நைஸ் மீட்டிங் யூ.”

“ஹலோ...”

“எனக்கும் ஒரு நாள் பாயசம் செய்வது எப்படி என்று சொல்லித் தருகிறீர்களா? அத்தான் உங்களை ரொம்பவே புகழ்ந்து தள்ளுகிறாரே...”

“ஓ... ஷ்யூர்” என்றாள் வலிய வரவழைத்த புன்னகையோடு அவந்திகா.

“ஆன்ட்டி... வாங்க” என்று ரோஹித் வந்து அவள் கையைப் பற்றினான்.

இதுதான் சாக்கு என்று அவன் அறையை நோக்கிச் சென்றாள் அவள்.

மனதின் மூலையில் தாரிணியைப் பற்றிய எண்ணங்கள் ஒட்டடை போல் படிந்தது.

யார் இவள்? சரணை அத்தான் என்று அழைக்கிறாளே. உறவுக்காரப் பெண்ணா? பார்க்க அழகாக இருக்கிறாளே என்று மனதிற்குள் குமைந்தாள் அவள்.

"ஆன்ட்டி... இன்னிக்கு கம்பியூட்டர் வேண்டாம்."

"ஓ... சரி. அப்ப வேற என்ன செய்யலாம்?"

"அதான் தெரியலை ஆன்ட்டி."

"ம்... சரி. ஸ்டோரி டெல்லிங்."

"நோ ஆன்ட்டி."

"தென் கலரிங். இந்த புக்கில் இருக்கும் படங்களுக்குக் கலர் அடிக்கலாமா?"

"அச்சோ... அது ஸ்கூலில் பண்ணி போர் அடித்து விட்டது."

"அப்படியா? அப்ப கொஞ்ச நேரம் சைக்கிள் ஓட்டறியா?"

"ம்... அது வேண்டாம். அங்கிளோட நான் நிறைய ரவுண்ட் போயிட்டேன்."

"அப்ப செடிக்குத் தண்ணீர் ஊற்றலாமா?"

"ஏற்கனவே தோட்டக்கார அங்கிள் அதற்குத் தண்ணீர் ஊற்றி விட்டாரே!"

"ரோஹித் நீயே சொல்லு. வேற என்ன செய்யலாம்?"

"ம்... உங்களுக்குக் காகிதத்தில் பொம்மைகள் செய்யத் தெரியுமா ஆன்ட்டி?"

"ஓ... தெரியுமே!"



"ஏன்... கேட்கிறே?"

"என் ஃபிரண்ட் அபிஷேக் இன்னிக்கு ஒரு ஏரோப்ளேன் பொம்மை காகிதத்தில் செய்து கொண்டு வந்தான். ரொம்ப அழகாக இருந்தது.

எனக்கும் அது மாதிரி செய்ய வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது."

"ஓ... இதுதானா மேட்டர். காகிதத்தில் இந்த மாதிரி அழகான பொம்மைகள் செய்வதற்கு என்ன பெயர் தெரியுமா?"

"தெரியாதே ஆன்ட்டி! என்ன பெயர்?"

"இட்ஸ் கால்ட், ஓரிகாமி. இப்ப இதைப் பற்றி நிறையப் புத்தகங்கள் கிடைக்குது.

நான் உனக்கு நெக்ஸ்ட் டைம் வாங்கி வருகிறேன்."

"ஓ... ரொம்ப தேங்க்ஸ் ஆன்ட்டி!"

"சரி... இப்ப நாம பறக்கும் தட்டு, ஏரோப்ளேன்... அப்புறம் நட்சத்திரம், மேகக் கூட்டம் எல்லாம் செய்யலாமா?"

"ம்... சரி!" என்று உற்சாகமாகத் தலையாட்டினான்.

அடுத்த ஒரு மணி நேரம். இருவரும் காகிதத்தை வெட்டுவதிலும், வடிவமைப்பதிலும் மும்முரமாக இருந்தனர்.

அழகழகான சின்னச் சின்னக் காகித வடிவங்கள் தயாராகின. எல்லாவற்றையும் ரோஹித்தின் டேபிள் மேல் அடுக்கினாள்.

"சூப்பர் ஆன்ட்டி தேங்க்ஸ்!" என்றான் சந்தோஷமாக ரோஹித்.

"சரி ரோஹித்! ஆன்ட்டி கிளம்பவா? லேட் ஆச்சுதானே ஆன்ட்டிக்கு!"

"சரி ஆன்ட்டி. நெக்ஸ்ட் வீக் எனக்கு மறக்காம புக் வாங்கிட்டு வரணும்..."

"ஓ... ஷ்யூர். நீ சமர்த்தா குட் பாயா மிஸ் சொல்ற ஹோம் ஒர்க் எல்லாம் செய்யணும்... சரியா?"

"கண்டிப்பா ஆன்ட்டி. பை... பை... குட் நைட்."

"குட் நைட் ரோஹித்!"

ஹாலிற்கு வரும்பொழுது சரணும் தாரிணியும் மீண்டும் கண்ணில் பட்டனர். அவன் தாரிணியோடு பேசினால் எனக்கு ஏன் இந்த மாதிரி ஒரு அவஸ்தை ஏற்படுகிறது என்று தன்னையே கேட்டுக் கொண்டாள் அவள்.

"என்ன அவந்தி! கிளாஸ் ஓவரா?" என்றான் சரண்.

"ம்... யெஸ்... நான் கிளம்பறேன்."

"ஓகே. டிரைவர் தயாராக இருக்கார்."

தாரிணியைப் பார்த்து 'வர்றேன்...' என்பது போல் தலையசைத்தாள் அவந்திகா.

"ஓகே. பை... குட் நைட்!" என்று அவள் சிநேகமாகப் புன்னகைத்தாள்.

தனக்கு ஏன் இவள் மேல் இவ்வளவு பொறாமை? பார்க்க நல்ல பெண் போல் இருக்கிறாள். அவள் சரணுக்கு முறைப்பெண் போல... என மனதிற்குள் பொருமினாள் அவந்திகா.



# 16

பூக்கள்
அங்கொன்றும்
இங்கொன்றுமாக
சாலையில்
விழுந்து
உள்ளன!
உன்
வருகைக்காக
அதுவும்
காத்துக்
கொண்டு
இருக்கிறதோ?
உன்
பட்டுப்
பாதங்கள்
பட்டால்
மோட்சம்
பெறும்
பூக்கள்!

அன்று அலுவலகத்தில் வேலையில் ஆழ்ந்திருந்தாள் அவந்திகா. இடையிடையே தாரிணியின் முகம் அவள் கண்முன்னே நிழலாடியது.

நான் ஏன் இப்படி இருக்கிறேன் என்று தன் மேலேயே கோபம் வந்தது அவளுக்கு.

"அவந்தி! வீட்டுக்குக் கிளம்பலையா? இட்ஸ் எய்ட் ஓ க்ளாக் நவ்!"

"ம்... இன்னும் கொஞ்ச நேரம் சார்லஸ்... இதை இப்ப முடிச்சிட்டேன்னா நல்லது.

இல்லாட்டி கண்டினியுடி மிஸ் ஆயிடும்..."

"ஓ... வாட் எ டெடிகேஷன். சரண் இஸ் லக்கி."

"சார்லஸ் என்ன இது? என்னைப் பற்றி நன்றாகத் தெரிந்தும் நீ இந்த மாதிரிப் பேசுவது சரி இல்லை.

எந்தப் ப்ராஜெக்ட்டாக இருந்தாலும் நான் இந்த மாதிரிதான் வேலை பார்ப்பேன். அதனால் இந்த மாதிரிப் பேசாதே!"

"காட்! சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். அதைக்கூட சீரியஸாக எடுத்துக் கொள்ளணுமா?"

"ஓ... ஜோக்கா! சரி... இனிமேல் ஜோக் இது என்று சொல்லிவிட்டு ஜோக்கைச் சொல்..."

"கூல் அவந்தி! நான் கிளம்பறேன். யூ என்ஜாய் யுவர் வொர்க். பை குட் நைட்."

"குட் நைட் சார்லஸ்!"

அடுத்த ஒரு மணி நேரம் கணினியில் மூழ்கினாள் அவந்திகா.

டெமோ கொடுக்கலாம்... இந்தப் ப்ராஜெக்ட்டை என்று அவளுக்குத் திருப்தி ஏற்பட்டது.



எப்படியும் நாளை சார்லஸ் இதைப் பார்ப்பான். அவன் கண்டிப்பாக மாற்றங்கள் சொல்வான் எனத் தனக்குள்ளே சொல்லிக் கொண்டாள்.

கணினியை அணைத்து விட்டுக் கைப்பையை எடுத்துக் கொண்டு ஆஃபீஸில் இருந்து கிளம்பினாள் அவள்.

"குட் நைட் மேடம்!" என்றார் கூர்க்கா.

"குட் நைட்."

"ஆட்டோ வேணுமா மேடம்?"

"வேண்டாம். பஸ்ஸில போயிடுவேன்... நோ ப்ராப்ளம்!"

ஸ்கூட்டியில் பெட்ரோல் இல்லாத நேரத்தில், பெட்ரோல் போட நேரம் இல்லாத பொழுது பஸ்ஸில் பயணிப்பது அவள் வழக்கம்.

அவள் அலுவலகத்தில் இருந்து பஸ் ஸ்டாண்ட் ஐந்து நிமிட நடைதான். பேருந்து நிலையம் காலியாக இருந்தது.

யாரோ தன்னைப் பார்ப்பது போல் தோன்ற, சட்டெனப் பின்னால் திரும்பிப் பார்த்தாள் அவள். தொப்பி அணிந்து கொண்டு ஒருவன் உட்கார்ந்திருந்தான் அங்கே.

அவன் கைபேசியில் ஏதோ மும்முரமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் எனத் தன்னையே கடிந்து கொண்டாள் அவள்.

அவள் செல்ல வேண்டிய பஸ் வந்தது. காலியாக இருந்தது. அதில் அவள் ஏறினாள்.

தான் போக வேண்டிய இடம் சொல்லி நடத்துனரிடம் டிக்கெட் வாங்கிக் கொண்டு சீட்டில் அமர்ந்தாள் அவள்.

நாள் முழுவதும் கணினி முன் உட்கார்ந்து இருந்ததால் கண்கள் ஓய்விற்குக் கெஞ்சின. தன்னை மீறிக் கண் அயர்ந்தாள் அவள்.

"மேடம்! டெர்மினஸ் இறங்கலையா?"

"ஓ... வந்து விட்டதா?" என்று முணகிக் கொண்டே கண் விழித்தாள் அவள்.

பஸ்ஸில் இருந்து இறங்கியவுடன் சில்லென்று வீசிய காற்று இதமாக இருந்தது.

மழை பெய்திருந்ததால் மண்வாசனை அவள் நாசியை நிறைத்தது.

அதை அனுபவித்தபடியே மெதுவாக நடந்தாள் அவந்திகா. பத்தடி நடந்திருப்பாள். சாலையோரம் இருந்த புதர்களில் சலசலப்பு கேட்டது.

என்ன என்று பதறியபடி திரும்பிப் பார்த்தாள் அவள். சாலையோர விளக்கொளியில் அவன் முகம் தெரிந்தது.

அவள் விழிகள் அச்சத்தால் உறைந்தன.

அவளை நோக்கி அவன் வேகமாக வருவது தெரிந்தது. சமாளித்துக் கொண்டு வேகமாக ஓடத் தொடங்கினாள் அவள்.

ஆள் இல்லாத சாலை அவள் பயத்தை அதிகரித்தது. கண் மண் தெரியாமல் வேகமாக ஓடினாள் அவந்திகா.

சாலையில் இருந்த கல் அவள் காலை இடறியது.



தடுமாறிக் கீழே விழுந்தாள் அவள். எழுந்திருக்க முயன்றபோது இரண்டு கைகள் அவள் நிற்பதற்கு உதவி செய்தன.

"விடு... விடு என்னை..." என்று பலம் கொண்ட மட்டும் அவனைத் தள்ள முயன்றாள் அவள்.

"ஈஸி அவந்தி... நான்தான்..." என்று சரண் குரல் கேட்க, அவள் பயம் தெளிந்தது.

ஆனால் அதிர்ச்சியில் அவள் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது.

அவன் கைகள் அவள் தோள் மேல் ஆதரவாகப் படர்ந்தன.

"ஒன்றும் இல்லை அவந்தி! பயப்படாதே... கொஞ்சம் நடந்து வர முடியுமா?

கார் அங்கே நிறுத்தி வைத்திருக்கிறேன்..."

"ம்..." என்று முணகினாள் அவள்.

பின்னால் யாராவது வருகிறார்களா என்று திரும்பிப் பார்த்தாள் அவள்.

"டோண்ட் ஓர்ரி... நான் இருக்கும் வரை உனக்கு எந்த ஆபத்தும் வராது."

காரில் அவளை உட்கார வைத்தான் அவன். அ வரை அடக்கி வைத்திருந்த அழுகை பீறிட்டது. கைகளா முகத்தை மூடிக் கொண்டு அழுதபடி இருந்தாள் அவள்.

அவள் அழுவதையே பார்த்துக் கொண்டிருந்த அவன்.

அழுது அழுது ஓய்ந்து போனவள் மெதுவாகக் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"நான் உன்னை வீட்டில் விட்டுவிட்டுப் பிறகு போகிறேன்..." என்றான் வெறுமையான குரலில்.

அவன் தன்னை ஒதுக்கித் தள்ளுகிறான் என்று அவளுக்குப் புரிந்தது.

ஏனோ அவன் மேல் கோபம் தீ ஜ்வாலை போல் படர்ந்தது.

"என்னை ஏன் காப்பாற்றினீங்க?" என்று படபடத்தாள் அவள்.

"நீ என்று இல்லை... யாராக இருந்தாலும் நான் இதைத்தான் செய்திருப்பேன்."

"யூ ஹாவ் சேன்ஜ்ட் எ லாட்!"

"அப்படியா என்ன? ஆறடி உயரம். எழுபது கிலோ எடை. எதுவும் மாறவில்லையே என்னில்..."

"காரை நிறுத்துங்கள். நான் நடந்து போய் விடுவேன்."

"ஏன் மறுபடியும் ஓட்டப் பந்தயம் ஓட ஆசையா?"

"யூ ஆர்... நாட் எ ஹியூமன். உங்களுக்கு இரக்கமே இல்லை..."

"இரக்கம் இருப்பதால்தான் உன்னைக் காப்பாற்றினேன்..."

"அ... அப்புறம் ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள்?"

"எ... எப்படி?" என்று அவளைப் போலவே பேசினான்.

அவள் சட்டென மௌனமானாள்.



அவளை அவன் வீட்டில் தனியாக விட்டுச் செல்வதை அவள் விரும்பவில்லை. அதை எப்படிச் சொல்வது என்று தவித்தாள் அவள்.

அவன் நடந்ததைப் பற்றி ஏதும் கேட்காமல் விட்டேத்தியாக நடந்து கொள்வது அவள் மனதைப் பாதித்தது.

நான் ஏதோ பார்சல் போல... என்னை ஒப்படைத்து விட்டால் வீட்டில் கடமை தீர்ந்தது போல் அல்லவா நடந்து கொள்கிறான் என்று மருகினாள் அவள்.

"சொல் அவந்தி! நான் எப்படி நடந்து கொள்கிறேன்?"

"மஞ்சு... வீட்டில் இல்லை."

"புரியவில்லை... நான் ஒன்று கேட்டால் நீ ஒன்று சொல்கிறாய்!"

"எனக்கு வீட்டில் இருக்க பயமாக இருக்கிறது..." என்றாள் குரல் நடுங்க அவள். கண்களில் அவளை அறியாமல் கண்ணீர் பெருகியது.

"அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?"

அவள் அவன் முகத்தைப் பார்த்தாள். அவன் கண்களில் எந்த உணர்ச்சியும் இல்லை.

"எனக்கு நேரமாகிறது... சீக்கிரம் சொல்."

"நான்... நான் எங்காவது பாதுகாப்பாக இன்று இரவு இருக்க முடியுமா, ப்ளீஸ்!" என்று தீக்கித் திணறிச் சொன்னாள்.

"என்னால் அதற்கு ஏற்பாடு செய்ய முடியும். பட் ஒ... கண்டிஷன். நீ அதற்குச் சம்மதித்தால்தான்..."

"நான்... என்ன செய்ய வேண்டும்?"

"ம்... உன்னை ஏன் அவன் துரத்தினான்... சொல்?"

அவள் மௌனமாக இருந்தாள்.

"நீ சொன்னால்தான் அவந்தி! இல்லாவிட்டால் நான் உன்னை வீட்டில் தனியாக விட வேண்டி வரும்..."

"எனக்குத் தெரியாது யார் அவன் என்று?"

"பொய்..."

"இ... இல்லை எனக்குத் தெரியாது."

"லுக் அவந்தி! மும்பாயிலும் இதே போல் ஆனது, அன்று ஒரு நாள். அப்பொழுது நான் உன்னைக் காப்பாற்றினேன்.

இங்கு சென்னையில் இப்பொழுது உன்னை ஒருவன் துரத்துகிறான்.

இது எல்லாம் சும்மா என்று எடுத்துக் கொள்ள நான் ஒன்றும் முட்டாள் இல்லை.

உன்னைச் சுற்றி ஏதோ மர்மம் இருக்கிறது. அது என்னவென்று நீ சொல்லும் வரை நான் உனக்கு எதுவும் செய்வதாக இல்லை."

"சரி, நீங்கள் எதுவும் செய்ய வேண்டாம். நான் போகிறேன்..." என்று கார்க் கதவைத் திறக்க முயன்றாள் அவள்.

அவன் சட்டென அவள் கையைப் பற்றினான்.

"ஏன் இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறாய். நான் உனக்கு அவ்வளவு வேண்டாதவனாகப் போய் விட்டேனா?



ரோடில் போகும் எவனோ ஒருத்தனிடம் மாட்டிக் கொண்டால்கூடப் பரவாயில்லை...

ஆனால் என்னிடம் விஷயத்தைச் சொல்ல மாட்டாய். அப்படித்தானே!" என்று அவள் முகத்தை மென்மையாக ஏந்தினான்.

"சொல்... அவந்தி! என்ன பிரச்சனை உனக்கு?"

அதற்கு மேல் தாங்க முடியாமல் அவன் மார்பின் மேல் தலை சாய்த்தாள் அவள்.

"ஷ்... ப்ளீஸ் அழாதே. சொல் என்ன பிரச்சனை உனக்கு...?" என்று முதுகை ஆதரவாக வருடினான் அவன்.

"ம்... சொல்கிறேன்!" என்றாள் மெல்லிய குரலில் அவள்.

"என் அப்பா மும்பாய் டீம்ட் யூனிவர்ஸிடியில் புரபஸர் அண்ட் ஹெச்.ஓ.டி.

கணிதம் தான் அவர் ஸ்பெஷலைஸேஷன். அவர் வகுப்புகள் ரொம்ப நன்றாக இருக்கும்.

அதனால் அவரைச் சுற்றி எப்பவும் மாணவ, மாணவியர் இருப்பார்கள். ஹி இஸ் எ பாப்புலர் பெர்ஸன் இன் காலேஜ்.

பட் ஹி இஸ் வெரி அன்லக்கி. இல்லாவிட்டால் இப்படி எல்லாம்..." என்று தொடர முடியாமல் அழுகை முட்டியது.

"ப்ளீஸ் அவந்தி!" என்று அவள் கையைத் தன் கையோடு பிணைத்தான் அவன்.

தன்னைச் சமாளித்துக் கொண்டு பேசத் தொடங்கினாள் அவள்.

"அப்பா வகுப்பில் அந்தக் காலேஜ் நிறுவியவரின் மகன் படித்து வந்தான். அவனால் எப்பவும் எல்லா ஆசிரியருக்கும் பிரச்சனைதான்.

அவன் படிப்பில் ரொம்ப சுமார். ஆனால் ஜுனியர் ஸ்டுடண்ட்ஸிற்கு ஏதாவது சிரமம் கொடுத்துக் கொண்டே இருப்பான்.

அவனை அப்பா நிறைய முறை வார்ன் செய்தார். பட் நோ யூஸ். அவன் நடவடிக்கையில் மாற்றம் ஏதும் இல்லை.

அதோடு அவன் அப்பாவும் அவன் நடவடிக்கைகளைக் கண்டு கொள்ளாமல் ரொம்ப விட்டேத்தியாக விட்டு விட்டார்.

அது அவனுக்கு வசதியாகப் போய் விட்டது. ஒருநாள் அவன் ஜுனியர் மாணவி ஒருத்தியை ரொம்பக் கேவலமாக நடத்தினான்.

அதை அவள் அப்பாவிடம் புகார் செய்தாள். அப்பா அவனை காலேஜில் இருந்து ஒரு வாரம் சஸ்பெண்ட் செய்தார்."

"ஓ... அவன் அப்பா எப்படி அதை விட்டார்?"

"அவர் வெளிநாட்டில் இருந்ததால் அவரால் ஏதும் செய்ய முடியவில்லை.

ஆனால் சலீமால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அதோடு சலீமின் ஃபிரெண்ட் இப்ராஹிம் அவனுக்கு ரொம்பத் தூபம் போட்டான்."

"இப்ராஹிமா... அது யார்?"



"இப்ராஹிம்... மும்பாய் போலீஸ் கமிஷனரின் மகன். அவனும் அதே காலேஜ். பட் ஹீ வாஸ் ஸீனியர் டு சலீம்.

இருவருக்கும் காமன் எனிமி என் அப்பா. அதனால் அவர்கள் திட்டமிட்டு செய்த சதியால் என் அப்பா இப்பொழுது சிறைச்சாலையில்..."

"என்னது சிறைச்சாலையிலா?"

"ஆமாம்... அவர் மேல் பொய்க் குற்றச்சாட்டு போட்டனர் இப்ராஹிமும், சலீமும்..."

"என்ன குற்றச்சாட்டு?"

"அந்த ஜுனியர் மாணவியிடம் தகாத முறையில் நடந்து, பின்னர் அவளைக் கொலை செய்து விட்டார் என் அப்பா என்பதுதான் குற்றச்சாட்டு!" என்றாள், வெறுமையான குரலில்.

"காட்! நீ அதை எதிர்த்து வழக்கு ஏதும் போட வில்லையா?"

"இல்லை... அதற்குள் வழக்கு முடிந்து விட்டது."

"இப்பொழுது எந்த ஜெயிலில் உள்ளார் உன் அப்பா? எவ்வளவு வருடம் தண்டனை?"

"திகார் ஜெயிலில்தான் இருக்கிறார். பத்து வருடங்கள் அவருக்குக் கடும் காவல் தண்டனை!"

"கொடுமையான விஷயம்தான். உன் தந்தையை நீ அதற்குப் பின்பு போய் பார்த்தாயா?"

"இல்லை... ஒரு முறை சென்றேன். அவர் அப்பொழுது என்னிடம் இனி அங்கே ஜெயிலுக்கு வர வேண்டாம்... என்று சொன்னார் தீர்மானமாக."

"ஏன் அப்படிச் சொன்னார்?"

"இப்ராஹிம் என்னைத் தேடி வந்தாலும் வருவான் என்று சொன்னார்."

"உன்னைத் தேடி அவன் ஏன் வரவேண்டும்?

உன் அப்பாதானே அவனுக்கு எதிரி.

நீ என்ன குற்றம் செய்தாய் அவந்தி?"

"அப்பா... குற்றமற்றவர் என்பதற்கான ஆதாரம் ஒன்று சிக்கி உள்ளது போல...

இப்ராஹிமும், சலீமும் அதைத் தேடி வர வாய்ப்பு உண்டு என்று அப்பா சொன்னார்."

"என்ன ஆதாரம் அது?"

"தெரியவில்லை. அப்பாவின் நண்பர் ஒருவர் மூலமாக அது என் கைக்கு வந்திருக்க வேண்டும்.

ஆனால் இன்று வரை அப்படி ஏதும் என்னிடம் வரவில்லை."

"ஓ... ஸோ இப்பொழுது உன்னைத் துரத்தியது இப்ராஹிமா... சலீமா?"

"இப்ராஹிம்தான். பணம் படைத்தவன் அவன். சலீமிற்கு அவன் அப்பாவே அபயக்கரம் நீட்டுகிறார்.

போலீஸ் கமிஷனர் முன்பும் பணம் படைத்த அயோக்கியர்கள் முன்பும் போராடிக் கொண்டிருக்கிறேன் நான்..." என்றாள் மெல்லிய குரலில்.



## 17

நீ
தூங்கும்
அழகைப்
பார்க்க
நிலா
உன்
வீட்டு அறையில்
தவழ்கிறது!

நீ
நடந்து
வரும்
அழகை
ஸ்பரிசிக்க
மலர்கள்
படுக்கையாக
விரிந்து
உள்ளன!

நானும்
மாறிவிட்டேன்
உனக்காகக்
காத்துக் கொண்டு
இருக்கிறேன்!

“**ஸோ**... நீ சென்னையில் இருக்கிறாய் என்று இப்ராஹிமிற்குத் தெரிந்து விட்டது. அப்படித்தானே!”

“ஆமாம்... நான் இவர்களுக்காகத் தான் மும்பாயில் இருந்து சென்னைக்கு வந்தேன்.

இவர்கள் என்னை எப்படிக் கண்டுபிடித்தார்கள் என்று தெரியவில்லை.”

“சரி வா... வீட்டுக்குப் போகலாம்.”

“நான் இவ்வளவு சொன்ன பிறகு நீங்கள் மீண்டும் மீண்டும் அதைப் பற்றியே பேசுகிறீர்கள்.”

“நான் சொன்னது என் வீட்டிற்கு. நீ இனி அங்கேதான் இருக்க வேண்டும்.”

“தேங்க்ஸ்... இன்று ஒரு நாள் மட்டும் எனக்குத் தங்க இடம் கொடுங்கள்.”

“ஏன், அப்புறம் என்ன செய்யப் போவதாக உத்தேசம்?”

“தெ... தெரியலை. பட் ஐ டோண்ட் வாண்ட் டு ட்ரபிள் யூ.”

“யார் சொன்னார்கள், நீ ஒரு தொந்திரவு என்று. மே பி யூ ஆர் எ ஸ்வீட் ட்ரபிள்” என்றான் கண்களில் குறும்பு கசிய.

அவள் முகத்தில் நிம்மதி ரேகைகள் பரவின.

“சரி... இந்த நேரத்தில் நீங்க என்ன விஷயமா இந்தப் பக்கம் வந்தீங்க?”

“ம்... ஒரு பட்சி சொன்னது, உன் தேவதைக்கு ஆபத்து. அவளைப் போய் காப்பாத்து... அப்படின்னு...”



“ப்ளீஸ் கிண்டல் வேண்டாம். உண்மையைச் சொல்லுங்க.”

“உண்மைதான் இது. பட்சி சொல்லவில்லை. என் மனசாட்சி சொல்லியது. உன்னோடு பேச வேண்டும் என்று தோன்றியது. உன்னுடைய ஆஃபீஸிற்கு போன் செய்தேன். நீ கிளம்பிப் போனதாகக் சுவர்க்கா சொன்னார். அதனால் உன்னைப் பார்க்கலாம் என்று இங்கே உன் வீட்டுக்கு வந்தேன்.”

“ஓ... எ... என்ன பேச வேண்டும் என்று நினைத்தீர்கள்?”

“ம்... எனக்கு உன்னைப் பிடித்து இருக்கிறது. நீ எப்பவுமே என் அருகில் இருக்க வேண்டும் என்று ஏக்கமாக இருக்கிறது. அதைச் சொல்லத்தான் உன்னைப் பார்க்க வேண்டும் என்று நினைத்தேன்.”

“எ... என்னது?”

“ம்... வேறு எப்படிச் சொல்வது? ஐயாம் நாட் குட் இன் டெல்லிங் ஆர் எக்ஸ்ப்ரஸிங் மை ஃபீலிங்க்ஸ் இன் வர்ட்ஸ்” என்று உல்லாசமாகப் பேசினான்.

அவந்திகா என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் திகைத்தாள்.

“ப்ளீஸ்... கிண்டல் செய்யாதீங்க.”

“ம்... நான் எவ்வளவு உருக்கமாகப் பேசிக்கொண்டு இருக்கிறேன். இது உனக்குக் கிண்டலாக இருக்கிறதா? ஐ திங்க் ஐயாம் இன் லவ் வித் யூ அவந்திகா.”

“எ... என்னது?”

"ஏய் மக்கு, என்ன கதையா சொல்றேன். என்னது... என்னது என்று திருப்பித் திருப்பிக் கேட்கிறாயே?"

"என்னால் நம்ப முடியவில்லை."

"ஏன்?"

"இல்லை... நீங்கள் பெரிய பிஸினெஸ்மேன். உங்களுக்கு என்று ஒரு ஸ்டேட்டஸ் உள்ளது. நான்... அந்த வட்டத்தை நெருங்க முடியாது."

"கமான்... காதலுக்கும் பணத்திற்கும் எப்பவுமே தொடர்பு கிடையாது அவந்தி. இது ராஜா காலத்தில் இருந்து மாறாமல் இருக்கிறது."

"பட்... நீங்கள் நிறையப் பெண்களைச் சந்தித்து இருப்பீர்கள். அவர்களை எல்லாம் விட்டு விட்டு ஏன் என்னைத் தேர்ந்தெடுத்தீங்க? ஐ ஸ்டில் காண்ட் பிலீவ் இட்."

"ம்... தாமரைப் பூவிற்கு, தான் எவ்வளவு அழகு என்று தெரியாது. ரோஜாதான் அழகான பூ என்று நினைத்துக் கொண்டு தன்னைத் தாழ்வாக எடை போடும் அது. பெண் தெய்வங்கள் அமர்ந்து ஆட்சி செய்யும் பூ தாமரைப் பூ. அதைப் போல்தான் நீயும். ஐ லைக் யூ. நான் என்ன செய்தால் நீ சம்மதிப்பாய்? கடலைக் கொண்டு வந்து உன் பாதத்தில் சேர்க்கவா. இல்லை, வானத்தை உன் வீட்டுக் கூரையாக மாற்றவா?"

"அச்சோ... பேச வராது எனக்கு என்று நீங்க சொன்னது ஞாபகத்துக்கு வருது இப்ப..."

"ஸோ... நான் உளர்றேன்... அப்படித்தானே?"

"அப்படி... இல்லை... எனக்கு இதை எல்லாம் நம்ப முடியவில்லை."



"என்னைப் பிடித்து இருக்கிறதுதானே உனக்கு?"

அவள் எதுவும் சொல்லாமல் முகம் சிவந்தாள். வார்த்தைகள் முள் போல் தொண்டையில் சிக்கிக் கொண்டன.

"சொல் அவந்தி?"

"ம்..."

"இவ்வளவு நேரம் பேசிக் கொண்டு வந்தாய். இப்ப என்ன ஆச்சு?"

"ம்..."

"திருமணத்தைப் பற்றி உன் தந்தையிடம் பேச வேண்டும் தானே!"

"ஆமாம்..."

"அவர் முன்னிலையில் நம் திருமணம் நடந்தால் உனக்கு சந்தோஷம் தானே?"

"யெஸ்... தேங்க்ஸ்" என்றவள் சட்டென அவன் கையைப் பற்றினாள். மென்மையாக அவன் கையில் இதழ் பதித்தாள் அவள்.

ஒரு கையில் ஸ்டியரிங்கை வளைத்துக் காரைச் செலுத்திய அவன் கண்களில் வெற்றியின் மினுமினுப்பு தெரிந்தது.

"ஏய்... ஐ ஜஸ்ட் காண்ட் பிலீவ் இட். இப்ப கார் ஓட்டுறேன். அதனால உன்னை இப்ப ஒண்ணும் செய்ய முடியாது. வீட்டுக்குப் போய் உன்னைக் கவனிச்சுக்கறேன்."

அவள் கன்னங்களில் செம்மை படர்ந்தது.

"அவந்தி... அப்பா சம்பந்தமான ஆதாரம் உன்னிடம் இன்னும் வரவில்லையா? இல்லை என்னிடம் வழக்கம் போல் ஏதேனும் மறைக்கிறாயா?"

"இல்லை... வரவில்லை. நான் அப்படி என்ன மறைத்தேன் உங்களிடம்?"

"ம்... ஒன்றா, ரெண்டா சொல்வதற்கு."

"எவ்வளவு வேண்டுமானாலும் இருக்கட்டும். இப்ப அட்லீஸ்ட் ஒன்றாவது சொல்லுங்கள்."

"முதலில் பாயசம் மேட்டர். எவ்வளவு நான் என்னிடம் அதை மறைத்தாய்? அப்புறம் மும்பாயில் உன்னைத் துரத்தியவன் பற்றி வாயே திறக்கவில்லை நீ...

அப்புறம் இங்கே நடந்த சேஸிங். நான் எவ்வளவு கஷ்டப்பட்டு உன்னிடம் இருந்து விஷயங்களை வாங்க வேண்டி இருக்கிறது. கல்லில் இருந்துகூட நாரை உரித்து விடலாம் போல... ஆனால் உன்னிடம் இருந்து ஒரு விஷயம் வாங்குவதற்குள்... போதும்டா சாமி!"

"இப்ப நான் எல்லாவற்றையும் ஒத்துக்கொண்டேனே உங்களிடம்."

"அட் லாஸ்ட். ஐ வொன் தி கேம். அப்புறம் ஒரு முக்கியமான விஷயம் அவந்தி."

"என்ன... சொல்லுங்க."

"இப்ப நாம பேசின விஷயம் நம்மோடு இருக்கட்டும். யாருக்கும் தெரிய வேண்டாம். மஞ்சு உட்பட. உன் அப்பாவைப் பற்றிய ஆதாரம் உன் கைக்கு சீக்கிரமே வரும் என்று எனக்குத் தோன்றுகிறது."

"தேங்க்ஸ் எ லாட். உங்க நம்பிக்கை பலிக்கட்டும்."



"அந்த ஆதாரம் வந்தவுடன் நீ அதை என் கையில் ஒப்படைக்க வேண்டும் அவந்தி. அந்த ஆதாரத்தால் உனக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டாலும் ஏற்படலாம். அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது.

அதனால்தான் சொல்கிறேன். எப்பொழுது வந்தாலும் சரி... எந்த நேரமானாலும் சரி... நீ எனக்கு போன் செய்."

"தேங்க்ஸ்... எ லாட். நான் நிச்சயமாக அதை உங்களிடம் பத்திரமாக ஒப்படைப்பேன். அப்பாவின் வழக்கில் என்னோடு சேர்ந்து போராட நீங்கள் இருக்கிறீர்கள் என்று நினைக்கும் பொழுதே எனக்குப் புதுத் தெம்பு பிறக்கிறது.

ஐயாம் ஸோ ஹாப்பி அபெளட் திஸ். நீங்கள் கைதிகளுக்காக நிறைய நல்ல செயல்கள் செய்வதைப் பார்த்த பொழுதே என் மனம் உங்களுக்காக நெகிழ்கிறது."

"ஓ... அவ்வளவு லேட்டாக நான் உன் மனதில் இடம் பிடித்தேனா? சே... வாட் எ ஷேம்?" என்றான் கிண்டலாக.

"ஆஹா... நீங்கள் மட்டும் என்னவாம்? ஏதோ லவ் அட் ஃபர்ஸ்ட் ஸைட் போல் அல்லவா பேசறீங்க. முதல் தடவை உங்களை மூலிகைப் பண்ணையில் சந்தித்தேனே...

காட்! அப்பொழுது எப்படி எரிந்து விழுந்தீர்கள் என் மேல். சே... நான் உங்களை மனதிற்குள் நன்றாகத் திட்டிய படி இருந்தேன். ஏன் அவ்வளவு கோபம் உங்களுக்கு? ரோஹித் தான் அந்தத் துப்பாக்கியை அங்கே விட்டு இருப்பான் என்பது என் யூகம். பட் நீங்கள் தான் ஏதோ மிரட்டிப் பணம் பறிக்க வந்தது போல் பேசினீர்கள். ஏன் அப்படி வாய்க்கு வந்ததைப் பேசினீர்கள்?"

"ம்... ஸாரி... அவந்தி. ரோஹித் தான் அந்தத் துப்பாக்கியை அங்கே வைத்திருப்பான் என்று எனக்குத் தெரியும்.

பட் நீ அதைச் சொன்ன பொழுது நம்பாதது போல நடித்தேன். பணம் பறிக்கத்தான் நீ அப்படிப் பொய் சொல்கிறாய் என்று சொன்னேன்."

"ஏன்... அப்படிச் சொன்னீங்க?"

"நீ போலீஸ் கேஸ் அப்படின்னு போகக் கூடாதுன்னு தான் அப்படி ஓவர் ஆக்ட் செய்தேன்."

"ஓ... இப்படி ஒரு டெக்னிக்கா. போலீஸிடம் போக எனக்குப் பயம்."

"உனக்கு என்ன பயம் அவந்தி?"

"இப்ராஹிமின் அப்பா மும்பாய் போலீஸ் கமிஷனர். அவர் ஏதாவது சொல்லியிருந்தால் என்னைப் பற்றி? லோக்கல் போலீஸில் என்னைத் தேடச் சொல்லி இருந்தால் என்ன செய்வது?

அவரால் எனக்குப் போலீஸ் டிபார்ட்மெண்ட் மேல் நம்பிக்கையே போய் விட்டது. அதனால்தான் போலீஸ் என்றாலே எனக்கு சந்தேகம் கலந்த பயம்.

நீங்கள் ஏன் போலீஸ் – கேஸ் பற்றிப் பயந்தீங்க? அப்புறம் ரோஹித் ஏன் துப்பாக்கியை அங்கே செடி அருகே வைத்தான்?"

"ம்... சொல்கிறேன் அவந்தி. ரோஹித்தின் பெற்றோர்கள் தீவிரவாதத் தாக்குதலால் இறந்தனர். அது அவன் மனதில் நன்றாகப் பதிந்து விட்டது. சின்னப் பையன்



தானே. தீவிரவாதிகளை எப்படியாவது அழிக்க வேண்டும், கொல்ல வேண்டும் என்ற நினைப்பில் தான் துப்பாக்கியை ஒளித்து வைத்து இருக்கிறான்."

"தாட்... ரோஹித்தின் வாழ்வில் இப்படி ஒரு சோகமா? பாவம்! எவ்வளவு ஒரு சின்ன வயதில் இப்படி ஒரு கொடுமை?

பட்... அவன் கையில் எப்படித் தோட்டா இல்லாத துப்பாக்கி கிடைத்தது?"

"நல்ல கேள்வி. என் செக்யூரிட்டி ஒருவர், துப்பாக்கி வேலை செய்யவில்லை என்று என்னிடம் கொண்டு வந்து கொடுத்தார். அது என் அறையில் இருந்தது. அந்தத் துப்பாக்கியைத்தான் ரோஹித் எடுத்து இருக்கிறான்."

"ஓ... அவன் இவ்வளவு கில்லாடியா?"

"ம்... யார் அவனை வளர்க்கிறார்கள்? ஐயா தானே" என்று குறும்பாகச் சிரித்தான்.

அவளும் அவன் சிரிப்பில் இணைந்தாள்.

"அதற்குப் பின்பு உங்களை ஆபீஸில் சந்தித்த பொழுது நான் எவ்வளவு அதிர்ந்தேன் தெரியுமா?"

"ம்... நானும் உன்னை அங்கு எதிர்பார்க்கவில்லை. பட் உன்னைப் பார்த்தபொழுது நான் முடிவு செய்து விட்டேன்."

"என்ன முடிவு செய்தீங்க?"

"உன்னோடு பழகிப் பார்க்கணும் என்று. அதனால் தான் காண்ட்ராக்டை சாக்காக வைத்து உன்னை மிரட்டினேன். நீயும் காண்ட்ராக்டை கேன்சல் செய்து

விடுவானோ இவன் என்று பயந்து போய் நான் சொன்னது எல்லாவற்றுக்கும் ஒப்புக் கொண்டாய்."

"ஒரு சின்னத் திருத்தம். எல்லாவற்றுக்கும் ஒப்புக் கொள்ளவில்லை. ரோஹித்திற்கு க்ளாஸ் எடுக்க மட்டுமே ஒப்புக் கொண்டேன்."

"ம்... உன்னை முதலில் வீட்டுக்கு வரவழைக்க ஒரு வழி கிடைத்தது. இப்பொழுது என் இதயத்திலும் உன்னை வரவழைக்க வழி கிடைத்து விட்டது."

## 18

எனக்குப்
பிடித்தது
எல்லாம்
உனக்கும்
பிடித்து
இருக்கிறது!
வண்ண
மலர்கள்!
சாரல்
மழை!
இதமான
தென்றல்!
நிலவுக்
குளியல்!



எல்லாமே
பிடித்து
இருக்கிறது
உனக்கும்!
என்னையும்
பிடிக்கும்
அல்லவா
நம்புகிறேன் தோழி!

"ஓ... நீங்கள் இவ்வளவு ப்ளான் செய்தீர்களா? ஐ நெவர் ரியலைஸ்ட் இட்."

"ம்... உனக்குத் தெரியாமல் எல்லாவற்றையும் ரகசியமாக வைத்திருந்தேன். இப்பொழுது எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டேன்."

"ம்... நானும் தான்."

"சரி... தூங்க வேண்டும் என்ற உத்தேசம் இருக்கிறதா?"

"ம்... ஷ்யூர். நான் ரோஹித்தோடு அவன் அறையில் படுத்துக் கொள்கிறேன்."

"ஹே... நீ இங்கேயே படுத்துக் கொண்டால் கூட எனக்கு ஆட்சேபணை இல்லை" என்றான் தன் அறையில் இருந்த படுக்கையைச் சுட்டிக்காட்டி சரண்.

அவள் முகத்தில் செம்மை படர்ந்தது.

"நான் அங்கேயே படுத்துக் கொள்கிறேன். குட் நைட்."

"குட் நைட் அவந்தி. ஸ்வீட் ட்ரீம்ஸ்."

அவள் சிரித்துக் கொண்டே அங்கு இருந்து அகன்றாள். ரோஹித் தன் அறையில் படுக்கையில் ஒரு டெடி - பியரை அணைத்துக் கொண்டு படுத்து இருப்பதைப் பார்த்தவுடன் அவள் மனம் நெகிழ்ந்தது.

பாவம் ரோஹித்... தாய் தந்தையரை இழந்தபொழுது அவன் மனம் எவ்வளவு பரிதவித்து இருக்கும் என்று நினைத்து மருகினாள் அவள்.

அவன் அருகில் உட்கார்ந்து அவன் தலைமுடிக் கற்றையை அவன் நெற்றியிலிருந்து ஒதுக்கினாள். அவன் நெற்றியில் முத்தமிட்டாள் அவள்.

"ம்... ரோஹித் மேல் எனக்குப் பொறாமையாக இருக்கிறது" என்று சரண் குரல் பின்னால் இருந்து கேட்கச் சட்டென எழுந்தாள்.

"எ... என்ன வேண்டும்?"

"ம்... ரோஹித்திற்குக் கிடைத்தது இப்பொழுது எனக்கும் வேண்டும்."

"ப்ளீஸ் சரண். உங்கள் அறைக்குப் போங்க."

"ம்... சரி, உனக்குக் குடிக்க சூடாக பால் ஏதாவது வேண்டுமா? என்று கேட்கத்தான் வந்தேன்."

"இப்ப ஏதும் வேண்டாம். நீங்க உங்க அறைக்குப் போனால் போதும்."

"ம்... இப்பவே அதிகாரம் செய்யற. அப்புறம் கல்யாணத்திற்கு அப்புறம் என் பாடு கஷ்டம்தான் போல."

"அட... ராமா. ப்ளீஸ் போய் தூங்குங்க."



"சரி... குட் நைட்."

"கோபமா...?"

"இல்லை. ஐ லைக் யூ தி வே யூ ஆர்."

"தேங்க்ஸ் சரண்."

"நீ உச்சரிக்கும்பொழுது என் பெயர் ரொம்ப இனிமையாக இருக்கிறது அவந்தி."

"யாரோ ஒருத்தர் எனக்குப் பேசவே வராது. ஐயாம் நாட் எக்ஸ்ப்ரஸிவ் அப்படி இப்படின்னு சொன்னதா ஞாபகம். பட் இப்ப ஒரு கவிஞர் ரேன்ஜிற்கு பேசறாங்க."

"ஒரு அழகான பெண்ணைப் பார்த்தால் முட்டாள்கூட கவிஞனாகிவிடுவான்."

"கமான்... நீங்க ஒன்றும் முட்டாள் இல்லை."

"பட் யூ ஆர் எ அட்ராக்டிவ் கேர்ல்."

"நீங்க தூங்கப் போறதில்லையா?"

"ம்... வேற வழி? தூங்கித்தான் ஆகணும். அப்புறம் நாளையிலிருந்து நீ ஆபீஸுக்குப் போக நானே ஏற்பாடு செஞ்சிருக்கேன். நீ காரிலேயே போகலாம். நான் ஒரு நல்ல டிரைவரை ஏற்பாடு செஞ்சிருக்கேன். அதோடு உன்னோடு தாரிணியும் உன் வீட்டில் இருப்பாள். உன்னுடைய வீட்டிற்கு பாதுகாப்பு கொடுப்பதற்கு ஒரு ப்ரைவேட் ஏஜென்ஸி மூலம் ஏற்பாடு செஞ்சாச்சு. உனக்கு எந்த ஆபத்தும் வரக்கூடாது. அதுக்குத்தான் இதெல்லாம். ப்ளீஸ் வேண்டாம் என்று மறுக்காதே."

"தேங்க்ஸ்... எ லாட் சரண்... பட்..." என்று முடிக்க முடியாமல் திணறினாள் அவள்.

"ம்... நீ என்ன சொல்ல வருகிறாய் என்று புரிகிறது எனக்கு. ஏன் உன்னை இங்கே தங்கச் சொல்லாமல் உன் அறையில் இருந்து ஆஃபீஸுக்குப் போகச் சொல்கிறேன் என்றுதானே நினைக்கிறாய்?"

அவள் ஏதும் சொல்லாமல் தலை குனிந்தாள்.

"கல்யாணத்திற்கு முன்பு நாம் இருவரும் ஒரே வீட்டில் இருப்பது அவ்வளவு சரியாக எனக்குப் படவில்லை. உன் அப்பா இங்கு இருந்தால் இதற்கு சம்மதிக்க மாட்டார். அதனால் அவர் இல்லாததை நாம் நமக்கு வசதியாக ஆக்கிக் கொள்ளக் கூடாது. ஸாரி அவந்தி... இஃப் ஐயாம் வெரி ப்ளண்ட்."

"இல்லை சரண். ஐ தாட் தட் வே ஒன்லி. நீங்களும் அதே மாதிரி நினைப்பது எனக்குப் பிடித்திருக்கிறது."

"தேங்க்ஸ் அவந்தி. என்னைப் புரிந்து கொண்டதற்கு தேங்க்ஸ். குட் நைட்."

"குட் நைட் சரண்."

அவன் அறையிலிருந்து சென்ற பின்பு அவன் அங்கேயே இருப்பது போல் ஒரு பிரமை அவளுக்கு. நடப்பதெல்லாம் கனவு போல் இருக்கிறது என்று தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள் அவள்.

சரணிடம் மனதில் இருந்தவற்றை எல்லாம் சொன்ன பிறகு மனம் லேசானது போல் உணர்ந்தாள் அவள்.

சீக்கிரமே அப்பா விடுதலைக்கு சரண் உதவி செய்வான் என்ற நம்பிக்கை அவள் மனதில் ஆழமாகப் படிந்ததால் நிம்மதியாகத் தூங்கினாள் அவள்.



அடுத்த நாள் வெயில் சுள்ளென முகத்தில் பட கண் விழித்தாள் அவந்திகா.

முதலில் எங்கே இருக்கிறோம் என்று புரியாமல் மூளை முரண்டு பிடித்தது. பின்பு நேற்று நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அவள் மனதில் ஒன்றன் பின் ஒன்றாக நினைவுக்கு வந்தது.

அறைக் கதவு தட்டப்படும் சப்தம் கேட்க, உடையைச் சீர் செய்து கொண்டு கதவைத் திறந்தாள் அவள்.

"மேடம் குட்மார்னிங். சாருக்கு அவசர வேலை. இதை உங்ககிட்ட கொடுக்கச் சொன்னார்" என்று ஒரு சீட்டை அவளிடம் நீட்டினார் ஒரு பெரியவர்.

"தேங்க்ஸ்... நீங்க..." என்று இழுத்தாள்.

"நான் இங்கே சமையல்காரன் மேடம். என் பேர் முருகன். உங்களுக்கு பிரேக்பாஸ்ட் தயாரா இருக்கு மேடம்."

"ஓ... தேங்க்ஸ்... ரோஹித் கண் விழிக்கட்டும். அவனும் நானும் ஒன்றாகவே சாப்பிடுகிறோம்" என்று சொல்லியபடியே அந்த லெட்டரைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள் அவள்.

"ஹாய் டியர்... இன்று ஒரு முக்கியமான பிஸினெஸ் டீல். நான் அதனால் காலையிலேயே கிளம்ப வேண்டி உள்ளது. நீ குளித்து விட்டு ஆஃபீஸ் கிளம்பிப் போ. உனக்கு ஒரு புது உடை என் அறையின் கப்போர்டில் உள்ளது. சமையல்காரன் முருகன் உனக்கு பிரேக்பாஸ்ட் தயார் செய்து கொடுப்பார். நான் உன்னைப் பிறகு போனில் தொடர்பு கொள்கிறேன்" என்று முடிந்திருந்தது அந்த கடிதம்.

ஏனோ அவளுக்கு ஏமாற்றம் ஒரு புகைபோல் பரவியது. அவ்வளவு என்ன முக்கியமான வேலையாக இருக்க முடியும்?

சரி. ஒரு லெட்டராவது எழுதி வைத்தானே... அந்த மட்டும் அவனைப் பாராட்ட வேண்டும் என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள் அவந்திகா.

ரோஹித் கண் விழிப்பதற்குள் குளித்துவிட்டு ஆஃபீஸிற்குத் தயாராகிவிடலாம் என்று நினைத்தபடியே குளியல் அறை சென்றாள்.

குளித்த பின்பு உடலும் மனமும் புத்துணர்வு அடைந்தது போல் உணர்ந்தாள் அவள். அந்தப் புதிய உடையை எப்படி சரண் வாங்கி வைத்தான் எனக் கேட்ட படியே அந்த சல்வாரை அணிந்து கொண்டாள்.

ரோஹித் நல்ல தூக்கத்தில் ஆழ்ந்து இருந்தான். எழுப்பலாமா வேண்டாமா என யோசித்தாள் அவள். கடிகாரம் மணி ஏழரை என்று உறுதி செய்தது.

பள்ளிக்கூடம் எப்படியும் ஒன்பது மணி கிட்டேதான் இருக்கும். அதனால் இன்னும் கொஞ்சம் நேரம் தூங்கட்டும் என்று நினைத்துக் கொண்டாள் அவள்.

"மேடம் சாப்பிட வாங்க" என்றார் முருகன்.

"ம்... சரி வருகிறேன். ரோஹித் எப்ப கண் விழிப்பான்?"

"எட்டு மணிக்கிட்டேதான் கண் விழிப்பார் சின்ன ஐயா. அவர் சாக்கோஸ் தான் விரும்பிச் சாப்பிடுவார். அதில அப்படி என்னதான் சுவை இருக்கோ மேடம். தெரியலை..."



"ம்... எல்லாக் குழந்தைகளுக்குமே இப்ப இந்த மாதிரி உணவுதான் பிடிக்குது."

"வாங்க மேடம். இட்லி சூடா இருக்கு."

அவரைப் பின்தொடர்ந்தாள் அவந்திகா. டைனிங் டேபிளில் உணவுப் பதார்த்தங்கள் எல்லாம் அழகான பாத்திரத்தில் மூடி வைக்கப்பட்டு இருந்தன.

"நீங்க சாப்பிட்டீங்களா?

"இல்லை மேடம். எனக்குக் கஞ்சிதான் ஆகாரம். இன்னும் கொஞ்ச நேரம் கழித்துத்தான் குடிப்பேன். நீங்க சாப்பிடுங்க மேடம்."

பசிக்கு இட்லி, சட்னி, சாம்பார் திவ்யமாக இருந்தது. கடகடவென சாப்பிட்டாள் அவள்.

"குட்மார்னிங் ஆன்ட்டி."

"ஹாய் ரோஹித் குட்மார்னிங். பிரஷ் செய்திட்டியா?"

"ம்... அதுதான் முதல் வேலை. இல்லாவிட்டால் அங்கிள் என்னைக் கோபிப்பார்."

"ஓ... அப்படியா? இட்ஸ் எ குட் ஹாபிட். அதுதான் அங்கிள் அப்படிச் சொல்கிறார்."

"கரெக்ட். அங்கிள் எங்கே?"

"ம்... ஏதோ முக்கிய வேலை என்று சொன்னார். அதனால் காலையிலேயே சென்று விட்டார்."

"நிறைய நாள் அப்படித்தான் செய்கிறார்."

"என்ன செய்வது? அவர் வேலை அப்படி. சரி சாப்பிட வா."

"எனக்கு இட்லி எல்லாம் வேண்டாம்."

"ராசா... உனக்கு சாக்கோஸ் தயாராக இருக்கு. சாப்பிடு கண்ணா" என்றார் முருகன்.

"ஓகே..." என்றபடியே சாப்பிடத் தொடங்கினான் ரோஹித்.

"எந்த ஸ்கூல்ல ரோஹித் நீ படிக்கற?"

"வித்யா கலாலயா ஸ்கூல்."

"ஓ... குட் ஒன்."

"உன் பிரெண்ட்ஸ் எல்லாம் யார்?"

"இப்ப... ஒரு பெரிய லிஸ்ட் ஆன்ட்டி. ஐ ஹாவ் லாட்."

"ஓ... அவ்வளவு பெரிசா? சரி, அப்ப சாப்பிடு."

அவன் பெரிய மனுஷன் தோரணையில் நாப்கின் பரப்பி, ஸ்பூனால் அழகாகச் சாப்பிடுவதை ரசித்தாள் அவந்திகா.

சீருடையில் சிந்தாமல் எப்படி நறுவிசாகச் சாப்பிடுகிறான் என்று வியந்தாள் அவள்.

"ரோஹித், ஒரு நாள் இட்லி ட்ரை செய்து பார். யூ வில் லைக் இட்."

"நீங்க டெய்லி நான் பிரேக்பாஸ்ட் சாப்பிடும்பொழுது வாங்க. நான் அப்ப கண்டிப்பா நீங்க சொல்றதை சாப்பிடறேன் ஆன்ட்டி."

"ஓ... இவ்வளவுதானா மேட்டர். அப்ப நான் கண்டிப்பா வந்துடுவேன்."

"தேங்க்ஸ் ஆன்ட்டி."



அவந்திகா சாப்பிட்டு முடித்திருந்தாள். ரோஹித் முடிப்பதற்காக காத்துக் கொண்டு இருந்தாள்.

"ஆன்ட்டி இன்னிக்கு என்னை ஸ்கூல்ல டிராப் செய்யறீங்களா?"

"ம்... வரேன் ரோஹித். கேட் வரைக்கும் தானே. க்ளாஸ்ல என்னைச் சேர்க்க மாட்டாங்க."

அவன் அதைக் கேட்டுச் சிரித்தான்.

"என் ஃபிரண்ட்ஸ் எல்லாத்தையும் அவங்க அம்மாதான் டிராப் செய்வாங்க. எனக்கும் ஆசையா இருக்கு. அதான்" என்றான் மெல்லிய குரலில்.

"ஓ... இவ்வளவுதானே. டோன்ட் ஒரி. ஐ வில் டிராப் யூ. நீ உன் ஃபிரண்ட்ஸ் கிட்ட ஜாலியா கதை அடி இன்னிக்கு."

## 19

உன்னுடன்
பேசிய
நாட்களை
அசைபோடுகிறேன்
நான்!
காலம்
இப்பொழுது
மாறிவிட்டது!
நாம்
சந்தித்துப்

பேசும்
இடத்தில்
ஒரு
அடுக்ககம்
முளைத்து
விட்டது!
நம்
காதல்
முளைத்த
இடத்தில்
சமாதி
கட்டிவிட்டார்கள்!

**ரோ**ஹித்தை ஸ்கூலில் விட்ட பின்பு ஆபீஸிற்கு வந்தாள் அவந்திகா.

"ஹாய் அவந்தி."

"ஹலோ சார்லஸ் குட்மார்னிங்."

"உன்னோட அந்த பிராஜெக்ட் ரொம்ப நல்லா வந்திருக்கு. நான் முழுமையாக செக் செய்திட்டேன். இட்ஸ் தி பெஸ்ட் ஒன் யூ ஹாவ் டன். சரண் என்பதால் ஸ்பெஷல் வொர்க், ஸ்பெஷல் கவனிப்பு... அப்படித்தானே?"

"ஓ... கமான் சார்லஸ். நீங்க இப்படிச் சொல்லக்கூடாது. நான் எல்லாப் பிராஜெக்டிற்கும் ஒரே மாதிரி முக்கியத்துவம்தான் கொடுக்கிறேன். இந்த



பிராஜெக்டிற்கும் நான் அதே மாதிரிதான் டிஸைன் செய்தேன்" என்று படபடத்தாள் அவள்.

"எனக்கு உன்னைப் பற்றித் தெரியும் அவந்தி. நான் சும்மா கிண்டல் அடித்தேன். இதை எல்லாம் சீரியஸாக எடுத்துக் கொள்ளக்கூடாது நீ."

"ம்... ஸாரி சார்லஸ். நான் கொஞ்சம் படபடவென பேசிவிட்டேன்."

"இட்ஸ் ஓகே. ஐ நோ யூ ஆர் ஸென்ஸிடிவ்."

"சரி சார்லஸ். நான் ஈமெயில்ஸ் எல்லாம் செக் செய்துவிட்டு வருகிறேன்."

"ஓ... ஷ்யூர்."

தன் இருக்கைக்கு வந்து கணினியை உயிர்ப்பித்தாள் அவள். ஈமெயில்களில் முக்கியமானவற்றுக்கு எல்லாம் பதில் மெயில் அனுப்பினாள்.

"மேடம்... உங்களுக்கு ஒரு ரெஜிஸ்தர் போஸ்ட் வந்திருக்கு. போஸ்ட்மேன் வெளியில் இருக்கிறார்" என்று பியூன் சொல்ல, இருக்கையில் இருந்து எழுந்தாள் அவள்.

'யாராக இருக்கும்?' என்று முணுமுணுத்தபடியே நடந்தாள் அவள்.

போஸ்ட்மேன் நீட்டிய இடத்தில் கையெழுத்துப் போட்டு விட்டு அந்த ரிஜிஸ்தர் தபாலை வாங்கிக் கொண்டாள்.

தன் இருக்கைக்குச் சென்றவள் அதைக் குழப்பமாகப் பிரித்தாள். உள்ளேயிருந்து ஒரு சின்னத் துண்டுக் கடிதம் விழுந்தது.

கையெழுத்தைப் பார்த்தவுடன் அது அப்பாவின் கையெழுத்து என்று அவளுக்குப் புரிந்தது. பதட்டத்தில் அவள் நெற்றியில் வியர்வைப் பூக்கள் பூத்தன.

'அவந்திகா... இந்தக் கடிதத்துடன் ஒரு பென் டிரைவ் இருக்கு. அதில் நான் குற்றவாளி இல்லை என்பதற்கான ஆதாரம் இருக்கு. இதை நீ போலீஸிடம் ஒப்படைக்க வேண்டாம். பட் பத்திரமாக யாரிடமாவது நீ ஒப்படைக்க வேண்டும். அந்த முடிவை நான் உன்னிடம் விட்டு விடுகிறேன். உடம்பைப் பத்திரமாகப் பார்த்துக் கொள். நன்றாகச் சாப்பிடு. நான் இங்கே நன்றாக இருக்கிறேன். அன்புடன் அப்பா' என்று முடிந்திருந்த அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்தவுடன் அவள் கண்கள் கலங்கின.

"அப்பா... அப்பா..." என்று அவள் உதடுகள் முணுமுணுத்தன.

தன்னைச் சமாளித்துக் கொண்டு அடுத்து என்ன செய்வது என்று யோசிக்கத் தொடங்கினாள் அவள்.

இதை யாரிடம் கொடுக்கலாம் என்று நினைத்தபொழுது உடனே அவள் மனதில் தோன்றியது சரணின் முகம்தான்.

சரண்தான் இதற்கு ஏற்ற ஆள். அவனுக்கு நிறைய ஆட்களைப் பழக்கம். குறிப்பாகப் போலீஸ் டிபார்ட்மெண்டில்.

அதனால்தான் நன்னடத்தைப் பெற்ற கைதிகளுக்கு அவனால் வேலை வாய்ப்பு அளிக்க முடிகிறது. அதோடு சலீம் இங்கேதான் இருக்கிறான்.

இப்ராஹிமும் இங்கே இருந்தாலும் இருக்கலாம். அவர்களுக்கும் போலீஸுக்கும் தொடர்பு இருந்தாலும் இருக்கும்.



அதனால் நான் நேரடியாக இதில் தலையிடாமல் இருப்பதுதான் நல்லது. சரணிடம் விஷயத்தைச் சொல்லி விடலாம். மற்றதை அவன் பார்த்துக் கொள்வான் என்று தீர்மானித்தாள். கைபேசியின் மூலம் அவனைத் தொடர்பு கொண்டாள் அவந்திகா.

"யெஸ் அவந்தி, சொல்."

"ம்... நான்... உங்ககிட்டே பேசணும்."

"ம்... இப்ப என்ன செய்றதா நினைப்பு உனக்கு?"

"ஐயோ நான் அப்படிச் சொல்லவில்லை. சீரியஸா பேசணும்."

"சொல் அவந்தி! ஏதேனும் பிரச்சனையா?"

"ம்... பிரச்சினை இல்லை. நல்ல செய்திதான்."

"சொல் அவந்தி!"

"அப்பாவிடம் இருந்து ஒரு கடிதம் வந்திருக்கு."

"சரி... நீ போனில் ஏதும் பேச வேண்டாம். நீ இப்ப எங்கே இருக்கிறாய்?"

"ஆஃபீஸில்தான்."

"சரி... ஒரு பத்து நிமிஷம் டைம் கொடு. ஐ வில் பி தேர்."

"ஓகே சரண்."

"நீ வேறு யாரிடமும் இதைப் பற்றிப் பேசாதே. உன் இடத்திலேயே இரு. வேறு எங்கும் வெளியே போகாதே."

"சரி சரண்."

அவன் இணைப்பைத் துண்டித்து விட்டான் என்று புரிந்தது அவளுக்கு. அவனின் முன் ஜாக்கிரதை உணர்வு அவளுக்குப் பிடித்தது. ஆனால் அவன் குரலில் தெரிந்த பதட்டம் அவளையும் தொற்றிக் கொண்டது. ஏன் சரண் குரல் அவ்வளவு பதட்டமாக இருந்தது.

அவனால் இந்தப் பென் - டிரைவைப் பத்திரமாக ஒப்படைக்க முடியுமா என்று ஒரு சந்தேகம் அவள் மனதின் மூலையில் எட்டிப் பார்த்தது.

யோசனையில் மூழ்கி இருந்தவளைக் கலைத்தது சரணின் குரல்.

"ஹாய் அவந்தி."

"ஹலோ சரண்!"

"என்ன கடிதம் அது?"

"இதுதான். இன்னிக்கு ரிஜிஸ்தர் தபாலில் வந்தது. இதில் ஒரு பென்-டிரைவும் இருக்கிறது" என்று கவரை அவனிடம் நீட்டினாள் அவள்.

"சரி அவந்தி!"

"பத்திரம் சரண்."

"என் மேல் நம்பிக்கை இல்லையா?"

"அப்படி இல்லை. அப்பா இதை எப்படி அனுப்பினார் என்று தெரியவில்லை. ஆனால் கண்டிப்பாக ரொம்பக் கஷ்டப்பட்டுத்தான் அனுப்பியிருப்பார். அவர் விடுதலை யாவது இதில்தான் அடங்கி உள்ளது. அதனால்தான் சொன்னேன்" என்று சொல்லும்பொழுதே அவள் கண்கள் கலங்கின.



"ஏய்... உன்னைக் காட்டிலும் எனக்கு அக்கறையும் பொறுப்பும் இதில் அதிகம். அதனால் மனதைப் போட்டு குழப்பிக்காதே. பயப்படாமல் இரு. நான் கிளம்பறேன்."

"சரி..." என்று முனகினாள்.

"அப்புறம் இந்த விஷயத்தை யாரிடமும் சொல்லாதே. இட்ஸ் ஃபார் அவர் குட் ஒன்லி."

"சரி..." என்று முனகினாள் அவந்திகா.

அவன் வெளியே போவதைப் பார்த்தபடியே இருந்தாள் அவள். ஏனோ மனதில் ஒரு பதட்டம் தோன்றியது.

எல்லாம் நல்லபடியாக முடிய வேண்டும் என்று அவள் மனதிற்குள் பிரார்த்தித்தாள். அவனிடமிருந்து போன் கால் வரும். அப்பா சீக்கிரமாக விடுதலையாகி விடுவார் என்ற நம்பிக்கைப் பூக்கள் அவள் மனதில் பூத்தன. கணினியில் வேலையைத் தொடர்ந்தாள் அவள்.

"என்ன அவந்தி... சரண் வந்திருந்தார் போல" என்று சார்லஸ் குரல் கேட்க, கணினியில் இருந்து பார்வையை எடுத்தாள் அவள்.

"ம்... ஆமாம். ப்ராஜெக்ட் எந்த அளவில் முன்னேறி இருக்கிறது என்று பார்ப்பதற்கு வந்திருந்தார்" என்று மழுப்பினாள் அவள்.

"ஓ... குட். ஏதாவது மாற்றங்கள் சொன்னாரா?"

"இ... இல்லை. ஐ திங்க் ஹி இஸ் ஹாப்பி."

"தட்ஸ் நைஸ்."

"இந்த வேலை முடிந்து விட்டதால் நான் உனக்கு இன்னொரு வேலை அசைன் செய்யப் போறேன்."

"ஓ... ஐயாம் ரெடி. பட் நான் லீவ் எடுத்தாலும் எடுப்பேன் நெக்ஸ்ட் வீக். பரவாயில்லையா?"

"இட்ஸ் ஓகே. இது ரொம்ப அர்ஜெண்ட் கிடையாது. அதோடு சரண் மாதிரி டாப் கஸ்டமரும் இல்லை."

"ம்... பட்... எ கஸ்டமர் இஸ் எ கஸ்டமர். நான் அப்படித்தான் ட்ரீட் செய்வேன்."

"ஓ... ஸாரி. நான் மறுபடியும் அந்த ஸென்ஸிடிவ் டாபிக்கை டச் செய்யறேன் இல்ல அவந்தி" என்றான் புன்முறுவலோடு சார்லஸ்.

"ம்..."

"ஏன் டல்லா தெரியற? எனிதிங்க் பாதரிங் யூ?"

"ஓ... அதெல்லாம் ஒன்றும் இல்லை. ஏனோ டயர்டா இருக்கு."

"ஓ... அப்படியா? மே பீ யூ நீட் எ பிரேக். தொடர்ந்து மாற்றி மாற்றி பிராஜெக்ட் இருப்பதால் ஓய்வு எடுக்கவோ லீவ் எடுக்கவோ வாய்ப்பே இல்லை. ஸாரி, ஐயாம் எ பேட் பாஸ். வெரி ஸாரி அவந்தி."

"ஓ... நோ அப்படி எல்லாம் இல்லை. நான் வீட்டுக்குக் கிளம்பவா ப்ளீஸ்."

"கேரி ஆன் அவந்தி. நீ ரெஸ்ட் எடுத்து விட்டு மெதுவாக வரலாம். ஒரு வாரம் கூட லீவ் எடுத்துக் கொள். ஐ டோண்ட ஹாவ் எ பிராப்ளம்."

"தேங்க்ஸ் சார்லஸ். நான் லீவ் எடுப்பேன் என்றுதான் நினைக்கிறேன். உங்களுக்கு போன் செய்து சொல்கிறேன்."

"நோ ப்ராப்ளம் அவந்தி. டேக் கேர்."



ஆஃபீஸில் இருந்த கிளம்பியவள் சரணை உடனே தொடர்பு கொண்டாள்.

ஆனால் 'நீங்கள் தொடர்பு கொள்ளும் வாடிக்கையாளர் தொடர்பு எல்லைக்கு வெளியே இருக்கிறார்' என்ற மெஸேஜே திரும்பத் திரும்ப ஒலித்தது.

தன் அறைக் கதவைத் திறந்தாள் அவள். கைபேசி சிணுங்க ஆவலுடன் அதை எடுத்தாள். சரணாக இருக்கும் என்று நினைத்தவள் ஏமாந்தாள்.

ஆனால் 'மஞ்சு' என்று செல்போன் திரையில் தெரியக் கண்டு மனம் மகிழ்ந்தது.

"சொல் மஞ்சு, எப்படி இருக்க. ஊட்டியில்தானே இருக்க?"

"கல்யாண ஏற்பாடெல்லாம் நல்லா நடக்குது அவந்தி. இன்னும் ஒரு வாரம் சென்னையில்தான் இருப்பேன். நிறைய ஷாப்பிங் செய்ய வேண்டி இருக்கு. அதுக்கெல்லாம் சென்னைதான் சரியான இடம். இப்பகூட அசோக்கோடுதான் தி.நகர்ல இருக்கேன். ஷாப்பிங் முடிந்த பின்பு அங்கேதான் வருவேன். எப்படியும் நைட் ஆகும்னு நினைக்கறேன். டின்னர் நாம வெளியே போய் சாப்பிடலாம்... சரியா?"

"ஓ... சரி மஞ்சு. வா சீக்கிரம். ஐ மிஸ் யூ."

"ஏய்... என்ன இப்படி டல்லா இருக்க? எனி ப்ராப்ளம்?"

"இல்லை... மஞ்சு. நீ வீட்டுக்கு வா. பேசலாம். நோ பிராப்ளம்."

"தட்ஸ் நைஸ். பை அவந்தி."

மஞ்சுவிடம் பேசிய பின்பு மனம் லேசானது போல் உணர்ந்தாள் அவள். மஞ்சுவிடம் நடந்ததை எல்லாம் சொல்லிவிடுவது எனத் தீர்மானித்தாள்.

சரணிற்குத் தெரிந்தால் கோபிப்பான். பட் இட்ஸ் ஓகே. அவனைச் சமாளித்துக் கொள்ளலாம். இல்லாவிட்டால் ஏனோ மூச்சு முட்டுவது போல் ஒரு உணர்வு மனதை அழுத்துகிறது.

எனக்கென்று இருப்பது ஒரே ஒரு தோழிதான். அவளிடம் மறைப்பது சரியில்லை. அதோடு மஞ்சுவிற்கு அப்பாவைப் பற்றி எல்லாம் தெரியும்.

என்னுடைய கஷ்டமான நேரங்களில் எனக்கு ரொம்பத் துணையாக இருந்திருக்கிறாள் அவள்.

அதனால் அவளிடம் எல்லாவற்றையும் சொல்லப் போகிறேன். அப்பாவின் கடிதம் உட்பட என முடிவு செய்தாள் அவந்திகா.

## 20

ஒரு
சின்னத்
தாமரை
கோபித்து
கொண்டு
தலை
கவிழ்ந்து
இருக்கிறது!



நீ
தலை
குனிந்து
கேட்கிறாய்!
நான்
சொன்ன
கவிதையை!
அப்பொழுது
நான்
நினைக்கவில்லை!
தாமரை
என் கைவசம்
வராது என்று!

கைபேசி மீண்டும் சிணுங்கியது.

"ஹலோ அவந்திகா."

"அவந்திகா... நான் தாரிணி பேசறேன். எனக்கு இன்னிக்கு முக்கியமான வேலை ஒன்று இருக்கு. அதனால் உன்னோடு வீட்டுக்கு வரமுடியாது. ஐயாம் ஸாரி. தப்பா நினைச்சுக்காதே ப்ளீஸ்... சரண் அத்தான்கிட்டே என்னைப் போட்டுக் கொடுத்திடாதே" என்றாள் கெஞ்சலான குரலில்.

"ஓ... பரவாயில்லை. என் பிரண்ட் மஞ்சு வருகிறாள். அதனால் எனக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. சரணிடம் நான் எதுவும் சொல்ல மாட்டேன். அப்புறம் அவரைத்

தொடர்பு கொள்ளவே முடியவில்லை. உங்களிடம் இன்று பேசினாரா அவர்? நான் ரொம்ப நேரமாக அவரை மொபைலில் ரீச் செய்யப் பார்க்கிறேன். ஆனால் முடியவில்லை."

"ம்... சில நேரம் ரொம்ப முக்கியமான மீட்டிங்காக இருந்தால் சரண் அத்தான் அப்படித்தான் செய்வார். கவலைப்பட வேண்டாம். அவராக உங்களைத் தொடர்பு கொள்வார்."

"தேங்க்ஸ்..."

"பை டேக் கேர் அவந்தி."

அப்படி என்ன முக்கியமான வேலையாக இருக்கும் சரணிற்கு. அப்பா சம்பந்தப்பட்ட வேலையா, இல்லை... பிஸினெஸ் சம்பந்தப்பட்டதா?

சே... மனம் ஏன் இப்படி நிலை இல்லாமல் தவிக்கிறது என்று தன்னையே கடிந்து கொண்டாள் அவள்.

யோசனையில் மூழ்கி இருந்தவளைக் கலைத்தது காலிங் பெல் சத்தம். கைக்கடிகாரம் மணி ஆறு என்று உறுதி செய்தது.

இவ்வளவு நேரமாக ஏதும் செய்யாமல் சரணை தொடர்பு கொள்வதிலேயே நேரத்தைச் செலவு செய்து விட்டேனே! கைபேசி பட்டனை அழுத்தி அழுத்தி விரல் வலிப்பதுதான் மிச்சம் என்று பெருமூச்சு விட்டாள் அவள்.

பின்பு கதவைத் திறந்தாள்.

"ஹாய் அவந்தி..." என்று உற்சாகமாக உள்ளே நுழைந்தாள் மஞ்சு.



"வாடி மஞ்சு. முகத்திலே கல்யாணக் களை தெரியுது. குட் டு ஸீ யூ அகெய்ன்."

"ஏய்... கல்யாணக் களை எல்லாம் இல்லை. பியூட்டி பார்லர் போயிருந்தேன். மூலிகை ஃபேஷியல்... அதுதான் என் முக எழிலின் ரகசியம்" என்றாள் நாடக பாணியில் மஞ்சு.

அதைக் கேட்ட அவந்திகாவிற்கு சிரிப்பு வந்தது.

"ம்.... இப்ப உன் பெற்றோர் என்ன சொல்றாங்க மஞ்சு. தே ஆர் ஹாப்பி வித் யுவர் சாய்ஸ். அப்படித் தானே...?"

"தே ஆர் வெரி ஹாப்பி அவந்தி. அசோக் புராணத்தை இப்ப அப்பா ரொம்பவே பாடறார்ன்னா பார்த்துக்கோயேன்."

மஞ்சு தன் அப்பாவைப் பற்றிச் சொன்னவுடன் ஏனோ அவந்திகாவின் முகம் வாடியது. அப்பாவின் நினைவு அவள் மனதை ஆக்ரமித்தது.

"ஏய்... என்ன அவந்தி? முகம் சட்டுன்னு வாடுது. என்னடி ஆச்சு?"

"ம்... ஒண்ணும் இல்லை."

"நீ ஒண்ணும் இல்லை என்று சொல்றதில இருந்தே தெரியுது, ஏதோ இருக்கு அப்படின்னு. சொல் அவந்தி."

அவந்திகாவின் கண்கள் கலங்கின.

"ஏய்... என்னடி இது? சலீமால ஏதாவது ப்ராப்ளமா? சொன்னாத்தானேடி தெரியும்?" என்று அவள் தோளி ஆதரவாகக் கைபதித்தாள் மஞ்சு.

கண்களில் தேங்கி இருந்த கண்ணீர் வேகமாக வழியத் தொடங்கியது. அவளிடமிருந்து ஒரு விம்மல் வெடித்தது.

"ஏய்... என்ன இது?" என்று அவளை அணைத்தாள் மஞ்சு.

"ஸாரிடி. கல்யாணக் கனவில் இருக்கும் உன் மூடை நான் கெடுத்து விட்டேன்" என்று சொல்லியபடியே கண்களைத் துடைத்துக் கொண்டாள் அவந்தி.

"அதெல்லாம் இருக்கட்டும். உனக்கு என்ன பிரச்சினை? அதைச் சொல்."

நடந்ததை எல்லாம் மஞ்சுவிடம் ஒன்று விடாமல் சொன்னாள் அவந்தி.

"ஓ... இவ்வளவு சந்தோஷமான விஷயம் எல்லாம் நடந்திருக்கு. நீ ஏன் என்னிடம் சொல்லலை. காதல் வந்தவுடன் என்னை மறந்திட்டப் பார். எல்லா விஷயமுமே மனசுக்கு சந்தோஷமாகத்தானேடி நடக்குது. நீ ஏன்டி இப்படி அழுது வடியற? அதுதான் எனக்குப் புரியலை. சரண் இஸ் எ நைஸ் பெர்ஸன். என்ன கவலை உனக்கு?"

"அப்பா அனுப்பிய கடிதமும் பென்-ட்ரைவும் நான் சரணிடம் காலையில் கொடுத்து விட்டேன். ஆனால் அவர் இன்னும் ஒரு போன்கூட செய்யவில்லை. ஏனோ படபடப்பாக இருக்கிறது மஞ்சு. அப்பா குற்றமற்றவர் என்று நிரூபிக்க அந்த ஒரு ஆதாரம் தான் இருக்கு. அதுக்கு எதுவும் ஆபத்து ஏற்படக்கூடாது. அதுதான் மனசுக்குக் கவலையா யிருக்கு."

"ஓ... கூல் டவுன் அவந்தி. சரண் இஸ் எ ரெஸ்பான்சிபில் பெர்ஸன். நீ பொறுப்பானவரிடம்தான்



அதை ஒப்படைத்து இருக்கிறாய். மனதைக் குழப்பிக்காதே. இன்று வரை பார்த்துவிட்டு, அவரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை என்றால் நாளைக்குக் காலையில பேசாமல் அவர் வீட்டுக்குப் போய் பார்த்துவிட்டு வாயேன்."

"சரிடி, மஞ்சு... உன்கிட்டே சொன்ன பிறகு மனம் லேசாகி விட்டது போல் தோன்றுகிறது எனக்கு."

"தட்ஸ் குட். வா, டின்னர் சாப்பிடப் போகலாம்."

அதற்குப் பின்பு அஞ்சு, அவந்திகாவை வேறு எந்த யோசனையிலும் மூழ்க விடாமல் ஏதேதோ தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தாள்.

டின்னர் சாப்பிட்டு மீண்டும் அறைக்கு வரும்பொழுது மணி ஒன்பதைக் கடந்து விட்டு இருந்தது.

மஞ்சுவிடம் நடந்ததை எல்லாம் சொன்னதாலோ என்னவோ மனம் லேசாகியிருந்ததால் அவந்திகாவை தூக்கம் உடனே ஆட்கொண்டது.

அடுத்த நாள் தனக்கு ஏற்படப் போகும் அதிர்ச்சியைப் பற்றி ஏதும் தெரியாமல் அமைதியாகத் தூங்கிக் கொண்டு இருந்தாள் அவள்.

இன்பமும் துக்கமும் மாறி மாறி வருவதுதான் வாழ்க்கை. ஆனால் அவந்திகாவின் வாழ்க்கையில் இன்பங்களை விரல் விட்டு எண்ணிவிடலாம்.

அடுத்த நாள் காலை விடியல் வழக்கமான ஒன்றாக இருந்தது பலருக்கு. அவந்திகாவிற்கு அப்பொழுது தெரியாது அந்த நாள் தன்னால் மறக்க முடியாத அதிர்ச்சிகளைப் புதைத்து வைத்துக் கொண்டு இருக்கிறது என்று.

"குட்மார்னிங் அவந்தி. சூடா காப்பி இருக்கு பார்."

"ஏய்... என்னை எழுப்பியிருக்க வேண்டியதுதானே. நீ ஏன் அடுப்படியில நிக்கற."

"இட்ஸ் ஓகே. அசோக் வீட்டில எல்லாரும் நல்லா வக்கணையாச் சாப்பிடுவாங்க. எப்படியும் சமையலுக்கு ஆளுங்க இருப்பாங்க. இருந்தாலும் சிலதெல்லாம் நானே சமைக்கலாம் அப்படின்னு முடிவு செய்திருக்கேன்."

"எதெல்லாம் மஞ்சு? வெந்நீர், அப்புறம் இட்லி, அப்புறம் காப்பி, தேநீரா?" என்றாள் சிரிக்காமல் அவந்திகா.

"ஏய்... அடி கிடைக்கும். காப்பியை குடி முதல்ல. அப்புறம் சரண் வீட்டுக்குக் கிளம்பற வழியைப் பார்."

"சரி மஞ்சு."

"பதட்டப்படாதே அவந்தி. எல்லாம் நல்லபடியா நடக்கும்."

"தேங்க்ஸ்டி மஞ்சு. இன்னிக்கு என்ன ஷாப்பிங் அசோக்கோடு."

"கொஞ்சம் நகை எல்லாம் வாங்க வேண்டி இருக்கு. இன்னிக்கு அதெல்லாம் தான் வாங்கணும்."

"ஓ... குட். நீ திருமணத்திற்கு அணியப் போகிற சேலை, அப்புறம் ரிசப்ஷன் உடைக்கு ஏற்ற மாதிரி வாங்கிக் கொள் மஞ்சு."

"நானும் அப்படித்தான் நினைச்சிருக்கேன் அவந்தி."

"சரி... நான் போய் குளிச்சுட்டு வந்திடறேன் மஞ்சு."

குளிக்கப் போன தோழியை நினைத்தபடியே பெருமூச்சு விட்டாள் மஞ்சு. பாவம் அவந்தி, இனியாவது



அவள் வாழ்வில் தென்றல் வீசட்டும். ரொம்பக் கஷ்டப்பட்டு விட்டாள் அவள். 'கடவுளே, இனியாவது அவளுக்கு நிம்மதியைக் கொடு' என்று மனதிற்குள் வேண்டினாள் அவள்.

குளித்துவிட்டு நீல நிறப் புடவை ஒன்றை அணிந்து கொண்டாள் அவந்திகா.

"வாவ்... எந்த ஒப்பனையும் இல்லாமல் சும்மா தேவதை மாதிரி ஜொலிக்கற அவந்தி."

"போதும்டி, கிண்டல் செய்யாதே. நீ கிளம்பலையா?"

"அசோக் இங்கே வந்து அழைச்சிட்டுப் போறேன்னு சொன்னான். வரும்பொழுது வரட்டும்."

"சரி... நான் பிரேக்பாஸ்ட் ரெடி செய்யறேன்."

"நான் அதை எல்லாம் முடிச்சுட்டேன் மேடம். இட்ஸ் ஆல் ரெடி."

"ம்... அசோக் உன் மேல ஏதோ மந்திரக் கோல் வைத்து மந்திரம் செய்து விட்டான் போல. என்ன வெல்லாமோ செஞ்சு அசத்தறியே மஞ்சு?"

"போடி" என்று அசடு வழிந்தாள் மஞ்சு.

அவள் செய்து வைத்து இருந்த உப்புமாவை சாப்பிடத் தொடங்கினாள் அவந்திகா.

"நாட் பேட் மஞ்சு. நிஜமாலுமே நல்லா இருக்கு."

"தேங்க்ஸ்டி."

"உப்புமாவிற்கு சர்வதேச அளவிலே சுவையான உணவு என்று பரிசு கிடைச்சிருக்கு. பேப்பரில் வந்து இருந்தது, நியூஸ் பார்த்தியா?"

"ம்... பார்த்தேன். அதுக்கப்புறம்தான் இந்த உப்புமா மேல் ஆசை அதிகமானது."

"அதானே பார்த்தேன். என்னடா திடீர்னு நீ இப்படி உப்புமாவைச் செய்கிறாயே என்று... சர்வதேச அளவில் வந்ததாலே தான் உனக்கு உப்புமா மேல காதல். கேரி ஆன்."

"என்ன இருந்தாலும் அசோக் மேல் இருக்கும் காதல் உப்புமாவை விடக் கொஞ்சம் கூடுதல். அதை நான் மாற்றிக் கொள்ள மாட்டேன்."

"நல்ல காலம் அசோக் தப்பித்தார். சரிடி, நான் கிளம்பறேன்."

"ஓகே. டேக் கேர். எனக்கு போன் செய்."

"சரி..."

அவந்திகா ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்தாள். ஸ்கூட்டியில் போகும்பொழுது அவள் மனம் மீண்டும் ஏனோ கலக்கமாக இருந்தது.

சரணிற்கு அப்படி என்ன முக்கிய வேலையாக இருக்கும்? ஒரு போன்கூட செய்ய முடியாத அளவில் என நினைத்தபடியே ஸ்கூட்டியைச் செலுத்தினாள்.

சரணின் வீட்டில் ஸ்கூட்டியை நிறுத்திவிட்டு காலிங் பெல்லை அழுத்தினாள். கதவைத் திறந்தது சமையல்காரர் முருகன்.

"வாங்க மேடம்."

"சரண் சார் இல்லையா?"

"அவர் இல்லை மேடம். அவசர வேலையாக வெளியே போவதாகச் சொன்னார். நேற்று மதியம் கிட்டே



போனவர். இன்னும் வரவில்லை. ரோஹித் தம்பிதான் பாவம் மேடம். ரொம்ப டல்லாயிட்டார்."

"ஓ... அப்படியா? ரோஹித் எங்கே?"

"தம்பி தூங்கறார் மேடம். அவர் ரூமிலேதான் இருக்கார் மேடம்."

"சரி... நான் போய் பார்க்கறேன்."

"மேடம், ஒரு முக்கியமான விஷயம். ஸார் ஒரு லெட்டர்... அவர் ரூமிலே கப்போர்ட் மேல வச்சிருக்கார். நீங்க வந்தால் கொடுக்கச் சொன்னார். ஸாரி மேடம்... வந்தவுடனே சொல்லியிருக்கணும். மறந்திட்டேன்."

"பரவாயில்லை... நான் பார்த்துக்கறேன்."

சரணின் அறையினுள் நுழைந்தாள் அவள். கப்போர்ட் மேலே லெட்டர் எதுவும் அவள் கண்ணில் படவில்லை.

ஒருவேளை கப்போர்ட் உள்ளே இருக்குமா என நினைத்தபடி கப்போர்டைத் திறந்தாள். கப்போர்டின் மேல் தளத்தில் ஏதேனும் இருக்குமா என ஆராய்ந்தவள் கையில் பட்டது ஒரு போட்டோ.

அதை வெளியே எடுத்தாள். அதைப் பார்த்தவளின் உடல் அதிர்ச்சியால் நடுங்கியது. போட்டோவில் இருந்தது சரண்.

போலீஸ் உடுப்பில் இருந்த அவன் பரிசு வாங்குகிறான். பரிசை அவனுக்கு அளிப்பது சலீமின் அப்பா.

அவள் அதிர்ச்சியில் உறைந்தாள்.

## 21

*நீயும்*
*நானும்*
*இணைந்து*
*செல்கிறோம்!*
*நமக்கென*
*ஒரு*
*புதிய*
*உலகம்*
*காத்திருக்கிறது!*
*பூக்களால்*
*நெய்த*
*வீடு!*
*அமுதைக்*
*கொடுக்கும்*
*ஓடை!*
*வானவில்*
*கூரை*
*நமக்காகக்*
*காத்திருக்கிறது!*
*வா*
*போகலாம்!*



அந்த போட்டோவை மீண்டும் பார்த்தவளுக்கு எல்லாமே புரிந்தது. சரண் இஸ் எ போலீஸ் ஆபீஸர்.

அவனுடைய உயர் அதிகாரிதான் இப்ராஹிமின் அப்பா. ஸோ, சரண் திட்டமிட்டுத் தன்னை ஏமாற்றியிருக்கிறான் என்று அவளுக்குப் புரிந்தது.

கடவுளே! அப்பாவின் நிலைமை என்னவாகும்? சரண் கண்டிப்பாக அவன் உயர் அதிகாரிக்குத்தான் பரிந்து பேசுவான். சே... எதுவுமே தெரியாதது போல் என்னிடம் நடந்து கொண்டானே. திட்டமிட்டு எல்லாமே நடந்திருக்கிறது.

நான்தான் இதில் வடிகட்டின முட்டாள் போல் ஏமாந்து விட்டேன். அப்பா கஷ்டப்பட்டு சேகரித்த ஆதாரம் வீணாகிப் போய் விட்டதே!

துடித்தது அவள் மனம். இனி என்ன செய்வது என்று புரியாமல் மூளையும் உடலும் மரத்துப் போய் நின்றாள் அவள்.

இனி நேரத்தை வீணடிக்கக் கூடாது. அப்பாவை எப்படியாவது காப்பாற்ற வேண்டும். அவரைப் பார்த்து நடந்ததைச் சொல்ல வேண்டும்.

தன் உடலில் உள்ள சக்தி எல்லாம் வெளியேறி விட்டது போல் உணர்ந்தாள் அவள். இல்லை... நான் என் மன உறுதியை இழந்துவிடக் கூடாது.

அப்பாவைக் காப்பாற்றுவது தான் என் முக்கிய வேலை எனத் தீர்மானித்தாள் அவள்.

அங்கிருந்து வேகமாக வெளியேறினாள் அவள். ஸ்கூட்டியை எப்படி ஓட்டிக்கொண்டு வந்தோம் வீட்டிற்கு என்று அவளுக்கே தெரியவில்லை.

வீட்டினுள் நுழைந்தவள் படுக்கையில் படுத்துக் கதறினாள். தன் துக்கத்தை எல்லாம் கண்ணீரில் கரைத்தாள் அவள்.

பின்பு தன்னைச் சமாளித்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தாள். தனக்குத் தேவையான துணிகளை ஒரு பெட்டியில் அடுக்கினாள்.

வீட்டை விட்டு வேகமாக வெளியேறினாள். கைபேசி மூலம் மஞ்சுவைத் தொடர்பு கொண்டாள்.

“மஞ்சு, நான் அவசரமாக மும்பாய் போக வேண்டி இருக்கிறது. சரண் நல்லவன் இல்லை. ஹி இஸ் எ சீட். என்னை ஏமாற்றி விட்டான்.

அவன் ஒரு போலீஸ் ஆஃபீஸர். அதுவும் அப்பாவைச் சிறைக்கு அனுப்பக் காரணமாக இருந்த சலீமின் தந்தையிடம் அவன் வேலை பார்த்து இருக்கிறான். அப்பாவைப் பற்றிய ஆதாரத்தை நான் தெரியாமல் அவனிடம் கொடுத்து விட்டேன் மஞ்சு. இப்ப அப்பாவைத் தேடிப் போகிறேன்.”

“ஏய் அவந்தி. அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வராதே. நான் வரேன் வீட்டுக்கு உடனே.”

“இல்லை மஞ்சு... ப்ளீஸ், என்னைத் தடுக்காதே.”

“ஏய்... இப்ப எங்க இருக்கடி நீ?”

“பயப்படாதே மஞ்சு. நான் கோழை மாதிரி எந்த முடிவும் எடுக்க மாட்டேன்.”

“அவந்தி... டெல் மீ. வேர் ஆர் யூ?”

“நான் அப்பாவைப் பார்க்கப் போகிறேன்.”



“ஏய்... அங்கே உனக்கு ஆபத்து ஏற்படலாம். வேண்டாம் அவந்தி...”

“இல்லை மஞ்சு. எனக்கு வாழ்க்கையில் எல்லாமே தவறாக முடிகிறது. அட்லீஸ்ட் நான் அப்பாவைச் சந்தித்துப் பேசிய பிறகாவது மனதிற்கு நிம்மதி ஏற்படுகிறதா என்று பார்க்கிறேன்.”

“அவந்தி... சரி, உன் இஷ்டம். டேக் கேர்.”

ரெயில்வே ஸ்டேஷனை அடைந்தாள் அவந்திகா. மும்பாய் செல்வதற்கான ரிசர்வேஷன் செய்வதற்காக ஒரு க்யூவில் நின்றாள். கைப்பையைத் திறந்து முன்பதிவு பாரத்தை நிரப்புவதற்காகப் பேனாவை எடுத்தாள். ஒரு வலிமையான கரம் தோள் பட்டையைப் பற்றி முன்னால் திரும்பச் செய்ய, திடுக்கிட்டுத் திரும்பினாள் அவள்.

பார்த்தவள் பதறினாள். காரணம் அங்கே சரண் நின்று கொண்டு இருந்தான்.

“வா என்னோடு” என்று அவள் கையைப் பற்றினான் அவன்.

“சே... கையை விடுங்க. உங்களைப் பற்றி எனக்கு எல்லாமே தெரிந்து விட்டது. அதனால் என்னிடம் நீங்க நடிக்க வேண்டாம். ஐ ஹேட் யூ. உங்களை மாதிரி ஒரு கேவலமான மனிதரை நான் சந்தித்ததற்காக வெட்கப்படுகிறேன். ஜஸ்ட் லீவ் மீ. நான் கொடுத்த ஆதாரங்களை என்ன செய்தீர்கள்? இப்ராஹிமின் அப்பாவிடம் கொடுத்து விட்டீர்களா? எப்படி இந்த மாதிரி உங்களால் என்னை ஏமாற்ற முடிந்தது?” என்று அவன் சட்டைக் காலரைக் கொத்தாகப் பிடித்தாள்.

அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் எல்லோரும் குசுகுசுவெனப் பேசத் தொடங்கினர். அதைப் பொருட்படுத்த வில்லை இருவரும்.

"அவந்தி... வா என்னோடு. நான் உனக்கு எல்லா வற்றையும் சொல்கிறேன்" என்று அவள் கையை விலக்க முயன்றான் அவன்.

"நான் வரவில்லை. உங்களை நம்பியது போதும்."

"அவந்தி... வா. பிடிவாதம் பிடிக்காதே" என்று அவள் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு நடந்தான்.

"விடு... என்னை. யாராவது என்னைக் காப்பாற்றுங்க."

ஒரு வயதானவர் அவர்களை நோக்கி முன்னேறினார்.

"என்ன ஸார் இது? ஏன் இந்தப் பெண்ணை வலுக்கட்டாயமாக இழுத்துக் கொடுமைப்படுத்தறீங்க?" என்றார்.

"ஐயா... நான் ஒரு போலீஸ் ஆஃபீஸர். இதைப் பாருங்க என் கார்ட்" என்று சட்டைப் பாக்கெட்டில் இருந்து ஐ.டி. கார்டை நீட்டினான்.

"ஓ... ஸாரி ஸார்."

"நீங்க நினைக்கற மாதிரி இவ குற்றவாளி இல்லை. ஷீ இஸ் மை வுட்பி. ஒரு சின்ன மிஸ் அண்டர்ஸ்டாண்டிங். அதுதான். வேற எதுவும் இல்லை."

"ஓ... அப்படியா? ஆல் தி பெஸ்ட் ஸார்" என்று குறும்பாகச் சிரித்தார் அவர்.

"என்ன இதெல்லாம்..." என்று சீறினாள் அவள்.



"நீ வா என்னோடு. நான் உன்னோடு பேச வேண்டும்" என்று சொல்லியபடியே அவளை ஒரு ஜீப்பினுள் உட்கார வைத்தான்.

"இப்ப எங்கே என்னை அழைச்சுட்டுப் போறீங்க?"

"பேசாமல் வா!"

"நீங்க சொல்வதைக் கேட்க நான் தயாராக இல்லை. நான் கொடுத்த லெட்டரும், பென்-ட்ரைவும் எங்கே?"

"அதைச் சேர்க்க வேண்டியவர்களிடம் சேர்த்து விட்டேன்."

அதைக் கேட்டவுடன் அவள் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது. ஒரு கேவல் வெடித்தது அவளிட மிருந்து.

"அவந்தி... ப்ளீஸ். நீ நினைப்பது போல் நான் இதை இப்ராஹிமின் அப்பாவிடம் ஒப்படைக்கவில்லை. உன் அப்பா இன்னும் ஒன்று அல்லது இரண்டு நாளில் விடுதலை ஆகிவிடுவார்."

"எ... என்னது? நிஜமா இது?"

"ஆமாம் அவந்தி. நான் சொல்வது எல்லாம் உண்மை. உண்மையைத் தவிர வேறு ஏதும் இல்லை."

"உங்களை நான் எப்படி நம்புவது? உங்கள் போட்டோவை நான் பார்த்தேன் சரண். நீங்கள் இப்ராஹின் அப்பாவின் கையில் இருந்து பரிசு ஏதோ வாங்கிக் கொண்டு இருந்தீர்கள். நான் அதைப் பார்த்தேன் சரண். என் மனம் எப்படித் துடித்தது என்று எனக்குத்தான் தெரியும். நான்... நான் பார்த்தது பொய்யா சரண்?"

"கண்ணால் காண்பதும் பொய். காதால் கேட்பதும் பொய். தீர விசாரிப்பதே மெய். உனக்கும் இது தெரியும் அவந்தி. அந்தப் படத்தில் இருப்பது நான்தான். கொஞ்ச நாள் இப்ராஹிமின் அப்பாவிடம் வேலை பார்த்தேன். அப்பொழுது மும்பாயில் க்ரைம் ரேட் விழுக்காடு ரொம்பவே குறைவாக இருந்தது. அதற்காக என்னைப் பாராட்டிக் கிடைத்ததுதான் அந்த விருது."

"பட்... இப்ராஹிமின் அப்பா ஒரு கிரிமினல் சரண்."

"அவர் அப்ப அப்படி இல்லை அவந்தி. சந்தர்ப்பமும் சூழ்நிலையும் ஒரு மனிதனை மாற்றி விடுகின்றன. இப்ராஹிமால் அவன் தந்தையின் போக்கே மாறிவிட்டது. நான் எல்லா இடத்திலும் திறமையாகப் பணியாற்றியதால் சி.பி.ஐ.யுடன் இணைந்து ஒரு கேஸை எடுத்து விசாரிக்குமாறு என்னிடம் சொன்னார்கள்."

"சொன்னது யார்? இப்ராஹிமின் அப்பாவா?"

"இல்லை... ஹோம் மினிஸ்டர். அதோடு சலீம் அப்பாவின் மேல் நிறைய குற்றச்சாட்டுக்கள் இருந்தன. அதனால் இந்தக் கேஸை ரகசியமாக வைத்திருக்க வேண்டும் என்று அவர் உத்தரவு போட்டு இருந்தார். அதனால்தான் நான் இதைப்பற்றி யாரிடமும் சொல்லவில்லை. குறிப்பாக உன்னிடம். இங்கே யாருக்குமே நான் துப்பறியும் இலாகாவைச் சேர்ந்தவன் என்று தெரியாது."

"ஓ... ஐ ஜஸ்ட் காண்ட் பிலீவ் இட்."

"நீ நம்பித்தான் ஆகவேண்டும், ஹனி. உன் அப்பா குற்றமற்றவர். நான் நீ கொடுத்த ஆதாரத்தின் உதவியோடு



அதை நேற்று ஹோம் மினிஸ்டருக்கு ஈமெயில் அனுப்பி உள்ளேன். நேற்று அவரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, இந்தக் கேஸின் விவரங்களைச் சொன்னேன். அவர் எல்லாவற்றையும் கவனமாகக் குறித்துக் கொண்டார். இன்னும் ஒன்று அல்லது இரண்டு நாட்களில் உன் தந்தையைக் கண்டிப்பாக விடுதலை செய்து விடுவதாக அவர் சொன்னார். இன்னும் என் மேல் நம்பிக்கை வரவில்லையா அவந்தி? எப்படி உன்னால் என்னை அந்த மாதிரி நினைக்க முடிந்தது?"

"ஐயாம் ஸாரி... அந்த போட்டோவைப் பார்த்தவுடன் என் புத்தியே வேலை செய்யவில்லை. ஐயாம் ஸாரி... சரண். உங்களுக்கு நான் யார் என்று முதலிலேயே தெரியுமா? ஐ மீன் என் அப்பாவின் கேஸைத்தான் நீங்கள் ஆராய் கிறீர்கள் என்பது தெரியுமா?"

"தெரியும். உன் அப்பா உன்னைப் பற்றிச் சொன்னார். உன் இருப்பிடம் பற்றியும் சொன்னார். அதனால் உன்னைக் கண்டுபிடித்து விடலாம் என நான் நினைத்துக் கொண்டு இருந்தேன். அப்பொழுதுதான் நீ மூலிகைப் பண்ணைக்கு வந்தாய். அதுதான் எதிர்பார்க்காத ஒன்று."

"காட்... அப்பொழுது என்னிடம் எப்படி எரிந்து விழுந்தீர்கள்... நீங்கள்?"

"சொன்னால் நம்ப மாட்டாய் அவந்தி. உன்னைப் பார்த்தவுடனேயே நான் என் மனதைப் பறிகொடுத்து விட்டேன். நான் உன் தந்தையின் கேஸை விசாரிப்பதற்காக வந்தேன். உன்னிடத்தில் மனதைப் பறிகொடுப்பது சரி

இல்லை என்று நான் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு இருந்தேன். அதனால்தான் உன்னை அப்படி எல்லாம் திட்டினேன். ஐயாம் ஸாரி."

"நிஜமா இது?"

"யெஸ் டியர்."

"அப்புறம் ஏன் என்னைப் பிரபோஸ் செய்தீர்கள்?"

"ம்... உன்னைப் பற்றித் தெரிந்து கொண்டேன். நீ இப்ராஹிமிற்காகவும், சலீமிற்காகவும் பயந்து கொண்டுதான் இங்கே, சென்னையில் இருக்கிறாய் என்று எனக்குப் புரிந்தது. அதோடு உன்னிடம் நான் பழகினால்தான் உன் தந்தை பற்றிய உண்மைகள் எல்லாம் தெரியும். அதற்காகவும் நான் உன்னோடு பழகினேன்."

"ஓ... அப்ப என் மேல் விருப்பமில்லை உங்களுக்கு... அப்படித்தானே அர்த்தம்? என் அப்பா பற்றித் தெரிந்து கொள்ளத்தானே என்னிடம் பழகினீர்கள்?"

"கரும்புத் தின்னக் கூலியா என்ன அவந்தி? எனக்கோ உன் மேல் பைத்தியம். என் வேலை நிமித்தம் நான் உன்னுடன் பழக வேண்டி இருந்தது. ஐ வாஸ் இன் க்ளவுட் நைன். உன்னை என் கண்காணிப்பிலேயே வைக்க வேண்டும் என்றுதான் உன்னை மிரட்டினேன். காண்ட்ராக்டில் கையெழுத்துப் போட மாட்டேன் என்று அடம் பிடித்தேன். ரோஹித்திற்கு நீ பாடம் சொல்லிக் கொடுக்குமாறு செய்தேன். உன்னுடன் பழகுவதற்கு நானே ஏற்படுத்திக் கொண்ட வாய்ப்புகள் இவை."

"ம்... சிவாஜி படத்தில் நடித்த ரஜினி உங்களிடம் போட்டி போட முடியாது போல... பழகிப் பார்ப்பதில்..."



"என்ன செய்வது... இந்த இளவரசியை அடைய எல்லா வேலையும் செய்ய வேண்டி இருக்கு. இவ்வளவு வேலை செய்தும் இளவரசி என்னைக் கவனிக்க மாட்டேங்கறாங்க."

"நீங்க சொல்றதை எல்லாம் நான் கவனிச்சுட்டுதான் இருக்கேன்."

"நான் சொல்வதைக் கவனிப்பதைப் பற்றி நான் சொல்லவில்லை. என்னைக் கவனிப்பதைப் பற்றிச் சொல்கிறேன்" என்றபடியே ஜீப்பை ஓரமாக நிறுத்தினான்.

"இ... இப்ப எதுக்கு ஜீப்பை நிறுத்தறீங்க?"

"கவனிப்பது எப்படி என்று நான் உனக்குச் சொல்லிக் கொடுக்கிறேன்" என்றபடியே அவள் முகத்தைத் தொட்டுத் தன் பக்கம் மெதுவாகத் திருப்பினான் அவன்.

அவள் ஏதும் சொல்லாமல் தலைகுனிந்தாள். அவள் உதடு துடித்தது. அதில் மெதுவாகத் தன் இதழ் பதித்தான் சரண்.

"சரண் ப்ளீஸ்... என் மனதில் இன்னும் குழப்பங்கள் இருக்கின்றன."

"கடவுளே... இன்னுமா?"

"ஆமாம்... ப்ளீஸ். நீங்கதான் குழப்பத்தைத் தீர்க்கணும்."

"சொல் அவந்தி?"

"மும்பாயிலும் சரி, சென்னையிலும் சரி, எப்படி நீங்கள் சரியாக நான் ஆபத்தில் மாட்டிக்கொள்ளும் பொழுது வந்து என்னைக் காப்பாற்றினீர்கள்? சலீமிடமும்

இப்ராஹிமிடமும் நான் மாட்டிக் கொள்ளாமல் தப்ப முடிந்தது உங்களால்தான். பட் ஹவ் யூ வேர் தேர் அட் தி ரைட் டைம்?"

"சலீமும் சரி, இப்ராஹிமும் சரி, நான் செட் அப் செய்த ஆட்கள். இப்ராஹிம் போல, சலீம் போல வேஷம் போட்டது சினிமா ஆர்ட்டிஸ்ட்ஸ்தான். பயணம் படம் க்ளைமாக்ஸில அந்தத் தீவிரவாதியைப் போல ஒரு ஃபிலிம் ஸ்டார் டூப் போட்டு வருவான் தானே. அதுபோலத்தான் இதுவும்..."

"பட்... ஏன் அப்படிச் செஞ்சீங்க?"

"ம்... அப்பதான் மேடமிற்கு என் மேல் அன்பு வரும். அப்பதான் நீ என்னை நம்புவாய். உண்மை எல்லாம் சொல்வாய். அதனால்தான்."

"ஓ... இவ்வளவு ப்ளான் செய்தீர்களா?"

"ம்... என்ன செய்வது... உன் மனதில் இடம் பிடிக்கத்தான் நான் இவ்வளவையும் செய்தேன். ரோஹித்திற்கு வேறு உன்னை ரொம்பப் பிடித்து விட்டது. வீட்டில் உன் புராணம்தான்."

"ஹி இஸ் எ நைஸ் பாய்."

"ஓ... அப்ப நான் நைஸ் பாய் இல்லையா?"

"பொய் சொல்லுபவர்கள் நைஸ் கிடையாது."

"உன்னை..." என்று அவள் கன்னத்தைச் செல்லமாகத் திருகினான் அவன்.

"அப்புறம் இன்னொரு சந்தேகம்."

"கடவுளே... சொல்."



"தாரிணி... உங்க உறவுக்காரப் பெண்ணா?"

"இல்லை. அவள் என்னுடைய கொலீக். உன் பொறாமையைத் தூண்டவே அவளை நான் நீ இருக்கும் பொழுது வரவழைத்தேன். அவளைப் பார்த்தவுடன் உன் முகம் போன போக்கு எனக்கு இன்னும் நன்றாக ஞாபகம் இருக்கிறது."

"இவ்வளவு தெரியுமா உங்களுக்கு."

"கற்றுக் கொடுத்ததே நீ தானே!"

"புரியவில்லை..."

"ஒரு நாள் உன் ஆஃபீஸ் வந்திருந்த பொழுது நீயும் சார்லஸும் ஏதோ சிரித்துப் பேசிக் கொண்டு இருந்தீர்கள். எனக்கு ஜிவ்வென்று கோபம் வந்தது. கஷ்டப்பட்டு என்னை அடக்கிக் கொண்டேன்."

"காட்... சார்லஸ் இஸ் மை பிரெண்ட்."

"அப்புறம் எனக்கு அது புரிந்தது."

"கடைசியாக ஒரு சந்தேகம்."

"சீக்கிரம் சொல்... பேசிப் பேசி நேரத்தை வீணடிக்க நான் விரும்பவில்லை."

"நீங்கள் துப்பறியும் இலாகாவில் இருப்பது யாருக்குமே தெரியாதா? உங்களைக் கிரிக்கெட்டராக, பிஸினெஸ் மேனாகத்தான் எல்லோருக்கும் தெரிகிறது."

"யெஸ் டியர். ரகசியமாகத்தான் இதை வைத்துக் கொள்ள வேண்டும். திருமணத்திற்கு முன்பு கூட - மஞ்சு விற்குக்கூடத் தெரியக்கூடாது."

"சரி... காட்... மஞ்சுவிடம் நான் நடந்ததை எல்லாம் சொல்ல வேண்டும். பாவம் அவள்... பதட்டப்படுவாள்."

"அவள் பதட்டப்பட மாட்டாள். நீ ஸ்டேஷனில் இருக்கிறாய் என்ற விவரத்தையே மஞ்சுதான் எனக்குச் சொன்னாள். அதனால் அவளை டிஸ்டர்ப் செய்யாதே. அவள் அசோக்குடன் ஷாப்பிங்கில் பிஸியாக இருக்கிறாள்."

"ஆஹா... என்ன ஒரு அண்டர்ஸ்டாண்டிங் உங்களுக்கு?"

"ம்... அப்பொழுதுதான் அவளும் நம்மைத் தொல்லை செய்யாமல் இருப்பாள்" என்று உல்லாசமாகச் சிரித்தான் அவன்.

அவந்திகாவும் அவன் சிரிப்பில் இணைந்து கொண் டாள். அவர்கள் வாழ்க்கைப் பயணம் இனிமையாக இருக் கட்டும் என்று நாமும் வாழ்த்தலாம்.